# திருமலைநாயக்கர் செப்பேடுகள்

# திருமலைநாயக்கர் செப்பேடுகள்

★

தொகுப்பாசிரியர்கள் :

**நடன. காசிநாதன்**, எம்.ஏ.,
இயக்குநர்

**சு. இராசகோபால்**, எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர்

**வெ. வேதாசலம்**, எம்,ஏ.,
காப்பாட்சியர்

★

வெளியீடு :

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னை - 600 113

**1 9 9 4**

முதற் பதிப்பு-1994 (500 பிரதிகள்)

த. நா. தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண் : 122

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY,
Acc No 10025
Date ... ... ...
MADRAS-28.

திருமலைநாயக்கர் செப்பேடுகள்

4177095482
காசி

தொகுப்பாசிரியர்கள் :

நடன. காசிநாதன், எம்.ஏ.,
இயக்குநர்

சு. இராசகோபால், எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர்

வெ. வேதாசலம், எம்.ஏ.,
காப்பாட்சியர்

விலை : ரூ.

தமிழ்நாடு அரசு

தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்

அச்சிடப்பட்டது.

# பொருளடக்கம்


அணிந்துரை

முன்னுரை

1. இலந்தைக்குளம் செப்பேடு ... ... 1
2. சிந்துமேட்டுப்பட்டிச் செப்பேடு ... ... 6
3. அம்மையநாயக்கனூர்ச் செப்பேடு ... ... 9
4. வெள்ளியங்குன்றம் செப்பேடு ... ... 13
5. சிறுவாலை ஜமீன் செப்பேடு ... ... 18
6. இராஜாக்காபட்டிச் செப்பேடு ... ... 23
7. அரசப்பட்டிச் செப்பேடு ... ... 26
8. தருமத்துப்பட்டிச் செப்பேடு—1 ... ... 28
9. தருமத்துப்பட்டிச் செப்பேடு—2 ... ... 31
10. தருமத்துப்பட்டிச் செப்பேடு—3 ... ... 34
11. மங்கலரேவுச் செப்பேடு ... ... 36
12. இராமநாதபுரம் செப்பேடு—1 ... ... 39
13. இராமநாதபுரம் செப்பேடு—2 ... ... 42
14. இராமநாதபுரம் செப்பேடு—3 ... ... 46
15. இராமநாதபுரம் செப்பேடு—4 ... ... 48
16. மதுரைத்தலத்து ஓதுவார் செப்பேடு ... ... 61
17. பொம்மையக்கவுண்டன்பட்டிச் செப்பேடு—1 ... ... 65
18. பொம்மையக்கவுண்டன்பட்டிச் செப்பேடு—2 ... ... 68
19. பொம்மையக்கவுண்டன்பட்டிச் செப்பேடு—3 ... ... 70

20. பொம்மையக்கவுண்டன்பட்டிச் செப்பேடு—4 ... ... 73

21. சென்னை அருங்காட்சியகச் செப்பேடு ... ... 76

22. திருகாந்தீசுவரம் செப்பேடு ... ... 78

23. திருமுருகன்பூண்டிச் செப்பேடு ... ... 81

24. சித்தரேவுச் செப்பேடு ... ... 88

25. ஒ. கோயில்பட்டிச் செப்பேடு ... ... 90

# அணிந்துரை

1995 சனவரித் திங்களில் நடைபெறவுள்ள எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி இத்துறையால் சில ஆராய்ச்சி நூல்கள் வெளிக்கொணரப் படுகின்றன. அவற்றுள் ஒன்றாக திருமலை நாயக்கர் செப்பேடுகள் என்னும் நூல் அச்சிடப்பட்டுள்ளது. கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த திருமலை மன்னர் தம் ஆட்சிக் காலத்தில் பல காரணங்களுக்காக வெளியிட்ட 25 செப்பேடுகள் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இவை இத்துறை யினுடைய அலுவலர்களாலும் மற்றும் இத்துறையின் பயிற்சி நிறுவனத்தில் பயின்ற மாணவர்களாலும் கண்டறியப் பெற்றவையாகும். சென்னை, அரசு அருங்காட்சியகம், இந்து அறநிலையத்துறை தம் பொறுப்பிலிருந்த செப்பேடு களைப் படியெடுத்துக்கொள்ள உதவி நல்கியுள்ளன. மற்றச் செப்பேடுகளுக்கு யார் யார் உதவி பெறப்பட்டது என்பது அவ்வச் செப்பேடுகள் தொடர்பான பகுதிகளிலேயே குறிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவருக்கும் எம் நன்றி. இச்செப்பேடுகள் அக்காலத்திய மக்கள் வாழ்க்கை முறை எவ்வாறு இருந்தது என்பது பற்றி அறிவதற்கு பெரும் துணையாக உள்ளன. இவை ஆராய்ச்சி யாளர்களுக்கு மிகச்சிறந்த ஆதாரங்களாக அமையும். எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் இவ்வேளையில் இவற்றை வெளியிடுவதில் இத்துறை மகிழ்ச்சி அடைகிறது.

இச்செப்பேடுகளைக் கண்டறிந்து அவற்றைப் படித்து நூலாக வெளியிடு வதற்கு உறுதுணை புரிந்த திரு. சு. இராஜகோபால், கல்வெட்டாய்வாளர் மற்றும் திரு. வெ. வேதாசலம், காப்பாட்சியர் ஆகியோருக்கும் பிழைத்திருத்தம் செய்து உதவிய திருமதி நா. மார்க்சியகாந்தி, உதவிக் கண்காணிப்புக் கல்வெட்டாய்வாளர் அவர்களுக்கும் எம் பாராட்டுக்கள்.

இந்நூலை மிகச்சறந்த முறையில் அச்சிட்டு உதவிய இத்துறையின் அச்சுப்பிரிவின் போர்மேன்கள் திரு. அ. அரங்கநாதன், திரு. மு. சீனிவாசன், அச்சுப்பிழைத் திருத்துபவர் திரு. எம். கே. குப்புசாமி, மிஷின் மைண்டர்கள் திரு. கோ. கோவிந்தன், திரு. சி. சக்திவேல், அச்சுக்கோர்ப்பாளர்கள் திரு. க. முருகேசன், திரு. மா. ஆ. சங்கர், திருமதி கோ. செம்மலர், திருமதி கோ. கீதா, திருமதி தே. சத்தியவதி, திருமதி ச. சரஸ்வதி, பைண்டர் திருமதி பா. வசந்தா, பிரிண்டர்-கம்-பைண்டர் திரு. சீ. தாமோதரன், அலுவலக உதவியர் திரு. ப. ராமதாஸ் ஆகியோர் அனைவருக்கும் எம் நன்றி.

**நடன. காசிநாதன்**
இயக்குநர்

# முன்னுரை

தென்னிந்தியாவை ஆண்ட பெருமை படைத்த பேரரசுகளில் விசயநகரப் பேரரசும் ஒன்றாகும். இதன் வரலாற்றுச் சிறப்பு பற்றிப் பல வரலாற்றாசிரியர்கள் விரிவாக எடுத்துரைத்திருக்கின்றார்கள். எஸ். கிருட்டிணசுவாமி அய்யங்கார்[1] சீவல்[2] பி. ஏ. சேலலேடார்[3] என். வெங்கட்டரமணைய்யா[4] கே. ஏ. நீலகண்டசாஸ்திரி[5] டி. வி. மகாலிங்கம்[6] ஏ. கிருட்டிண சாமி[7] பார்டன்ஸ்டெயின்[8] போன்றவர்களின் நூற்களின் மூலம் விசயநகரப் பேரரசு எத்துணையளவு சிறப்புவாய்ந்த பேரரசாக விளங்கியது என்பதையும் அப்பேரரசு காலத்துச் சமுதாயமும் பண்பாடும் நாகரிகமும் எவ்வண்ணம் விளங்கின என்பதையும் உணர்ந்து கொள்ள முடிகிறது.

கி.பி. 1336-ல் துங்கபத்திரை ஆற்றங்கரையில் இப்பேரரசு தோற்றுவிக்கப்பெற்றது. அதன் தலைநகராக விசயநகரம் விளங்கிற்று. சங்கம பரம்பரை (கி.பி. 1336—1485), சாளுவ பரம்பரை (1485—1505) துளுவ பரம்பரை (1505—1570) ஆரவீடு பரம்பரை (1570—1600) ஆகிய நான்கு பரம்பரைகளின் வழிவந்த அரசர்கள் இப்பேரரசை ஆண்டார்கள். இதன் ஆட்சிப்பரப்பு தென்னகத்தில் கிருஷ்ணா, துங்கபத்திரை ஆறுகளுக்குத் தெற்கே கன்னியாகுமரி வரை பரவியிருந்தது. தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் பகுதிகள் இவர்களது ஆட்சிக்குள் விளங்கியதாகக் கல்வெட்டுக்களும், பிறசான்றுகளும் எடுத்து விளக்குகின்றன.

தென்னிந்தியத்தில் தேவகிரியைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்த யாதவ ஆட்சியும், துவாரசமுத்திரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட போசளர் ஆட்சியும், வாரங்கல்லைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட காகதீய ஆட்சியும் வடக்கேயிருந்து வந்த முகமதியர் படையெடுப்புகளால் அழிந்தபின்னர் தக்காணப் பகுதியில் பாமினி சுல்தான்களின் ஆட்சி விளங்கியது. தென்னிந்தியாவில் தொன்றுதொட்டு சிறப்படைந்துவந்த பழைய பண்பாடு, நாகரிகம், சமயம் ஆகியவற்றின் எதிர்காலம் கேள்விக்குறியாய் நின்றது. இச்சூழ்நிலையில் இவற்றைக் காக்கும் அரணாகத் தோன்றியதே விசயநகரப்பேரரசு. விசயநகரப் பேரரசைப் பற்றி எழுதிய வரலாற்றாசிரியர்கள் இப்பேரரசு, முகமதியர்கள் போன்றவர்களின் ஆதிக்கத்தில் எளிதில் அழிந்து போகவியலாது உடனே போருக்குத் தயாராகும் நிலையில் தம்மை உருவாக்கிக்கொண்ட இந்துக்களின் அரசாக விளங்கியது என்பர்.[9]

## தமிழ்நாட்டில் விசயநகரவேந்தர் ஆட்சி

விசயநகரப்பேரரசு தோன்றியதும் முதலில் தன்னைச் சுற்றியிருந்த காகதியர் ஆட்சிப்பகுதியையும், தெலுங்கு கருநாடகப் பகுதிகளையும் கைப்பற்றிக் கிழக்கிலும் மேற்கிலும் பரவியது. பின்னர் தமிழகத்தை நோக்கி விரிவடைந்ததும் முதல் புக்கணரின் மகனாக விளங்கிய குமாரகம்பணர் கி.பி. 1363-ல் தமிழகத்தின் வட எல்லை மண்டலமாக விளங்கிய தொண்டைமண்டலத்தை (இராஜகம்பீரராச்சியம்) படையுடன் வந்து அப்போது ஆண்டு கொண்டிருந்த சம்புவராயரிடமிருந்து கைப்பற்றினார். அதன்பிறகு சோழமண்டலத்தைக்

கடந்து பாண்டி மண்டலத்திற்குச் சென்று மதுரையில் நடைபெற்றுக் கொண்டிருந்த சுல்தான்களின் ஆட்சியை நீக்கினார்.[10] இவ்வெற்றிக்குப் பின்னர் பாண்டிமண்டலம், சோழமண்டலம், தொண்டைமண்டலம், கொங்குமண்டலம் முதலிய தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளும் விசயநகரப் பேரரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. அதன்பிறகு தமிழகம், கிருஷ்ணதேவராயர் ஆட்சி விசயநகரத்தில் ஏற்படும் வரையில் எவ்வித மாறுதலும் இன்றி விசயநகரவேந்தர்களை ஆதரித்து வந்த தமிழகத்துச் சிற்றரசர்களாலும், விசயநகரவேந்தர்களின் படைத்தலைவர்களாக விளங்கியவர்களாலும் ஆளப்பட்டு வந்தது.

## மதுரை நாயக்கர் ஆட்சி

கி.பி. 1509-ல் விசயநகர வேந்தராக ஆட்சியேற்ற கிருஷ்ணதேவராயர் தமிழ்நாட்டில் நிகழ்ந்த உள்நாட்டுக் குழப்பங்களை அடக்கினார். தமிழ்நாட்டில் விளங்கிய நான்கு மண்டலங்களுக்கும் மகாமண்டலேசுவரர்களை (ஆளுநர்களை) நியமனம் செய்தார். பாண்டி நாட்டுப்பகுதிக்கு நாகமநாயக்கரையும், சோழநாட்டுப்பகுதிக்கு நரசநாயக்கரையும் ஆளுநர்களாக ஆக்கினார். மதுரையில் நாகமநாயக்கர் ஆளுநராக அமர்த்தப்பட்டமைக்குக் காரணம் அக்காலத்தில் சோழனுக்கும் பாண்டியனுக்கும் நடைபெற்ற ஆதிக்கப் போராட்டமேயாகும். சந்திரசேகரப் பாண்டியனிடமிருந்து பாண்டிய நாட்டை சோழன் கைப்பற்றிக் கொள்ளவே பாண்டியன் ராயரிடம் சென்று முறையிட்டான். பாண்டியன் வேண்டுதலுக்குச் செவிசாய்த்த ராயர் அவனை ஆட்சியில் அமர்த்த நாகமநாயக்கரைப் பெரும்படையுடன் மதுரைக்கு அனுப்பினார். நாகமநாயக்கர் சோழனை வென்று பாண்டிய நாட்டைப் பாண்டியனிடம் அளிக்காது தானே அதன் ஆளுநராக மதுரையில் இருந்துவந்தார். இதனால் கோபமுற்ற கிருஷ்ணதேவராயர் தனது அடைப்பக்காரனாக விளங்கிய நாகமநாயக்கரின் மகனான விசுவநாத நாயக்கனை நாகமநாயக்கரை வென்று சிறைப்பிடித்து வரும்படி கட்டளையிட்டான். ராயர் சொன்னபடியே விசுவநாதன் தந்தையென்றும் பாராது அரசகட்டளையையேற்று நாகமனைச் சிறைப்பிடித்து ராயர் முன்கொண்டு வந்து நிறுத்தினான். இதனைக்கண்ட கிருஷ்ணதேவராயர் விசுவநாதனின் அரசப்பற்றினைப் பாராட்டி அவனையே பாண்டி மண்டலத்தின் ஆளுநராக இருந்து ஆண்டுவரும்படி செய்தார் என்று விசயநகரவேந்தர்களைப் பற்றிய வரலாற்று நூல்கள் கூறும்.[11]

மதுரைப்பகுதியை, விசுவநாதநாயக்கனின் வழிவந்து ஆட்சி செய்தவர்களே மதுரை நாயக்கர் ஆவார்கள். பாண்டிமண்டலமும், கொங்குமண்டலமும், திருச்சியை உள்ளடக்கிய சோழநாட்டின் தென்பகுதியும் இவர்கள் ஆளுகைக்குட்பட்டிருந்தன. மதுரைநாயக்கரின் வரலாறு குறித்து சத்தியநாதையர்[12] அ. கி. பரந்தாமனார்[13] போன்றோர் தனி நூற்கள் எழுதியுள்ளனர்.

விசயநகரப்பேரரசின் பிரதிநிதியாக விசுவநாதநாயக்கன் மதுரையில் பதவியேற்ற காலம் கி.பி. 1529-ஆம் ஆண்டு ஆகும். கி.பி. 1529-ல் தொடங்கிய இம்மதுரைநாயக்கர் ஆட்சி கி. பி. 1736 வரை நீடித்தது. விசுவநாதநாயக்கர் தொடங்கி மீனாட்சி ஈறாக பதின்மூவர் மதுரைநாயக்க அரசர்களாக விளங்கியிருக்கின்றார்கள். இவர்கள் விசயநகரப் பேரரசின் அரசியல் கொள்கைகளையே பின்பற்றி ஆட்சி செய்தார்கள். சில வேளைகளில் தமிழ்நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்றார்போல் தங்களது முறைகளை மாற்றவும் செய்திருக்கின்றார்கள். மதுரைநாயக்க மன்னர்களில் முதலில் ஆட்சிபுரிந்த ஆறு நாயக்கர்கள் விசய

பேரரசருக்குக் கட்டுப்பட்டு அவர்களது பிரதிநிதிகளாகவே ஆட்சி நடத்தினர். அடுத்துவந்த எழுவரும் முழுவுரிமை பெற்ற மன்னர்களாக மதுரையில் ஆட்சி செய்தனர்.

**திருமலைநாயக்கர்**

மதுரைநாயக்கர் குலத்தின் வழிவந்து தன்னை முதன்முதலில் முழுவுரிமை படைத்த மன்னராக ஆக்கிக்கொண்டவர் திருமலைநாயக்கரே ஆவார். மதுரை நாயக்கமன்னருள் விசுவநாதநாயக்கரை அடுத்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அதிகமான ஆண்டுகள் ஆட்சிநடத்தியவரும் திருமலைநாயக்கரே ஆவார். இவரது இயற்பெயர் திருமலை சவுரி நாயினு அய்யிலுகாரு என்பதாகும். தந்தை முத்துகிருஷ்ணப்பநாயக்கர் ஆவார். திருமலை நாயக்கர், முத்துகிருஷ்ணப்பநாயக்கருக்கு கி. பி. 1587 பார்த்திவ ஆண்டு தைப்பூசநாளில் மகனாகப் பிறந்தவர். இவர் கி.பி. 1659-ஆம் ஆண்டு மாசிமாதம் நான்காம் நாள் இவ்வுலக வாழ்வை விட்டு மறைந்தார். திருமலைநாயக்கர் தமது முப்பத்தொன்பதாம் வயதில் ஆட்சிப் பீடத்தில் ஏறி எழுபத்தைந்தாம் வயதுவரை ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருந்தார்.

இவர் ஆட்சி கட்டில் ஏறிய காலத்தைச் சிலர் கி. பி. 1623 என்றும் வேறு சிலர் கி. பி. 1629 என்றும் கூறுவர். திருமலைநாயக்கர் தமது தலைநகரை கி.பி. 1634 வரை திருச்சியிலும் அதன் பிறகு மதுரையிலும் கொண்டிருந்தார். திருமலைநாயக்கரின் புகழ்பெற்ற படைத்தலைவர் தளவாய் இராமப்பய்யர் ஆவார். இவர்திருமலையின் பலவெற்றி களுக்குக் காரணமாக அமைந்தவர் என்பதை அவரைப்பற்றிப் பாடப்பெற்ற இராமப்பையயன் அம்மானை எடுத்து கூறுகிறது.

திருமலைநாயக்கர் தமது ஆட்சிப் பகுதியை விரிவடையச்செய்ய பலபோர்கள் நடத்தி யுள்ளார். மைசூர்ப் போர், திருவாங்கூர்போர், சேதுநாட்டுப்போர், விசயநகரவேந்தருடன் செய்த போர், செஞ்சிப்போர், இரண்டாம் மைசூர் முக்கறுப்புப் போர் முதலிய போர்கள் இவர் வெற்றிகண்ட போர்களில் குறிப்பிடத்தக்கவையாகும். தொடக்கக் காலத்தில் விசய நகரப் பேரரசுக்குப் கட்டுப்பட்டு நடந்த திருமலைநாயக்கர் தமது படைபலத்தாலும் வெற்றித் திறத்தாலும் தன்னாட்சிபெற்ற மாமன்னராக மாறிப் புகழ்பெற்று விளங்கினார். காவல்மிகுந்த கோட்டைகள் பலவற்றைத் தன்னாட்சியில் உள்ள பல இடங்களில் திருமலை நாயக்கர் தோற்றுவித்திருந்தார் என்று டெயிலர் பாதிரியார் அவர்கள் பதிப்பித்த கையெழுத்துப் பிரதி எடுத்துக் கூறுகின்றது.

திருமலைநாயக்கர் மரத்தினடியில் அமர்ந்திருக்கும் காளையின் உருவத்தைத் தமது குலச்சின்னமாகக் கொண்டிருந்தார். இது மதுரையிலும் திருப்பரங்குன்றத்திலும் இவர் நட்டுவித்த கோவிற்கொடிமரங்களில் இன்றும் காணப்படுகின்றது. திருமலைநாயக்கர் தெய்வ உருவங்கள் பொறித்த பல செம்புக்காசுகளை வெளியிட்டுள்ளார்.[14] இவரது அரசவருவாய் அக்காலத்தில் ஒருகோடி ரூபாய்க்கும் மேலாக இருந்தது என்று வரலாற் றாசிரியர்கள் கணக்கிட்டுள்ளனர்.

திருமலைநாயக்கர் தன்னாட்சியில் செய்துமுடித்த கலைப்பணிகளும், சமயப்பணிகளும் பலவாகும். மதுரைமாநகரில் இவர் கட்டிமுடித்த அரண்மனை தென்னகத்தில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு கட்டடக்கலைப்பணிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது. இந்து, முகமதியர் ஆகியவர்களின் கலைப்பணிகளின் கூட்டுக்கலவையில் (Indo Ceracenic Art)

அமைந்த இக்கட்டடம் தென்னகத்தின் தாஜ்மஹால் என்று போற்றத்தக்க முறையில் திகழ்கிறது. இதில் வெளிநாட்டு கட்டடக்கலையின் தாக்கத்தினையும் காணமுடிகிறது. மதுரை, அழகர்கோயில், திருப்பரங்குன்றம், திருப்புவனம், ஸ்ரீவில்லிபுத்தூர், மன்னார் கோயில் ஆகிய இடங்களில் கோயில்களில் பலமண்டபங்களை எடுத்து அம்மண்டபங் களில் ஆண்டவனை வழிபட்டு நிற்கும் அடியவனாகத் தன்னுடைய சிற்பங்களைத் திருமலை நாயக்கர் செய்வித்துள்ளார். இந்த அளவுக்கு வேறு எந்த மதுரைநாயக்கமன்னர்க்கும் உருவச் சிலைகள் பாண்டியநாட்டில் காணப்படவில்லை. திருமலைநாயக்கர் தனது ஆட்சிப்பகுதிகளில் ஊட்டத்தூர் முதல் குமரி வரையுள்ள ஊர்களில் அமைந்த கோயில் களின் முன்பாக இராயகோபுரம் எடுக்கத் திட்டமிட்டு அவற்றைத் தொடங்கியிருக்கின்றனர். ஆனால் என்ன காரணத்தினாலோ அவை முற்றுப்பெறாமல் பெருத்த அடித்தளத்துடன் மொட்டைக் கோபுரங்களாய் இன்று காட்சியளிக்கிறது.

மதுரைக்கோயிலில் திருமலைநாயக்கர் செய்த அறப்பணிகள் பலவாகும். மதுரைக் கோயில் திருப்பணிமாலை இவற்றைப் பற்றி எடுத்துரைக்கின்றது. திருமலைநாயக்கர் மதுரைக் கோயில் நிர்வாகத்தில் ஒழுங்குமுறையை ஏற்படுத்தி பூசைகள் சிறப்புடன் நடைபெற வழிவகை செய்தார். இதேபோன்று, பழனி, ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் போன்ற பல இடங் களில் கோயில் நிர்வாகத்தில் சீர்திருத்தம் செய்தார். மதுரை மாநகரை விழாநகராக மாற்றிய பெருமை திருமலை நாயக்கரையே சாரும். இன்று மதுரையில் நடைபெறும் தேரோட்டமும் சித்திரைத் திருவிழாவும் ஒருசேர வியக்கத்தக்க வகையில் சிறப்புடன் நடைபெறச் செய்தவர் திருமலைநாயக்கர் ஆவார். மதுரைக்கோயிலுக்கு அளித்த தானங்கள் போன்று தன்னாட்சியில் பிற பகுதிகளில் அமைந்த கோயில்களுக்கும் தந்துள்ளார்.

திருமலைநாயக்கர் தனது ஆட்சியில் சமயப் பணிகளோடு பலசமுதாயப் பணிகளையும் செய்துள்ளார். பல பயன்தரும் சாலைகளையும், அச்சாலையில் வழிச்செல்வோர் தங்கிசெல் வதற்குச் சத்திரங்களையும், பசித்து வந்த மக்களுக்கு அன்னமும் தண்ணீரும் தர ஏற்பாடு செய்தார். பாசனத்திற்குப் பயன்படும் வகையில் பல நீர்நிலைகளை ஏற்படுத்தினார். தான் மட்டுமல்லாமல் பல அறச்செயல்கள் புரிந்து வந்தோர்க்கு மானியங்கள் பலவற்றையும் திருமலைநாயக்கர் அளித்துள்ளார்.

பல பெருந்தமிழ்ப்புலவர்களும், தெலுங்கு வடமொழிப் புலவர்களும் திருமலை நாயக்கர் ஆதரவைப் பெற்று விளங்கியிருக்கின்றனர். குமரகுருபரரின் மீனாட்சிபிள்ளைத் தமிழ் திருமலைநாயக்கரின் முன்பு அரங்கேற்றப்பட்டதாகக் கூறுவர். குமரகுருபரரும் மீனாட்சியம்மை குறம் என்ற சிற்றிலக்கியத்தில் திருமலையைப் புகழ்ந்து பாடியுள்ளார். குமரகுருபரர் தவிர பிள்ளைப்பெருமாள் அய்யங்கார், சுப்பிரதீபக்கவிராயர் போன்ற தமிழ்ப் புலவர்கள் திருமலைநாயக்கர் காலத்தில் வாழ்ந்தவர்கள் ஆவார்கள். திருமலைமன்னரின் ஆதரவு பெற்ற வடமொழி புலவர்களில் நீலகண்ட தீட்சிதர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவர் திருமலையின் அவைக்களத்தினை அலங்கரித்த புலவர்களில் ஒருவர். காமேஸ்வரகவி, க்ஷேத்திரரையா போன்ற தெலுங்குப் புலவர்கள் திருமலைநாயக்கரின் ஆதரவு பெற்றவர் ஆவார்கள். க்ஷேத்திரரையா திருமலையின் வேண்டுகோளுக்கிணங்கி அவரது அவைகளத்திற்கு வந்து கவிமழை பொழிந்து வெகுமதிகள் பல பெற்றவர். திருமலை நடத்திய போர்களையும் அவர்காலத்துச் சமுதாயத்தையும் விளக்கும் வகையில் இராமப்பையயன் அம்மானை இரவி

குட்டிப்போர், மதுரை வீரன் கதை போன்ற வாய்மொழி இலக்கியங்களும் திருமலைநாயக்கரின் காலத்தில் தோன்றியுள்ளன.

திருமலைநாயக்கர் சைவ, வைணவ சமயங்களுக்கு மட்டுமல்லாது புறசசமயமான கிறித்துவ சமயத்திற்கும் ஆதரவு அளித்துள்ளார். கிறித்துவ சமயத்து மக்களிடமும் அச்சமயத்துப் பாதிரிமார்களிடமும் திருமலைநாயக்கரின் அணுகுமுறை யாருக்கும் அனுதாபம் தரத்தக்க முறையில் அமைந்த மனிதாபிமானமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இராபர்ட்-டி-நோபிலி போன்றோர் நாயக்கரை நேரில் கண்டு வேண்டியதைப் பெற்று கிறித்துவத்தை வளர்த்திருக்கின்றார்கள்.

இத்தகைய சிறப்புகளைப் பெற்று விளங்கிய திருமலைநாயக்கரின் குண நலன்களையெல்லாம் பலவாறாக வரலாற்றாசிரியர்கள் எடுத்துரைத்திருக்கின்றார்கள். திருமலை நாயக்கர் வீரவுணர்வோடு தொடர்ந்து போராடும் மனவலிமை வாய்ந்தவர். சிறந்த சமயநெறியாளர், நாட்டில் நிலவி வந்த பண்பாட்டிற்கும் மரபிற்கும் மதிப்பளித்தவர். அறிவும் ஆற்றலும் சுறுசுறுப்பும் கொண்டவர். தன்னாட்சியை விரும்பிய மனப்பான்மை கொண்டவர். சிறந்த நீதிநெறியாளர். நாட்டில் எழுந்த சிக்கல்களுக்கு உடனுக்குடன் தீர்வு கண்டவர். அன்புள்ளம் கொண்டவர். எதனையும் மனம் திறந்து உடனே பாராட்டும் பண்புள்ளம் கொண்டவர். சிறந்த கலைரசிகர், கலைவிமர்சகர். கலைவல்லாருக்கு மதிப்பளித்தவர் என்று பாராட்டியுள்ளனர்.[15] மேலும் தன்னாட்சியில் நிலவிய சமூக முரண்பாட்டையும், சமுதாய முரண்பாட்டையும் ஒழிக்க முற்பட்டவர். அதற்காகப் பல ஏற்பாடுகளைச் செய்தவர் என்று வெளிநாட்டவரும் திருமலைநாயக்கரைப் புகழ்ந்து கூறுகின்றனர்.[16] திருமலையின் சில செயல்களைக் கண்டு அவரிடத்துக் குறை காண முற்பட்ட வரலாற்றாசிரியர்களும் அதனை அவரிடத்துக் காணும் கரும்புள்ளிகள் எனச் சமாதானம் கொண்டனர்.[17] சுருக்கமாகச் சொல்வோமானால் கி.பி. 13-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழகத்தில் ஆட்சி நடத்திய மாமன்னர்களில் சிறந்த ஆளுமை படைத்த மன்னர்களில் ஒருவராக திருமலைநாயக்கரைக் கூறலாம்.

இத்தகு வரலாறு படைத்த திருமலைநாயக்கரின் செப்பேடுகளைத் தொகுத்து ஆய்ந்து நூலாக வெளியிடுவதில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை பெருமை கொள்கிறது.

---

1. S. Krishnaswamy Aiyangar, Ancient India and South Indian History and culture 11 Oriental Book Agency, Poona, 1941; First essay Published in 1920.
2. R. Sewell, A Forgotten Empire, London, 1924.
3. B.A. Saletore‘ Social and Political life in the Vijayanagar Empire (A.D. 1346-A.D. 1646), Madras, 1934.
4. N. Venkata Ramanayya, studies in the History of the Third Dyanasty of Vijayanagar, University of Madras, Madras, 1935·
5. K.A. Nilakanta Sastri, A History of South India, oxford Uuiversity Press, 1955.
6. T.V. Mahalingam, Administration and Social life under Vijayanagar, University of Madras, Madras, 1940.
7. A. Krishnaswami, The Tamil Country under Vijayanagar, Annamalai University, Annamalai Nagar, 1964.

8. Burton stein, Peasant State and Society in Medieval South India, oxford University Press, Delhi, 1980.

9. A History of South India, p. 295.

10. *Ibid.* pp. 264-277.

11. 1. Mackenzie collection 'the Karnataka Rajakkal Savistara charitam.' cited Krishnasamy op. cit. pp. 193-4.
2. பாளையப்பட்டுகளின் வம்சாவளி மூன்று தொகுதிகள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை 1981.

12. R. Sathyanatha Aiyar, History of the Nayaks of Madura, University of Madras, Madras, Reprinted 1980.

13. அ.கி. பரந்தாமனார், மதுரைநாயக்கர்வரலாறு, அல்லிநிலையம், சென்னை-1960.

14. R. Nagaswamy, Tamil coins - A study, Tamilnadu state Department of Archaeology, Madras 1981, p. 17.

15. மேலேகண்ட திருமலைநாயக்கர் குறித்த செய்திகளுக்கு ஆதாரமாக அமைந்தவை மதுரைத்தலவரலாறும் 'வரலாற்றுச் சுவடிகளும்' கல்வெட்டுக்களும் ஆகும். மேலும் கீழ்க்கண்ட நூற்கள் இச்செய்திகளுக்கு ஆதரமாக அமைந்துள்ளன.

    1. Nelson, The Madura country, 1968.
    2. Indian Antiquary volume 1914-17.
    3. R. Sathyanatha Aiyar, History of the Nayaks of Madura.
    4. கோவிந்தராசனார், திருமலைநாயக்கர் வரலாறு, கோபால கிருஷ்ணகோன் வெளியீடு, மதுரை 1922.
    5. அ. கி. பரந்தாமனார், மதுரைநாயக்கர் வரலாறு.
    6. திருமலைமன்னன் கைபேடு, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னை 1984.

16. Dennis Hudson 'Siva, Menakshi, Vishnu Reflections on a popular Myths in Madurai' South Indian Temples - An Analytical Reconsideration Ed. Burton Stein, Vikas Publishing House Pvt. Ltd. New Delhi.

17. History of the Nayaks of Madura, p. 108

# திருமலை நாயக்கர் கால செப்பேடுகள் அமைப்புமுறை

இத்திருமலைநாயக்கர் காலச் செப்பேடுகள் சோழர், பாண்டியர், விசயநகர வேந்தர்கள் அளித்த செப்பேடுகளைப் போன்று கனத்த செப்புத்தகடுகளில் ஆழமாக எழுத்துக்கள் வெட்டி வெளியிடப்படவில்லை. அம்மையநாயக்கனூர் செப்பேடு, மதுரை ஓதுவார் செப்பேடு, இராமநாதபுரம் செப்பேடு போன்ற இன்னும் சில செப்பேடுகள் மட்டும் சற்று கனத்த தகடுகளில் செய்யப்பட்டுள்ளன. பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்துக்கள் மறுபுறத்தில் புடைத்துக்கொண்டு தெரியும் வகையில் மிக மெல்லிய தகடுகளாக சில செப்பேடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் செப்பேட்டில் ஒன்றைத்தவிர பெரும்பாலும் எல்லாச் செப்பேடுகளும் ஒரே இதழைக்கொண்டவையாய் விளங்குகின்றன. இராமநாதபுரம் செப்பேடு - ஒன்று மட்டும் கிடைத்துள்ள செப்பேடுகளில் பக்கவாட்டில் அதிக அகலமும் உயரம் குறைவாயும் (அகலம் 52 செ.மீ. உயரம் 13 செ.மீ.) உள்ளதாய் விளங்குகின்றது. இந்நாயக்கர் காலத்துச் செப்பேடுகளில் மிகப்பெரிய செப்பேடு திருமுருகன் பூண்டிச்செப்பேடு (உயரம் 45·5 செ.மீ. அகலம் 28·8 செ.மீ) ஆகும். பாண்டியர், சோழர் செப்பேடுகளைப் போன்று (ஓலைச்சுவடிகள் போன்று) உயரம் குறைவாகவும் பக்கவாட்டில் அகலம் அதிகமாகவும் வைத்துச் இச்செப்பேடுகள் செய்யப்படவில்லை. உயரம் அதிகமாகவும் அகலம் குறைவாவும் வைத்து செய்யப்பட்டிருக்கின்றன.

இச்செப்பேடுகளின் தொடக்கத்தில் மேற்புறம் மட்டும் நடுவில் பிடிப்பதற்கு ஏற்றாற் போல் அரைவட்ட வடிவில் நீட்டிக்கொண்டிருக்கும் வகையில் வெட்டி அமைக்கப்பட்டுள்ளன. கீழ்ப்பகுதி சதுரமாயும் நீள்சதுரமாயும் அமைக்கப்பட்டுள்ளன. அம்மையநாயக்கனூர் செப்பேட்டில் மட்டும் மேற்புறம் நீட்டிக்கொண்டிருக்கும் அரை வட்டத்திற்குப் பதிலாக சதுரவடிவில் தகடு நீட்டிக் கொண்டிருக்கும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது. சில செப்பேடுகளில் மட்டும் (எ.கா. ரசாக்காபட்டி, அரசம்பட்டி செப்பேடுகள்) மேற்புறம் அமைந்த அரைவட்டத்திற்குப் பக்கவாட்டிலும் ஓரங்களில் மிகச்சிறிய இரண்டு அரைவட்டங்கள் நீட்டிக் கொண்டிருக்கும் வகையில் செப்பேடுகள் செய்யப்பட்டுள்ளன. செப்பேடுகளின் மேற்புறம் நடுவில் நீட்டிகொண்டிருக்கும் அரைவட்டத்தில் பெரும்பாலான செப்பேடுகளில் வட்டமான சிறிய துளைகள் காணப்படுகின்றன. இவை பட்டயம் வைத்திருப்பவர்கள் கோர்த்துப் வைப்பதற்கு பயன்படும் வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இவற்றில் பாண்டியர், சோழர், விசயநகரவேந்தர் செப்பேடுகள் போன்று முத்திரை வளையங்கள் கோர்த்துப் பொருத்தி வைத்திருந்தமைக்கு வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால் ஒரு செப்பேடு கூட முத்திரை வளையத்தோடு கிடைக்காதது இம்முறை பற்றிச் சற்று ஐயத்தைத் தோற்றுவிக்கின்றது. பிற்காலத்து எழுத்தமைதியைக் கொண்ட சில திருமலைநாயக்கர் பட்டயங்களில் மட்டும் முத்திரை போட்டுச் செப்பேடுகள் (எ. கா.

சென்னை அருங்காட்சியகச்செப்பேடு, பொம்மயகவுண்டன்பட்டி) வழங்கியதாக அச்செப் பேடுகள் மூலம் அறியமுடிகிறது.

## வேலைப்பாடு

இச்செப்பேடுகளில் பலவற்றில் நுண்ணியவேலைபாடுகளைப் பார்க்க முடியவில்லை. எளிமையான தோற்றத்துடன் காணப்படுகின்றன. பழைய மரபைப் பின்பற்றிச் செய்யப் பட்ட, சிறுவாலைச்செப்பேட்டின் பக்கவாட்டில் அமைந்த கைப்பிடியில் அழகிய கொடி அலங்காரங்கள் காணப்படுகின்றன. திருமுருகன் பூண்டிப் பெரிய செப்பேட்டில் தெய்வ உருவங்களும் பனையேறும் காட்சியும் காணப்படுகின்றன. வெள்ளியங்குன்றம் செப்பேட்டில் சங்கு, சக்கரம், திருநாமம் ஆகியவை வரையப்பட்டுள்ளன.

## செப்பேடுகளின் செய்தி அமைப்புமுறை

திருமலைநாயக்கர் காலத்து அரச ஆணையைச் செப்பேடாக செய்தளிக்கும்போது செய்தி களைத் தொகுத்துச் செப்பேட்டில் பொறிப்பதில் சிறிது வேறுபாடுகளுடன் பண்டைய முறையைப் பின்பற்றி எழுதி அளித்துள்ளனர். திருமலைநாயக்கர் காலத்துச் செப்பேடுகளின் காணப்படும் செய்தியமைப்பு முறையை வைத்து அவற்றைப் பின்வரும் பகுதிகளாகப் பிரித்து விளக்கலாம்.

1) தொடக்கம்
2) காலம்
3) நோக்கம்
4) உரிமையின் எல்லை
5) சாட்சி
6) கையெழுத்து
7) ஓம்படைக்கிளவி
8) பட்டயம் செய்தவர்
9) முடிவு

பல பட்டயங்களில் இப்பகுதிகளின் முறைவைப்பில் வரிசையாகச் செய்திகள் ஒன்றை யடுத்து ஒன்றாக எழுதப்பட்டுள்ளன. சில செப்பேடுகளில் மட்டும் இவற்றில் சில பகுதிகள் இல்லாமலும் சிலபகுதிகள் வரிசைமாறி முன்னுக்குப் பின்னாகவும் காணப்படுகின்றன.

## 1. தொடக்கம்

செப்பேடுகளில் வாசகம் தொடங்குவதற்கு முன்பாகத் தலைப்பகுதியில் தலைப்பிட்டாற் போன்று பிற்காலத்தில் எழுதப்பெற்ற, பொம்மயக்கவுண்டன்பட்டிப் பட்டயங்களில் சயமுத்திரி பட்டயம் என்றும் 'பாளையக்காரர் கையொப்பம்' என்றும் எழுதப்பெற்றுள்ளன. இலந்தைக் குளம் செப்பேட்டில் மட்டும் அதனைப் பெற்றவர்கள் பிற்கால எழுத்தில் அடையாளத்திற்காக திருமலைமூவரையதேவனுக்குக் குடுத்த பட்டயம் என்று எழுதிவைத்துள்ளனர்.

திருமலைநாயக்கர் காலத்தில் அளிக்கப்பெற்ற சில பட்டயங்களில் மட்டும் பழையமரபைப் பின்பற்றி 'ஸ்வஸ்தஸ்ரீ' 'சுபாமத்தி' என்று மங்கலச்சொல் கொண்டு தொடங்குகின்றன. சில பட்டயங்கள் எவ்வித தொடக்கச்சொல் இன்றியும் காணப்படுகின்றன. திருமலைநாயக்கர் அளித்த பிற செப்பேடுகள் எல்லாம் செப்பேட்டிற்குத் தலைப்பிட்டது போன்று 'உ' என்ற பிள்ளையார் சுழியுடனும் அதனை அடுத்து 'ராமசெயம்' என்ற சொல்லுடனும் காணப்படு கின்றன. இது நாயக்கர் செப்பேட்டு அமைப்பில் காணப்படும் சிறப்புக்களில் ஒன்றாகும். விசயநகர வேந்தர்களின் சமயம் வைணவமாக இருந்தது. அவர்கள் வழிவந்த மதுரை நாயக்க

மன்னர்களும் சிறந்த வைணவர்களாக விளங்கினார்கள் என்பதை இது காட்டுகின்றது. அம்மைய நாயக்கனூர்ப் பட்டயத்தில் 'உ றாமசெயம்' என்று எழுதப்பெற்ற பிறகு 'உ' மீனாட்சி சுந்தரேசு(வ)ர் கிறுபா கடாசத்தினாலே' என்று வைணவத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் பழனிப் பட்டயத்தில் மட்டும் றாமசெயம் தவிர்க்கப்பெற்று 'ஆறுமுகம் துணை சிவமயம்' என்று எழுதப்பெற்றுள்ளது. சில இடங்களில் 'றாமசெயம்' என்பதற்கு முன்பாகவும் பின்பாகவும் இரண்டு இடங்களிலும் பிள்ளையார் சுழி போடப்பட்டுள்ளது. பிள்ளையார் சுழியும் றாமசெயமும் போட்டு எழுதும் வழக்கம் திருமலைநாயக்கர் காலத்தில் பெருகிவிட்டது என்பதை இது காட்டுகின்றது.

திருமலைநாயக்கரின் விண்ணப்பத்தால் வெளியிடப்பெற்ற திருநெல்வேலி மாவட்டக் கூனியூர்ச் செப்பேட்டின் தொடக்கத்தில் இராமரின் அடிப்பாதங்களை வணங்கும் வைணவக் கடவுள் வணக்கம் காணப்படுகின்றது. 'தெய்வங்கள் எல்லாம் வணங்குகின்ற இரண்டு பொருள்களின் மீது நான் அடைக்கலமாகச் செல்கின்றேன் அந்த இரண்டு பொருள்கள் என்பது இராமரின் அடிப்பாதங்கள் ஆகும்' என்பது அக்கடவுள் வணக்கத்தின் ஒருபகுதியாகும். இதில் தொடர்ந்து விஸ்வக்ஷேனருக்கும் வணக்கம் சொல்லப்பட்டுள்ளது.

மங்கலச்சொல்லை அடுத்து வெள்ளியங்குன்றம் செப்பேடு, சிறுவாலைச் செப்பேடு, இராமநாதபுரம் செப்பேடு-நான்கு, மதுரை ஓதுவார் செப்பேடு ஆகியவற்றிலும், பாளையக்காரர்கள் பற்றிய செப்பேடுகளிலும், விசயநகரவேந்தர் பரம்பரையும் மதுரை நாயக்கர் பரம்பரையும் பாளையக்காரர் சிறப்பும் ஒன்றை அடுத்து ஒன்றாகக் காணப்படுகின்றன. திருமலைநாயக்கர் நாட்டுப்புறங்களுக்குச் சென்று ஆங்காங்கே தனிநபர்களுக்கு அளித்த செப்பேடுகளில் இவற்றைக் காணமுடியவில்லை. மங்கலரேவுச் செப்பேட்டில் பிரசஸ்திகளை அடுத்து காலக்குறிப்பும், செப்பேடு வெளியிட்ட அரசன் பெயரும் குறிப்பிடப்படுகின்றன.

## 2. காலம்

செப்பேட்டின் காலக்குறிப்புப் பகுதி பல செப்பேடுகளில் ஆரம்பத்தை அடுத்தே காணப்படுகின்றது. இலந்தைக்குளம், திருமுருகன்பூண்டி போன்ற சில இடங்களில் கிடைத்த செப்பேடுகளில் மட்டும் செப்பேட்டு நோக்கப் பகுதியை அடுத்துக் குறிப்பிடப்படுகின்றது. அம்மையநாயக்கனூர், மதுரைஓதுவார், திருமுருகன்பூண்டி, ஆகிய செப்பேடுகளில் எல்லா வகையான காலக்குறிப்புக்களும் காணப்படுகின்றன. சகாப்தம், தமிழ்ஆண்டு, மாதம், தேதி, பட்சம். கிழமை, திதி, யோகம், கரணம், வேளை, ஓரை, நட்சத்திரம் போன்ற அனைத்துக் காலக்குறிப்புக்களோடு காணப்படும் செப்பேடுகளும் உண்டு. சகாப்தம் கூறும் போது சாலிவாகன சகாப்தம் அல்லது கலியுக-அப்தம் கூறப்படுகின்றது. இவ்விரண்டு அப்தங்களும் குறிக்கப்பட்டு வெளியிடப்பெற்ற பட்டயங்களும் உள்ளன. காந்தீஸ்வரம் செப்பேட்டில் மட்டும் சாலிவாகன சகாப்தத்தோடு கொல்லம் ஆண்டும் குறிப்பிடப்படுகின்றது இது திருநெல்வேலிப் பகுதியில் வெளியிடப் பெற்ற செப்பேடாக விளங்குவதால் அப்பகுதியில் பெருவழக்கில் இருந்த கொல்லமாண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து வகைக் காலக்குறிப்புக்களும் அம்மைய நாயக்கனூர்ச் செப்பேட்டில் குறிப்பிடப்படுகின்றன.

எல்லாவகைக் குறிப்புக்களும் இடப்பெற்று வெளியிடப்பெறும் காலக்குறிப்புக்களில் சிலசெப்பேடுகளில் தவறுகளும் காணப்படுகின்றன. திருமலைநாயக்கர் அளித்த செப்பேடுகளில் எளிதில் காலத்தினை அறிந்துகொள்ளும் வகையில் எல்லாவகைக் காலக் குறிப்புக்களும் இல்லாமல் தமிழ்ஆண்டு, தமிழ்மாதம், தேதி, (சிலவேளைகளில்) கிழமையும் குறித்து வெளியிடப்பட்டுள்ள செப்பேடுகளும் உண்டு.

### அரசனும் இடமும்

காலக்குறிப்புக்களை அடுத்து திருமலைநாயக்கரின் பெயர் குறிப்பிடப்படுகின்றது. திருமலைநாயக்கர் நேரடியாக சம்பந்தப்பட்டு வழங்கிய செப்பேடுகளிலும், அவரிடம் வந்து கேட்டுப்பெற்று வெளியிடப்பெற்ற செப்பேடுகளிலும் திருமலைநாயக்கரின் பெயரோடு அவர் எப்போது எவ்விடத்தில் தங்கியிருந்தார் என்ற குறிப்புகளும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக இதனை "மதுராபுரித்தல பாண்டி மண்டலம் பதிநாலு முடிபொருத்த கற்த்தறாகிய றாயஷத்திரி திருமலைநாயக்கறவர்கள் சிரிவில்லிபுத்தூர் நாச்சியாரைச் சேவிக்கவேண்டி ரத கெச துரகபதாதி சேனையுடனே சமுத்திரகோசம் போலவே மகா ஆடம்பறத்துடனே வந்து திருவண்ணாமலையில் தங்கியிருந்தபோது" - என்று இலந்தைக் குளம் செப்பேடு குறிக்கின்றது.

இராசாக்காபட்டிச்செப்பேடு,

"மதுறாபுரித் தலத்துக்கு கற்த்தறாகிய மகாராச மானிய
ஸ்ரீரி திருமலைநாயக்கறவர்கள் குமறகோவில் உள்ளடையத்தில்
வந்திரங்கி சீமை பார்க்கும்போது"

என்று குறிப்பிடுகின்றது.

### 3. நோக்கம்

அரசன் பற்றிய இக்காலக்குறிப்புக்களை அடுத்து செப்பேடு அளிக்கப்பட்ட நோக்கப் பகுதி காணப்படுகின்றது. திருமலைகாலத்துச் இச்செப்பேடுகள் பல்வேறு நோக்கங்களுக் காக அளிக்கப்பட்டிருக்கின்றன. மக்களுக்குத் தீங்கிழைத்த புலியைக் கொல்லுதல், புலியிட மிருந்து நாயக்கரைக் காத்தல், நாயக்கரையும் அவரது படையையும் உபசரித்தல், நாயக்கர் விரும்பியபடி குறிப்பிட்ட இடத்திற்கு அவரைப் பல்லக்கில் தூக்கிச்சென்று திரும்புதல், திருடரைக்கண்டறிந்து தண்டனை வழங்குதல், மக்களிடையே எழுந்த வழக்குகளைத் தீர்த்து வைத்தல், கணவாய் அருகில் தண்ணீர்ப்பந்தல், சுமைதாங்கி அமைத்துத் தர்மம் செய்வதற்கு மானியம் அளித்தல், அன்னதானச்சத்திரத்திற்கு மானியம், மடசிவாலைய மானியம், கோயிலுக்கு அளித்த நிலக்கொடைகள், கோயில் நிர்வாகநடைமுறைகள் கோயில் ஊழியத்திற்குக் காணியாட்சி வழங்குதல், அந்தணர்க்குப் பிரமதாயம் அளித்தல், குலக்குருவிற்குத் தானம் அளித்தல், ஊர்க்காவல்மானியம், வழிக்காவல் மானியம், திசைக் காவல் மானியம், நீர்பாய்ச்சுவற்கு மானியம், ஊர் நாட்டாண்மையை நியமித்தல், நாட்டாமை ஊழியம், சாதிப்பெரியதனம் ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு காரணங்களுக்காக இப்பட்டயங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

உரியவருக்கு மானியங்கள் அளிக்கப்படும்போது அது நிலமாக இருந்தால் அவற்றிற்கு நான்கு எல்லைகள் 'நான்குமால் விவரம்' என்ற பெயரில் எடுத்துக் கூறப்

பெற்றுள்ளன. ஒரு ஊரே மானியமாக அளிக்கப்படும்போது அவ்வூரைச் சுற்றிக் காணப்படும் ஊர்கள் எல்லைகளாக எடுத்துக் கூறப்பெற்றுள்ளன. மேலும் ஊழியக்காரர்களாகிய காவல்காரர், கிராமநாட்டாமை போன்றோர் பெறவேண்டிய பிற உரிமைகளும், மரியாதைகளும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. சாதிப்பெரியதனத்தை நியமிக்கும்போது பெரியதனக்காரர்க்கு அவரது இனத்தார்கள் அளிக்க வேண்டிய மரியாதைகளும், கொடுக்க வேண்டிய உரிமைப்பணமும் பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளன. கோயில்களுக்கு மானியங்கள் அளிக்கும்போது நான்கு எல்லைகள் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

வழக்குகள் நடைபெற்றபோது வழக்குக் (பிராது) கொடுத்தவர் யார் என்பதையும் வழக்கின் விவரமும் எடுத்துச் சொல்லப் பெற்று இறுதியில் அரசர் வழங்கிய தீர்ப்பும் செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. திருட்டு நடைபெறுதல், புலியைக் கொல்லல் போன்ற சில நிகழ்ச்சிகளைக் கூறும் செப்பேடுகளில் அதன் விபரம் நாடகம் போன்று ஒன்றன்பின் ஒன்றாக உரையாடலுடன் எடுத்துச் சொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் இலந்தைக்குளம் செப்பேட்டைப் பார்க்கும்போது ஒரு சுவையான விருவிருப்பான சிறுகதையைப் படிப்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. இது செப்பேட்டு வாசகத்தைச் சுவைபட எழுதும் திறம்படைத்தவர்கள் திருமலைநாயக்கர் காலத்தில் இருந்திருக்கின்றார்கள் என்பதைக் காட்டுகின்றது. திருமலைநாயக்கர் தன்நாட்டுப் பகுதிகளைப் பார்க்கச் சென்ற இடங்களில் அளித்த செப்பேடுகளும் இதே பாணியைப் பின்பற்றி எழுதப்பெற்றுள்ளன. திருமுருகன்பூண்டிப் பெரிய செப்பேட்டில் பனையேறிகளும் பனங்கள்ளும் அடக்கமுடையார்களும் வந்தது பற்றி ஒரு புராணக்கதையே சொல்லப்பட்டுள்ளது.

## 4. உரிமையின் எல்லை

செப்பேட்டின் நோக்கப்பகுதியை அடுத்து பெற்றதை அனுபவிக்கும் எல்லை எதுவரை என்பது பற்றிய பகுதி காணப்படுகின்றது. போற்றத்தக்க செயல்களுக்காக மானியம் பெற்றவர்களும், ஊழியஉரிமை பெற்றவர்களும், கொடையாகக் கோயிலுக்கும் பிற அற நிறுவனங்களுக்கும் அளிக்கப்பெற்ற தானங்களைப் பெற்றவர்களும் அவற்றை

> ''சந்திராதித்தர் வரைக்கும் புத்திர பவித்திர பாரம்பரையாக
> ஆண்டனுபவிச்சுக் கொள்வாராகவும்'' - (மதுரை ஓதுவார் செப்பேடு)

என்று பலசெப்பேடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. சில செப்பேடுகளில் இவ்வகைக் குறிப்புகள் காணப்படவில்லை. இவ்வகைக் குறிப்புகளில் 'சந்திராதித்தர் வரை' என்று கூறுவது பாண்டியர், சோழர் செப்பேடுகளைப் பின்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. 'கல்லும் காவேரியும் புல்லும் பூமியும் உள்ளவரைக்கும்' 'புத்திர பவுத்திர பரம்பரையாக ஆண்டனுபவிச்சு கொள்வாராகவும்' என்று கூறும் சொல் வழக்குகள் நாயக்கர் காலத் தமிழ்ச் செப்பேடுகளில் காணப்படும் மரபாகும்.

## 5. சாட்சி

மானியமும் தானமும் அளித்து அதனை அனுபவித்துக் கொள்ளும் உரிமையும் தந்தது பற்றிச் செப்பேட்டில் குறிப்பிட்ட பின்னர், அவற்றிற்குச் சாட்சியாக விளங்கியவர்கள் பெயர்களும், அவற்றிற்கு இசைவு தெரிவித்துக் கையொப்பமிட்டவர்களின் பெயர்களும்

காணப்படுகின்றன. சில செப்பேடுகளில் கையொப்பம் இட்டவர் பெயர்கள் முன்னரும் சாட்சியாக விளங்கியவர்கள் பெயர்கள் பின்னரும் குறிப்பிடப்படுவதும் வழக்கமாக உள்ளது. கோயில் காணியாட்சிக்கென்று அளிக்கப்பெற்ற பட்டயங்களிலும் வேறு சில பட்டயங்களிலும் சாட்சிக்காரர்கள் காணப்படவில்லை.

செப்பேடுகளில் தானம் அளிக்கப்பட்ட பகுதியைச் சார்ந்தவர்களோ அல்லது செப்பேடு குறிக்கும் ஊர்ப்பகுதிகளைச் சார்ந்தவர்களோ சாட்சியாகப் பட்டயங்களில் குறிப்பிடப்படுகின்றனர். செப்பேடு வழங்கப்பட்ட ஊர்ப்பகுதியை நிர்வகிக்கும் பாளையக் காரர்களும், அந்தப்பகுதியைச் சார்ந்த முக்கிய சமூகத் தலைவர்களும், ஊரைச் சேர்ந்த ஆயக்காரர்களும் சாட்சியாகக் குறிப்பிடப்படுகின்றனர். இலந்தைக்குளம் செப்பேட்டில் வெள்ளிக்குறிச்சிப் பாளையக்காரரும், கண்டப்பநாயக்கனூர்ப் பாளையக்காரர் கண்டப்ப நாயக்கரும், வத்திராயிருப்பு நாட்டாமையும், கணக்குப்பிள்ளையும், ஊர்த்தச்சரும், வண்ணாரும், குடிமகனும், மாதாரியும், மடையனும் சாட்சியாகக் குறிப்பிடப்படுகின்றனர். பல ஊர்கள் சம்பந்தப்பட்ட தானமாக இருந்தால் பல ஊர் பாளையக்காரர்களும் கிராம நாட்டாமையும், கணக்கரும் சேர்ந்து முடிவெடுத்த சாட்சியாகக் குறிக்கப்படுகின்றனர். சில பட்டயங்களில் ஆயக்காரர் இல்லாமல், உள்ளூர்க்காரர் ஒருவரும் அப்பகுதிப் பாளையக் காரரும் மட்டும் சாட்சியாகக் குறிப்பிடப்படுகின்றனர். திருமுருகன்பூண்டிச் செப்பேட்டில் பத்திரகாளியம்மன், அய்யனார், மீனாட்சிசொக்கர் ஆகிய தெய்வங்களே சாட்சியென்று தெய்வங்களைச் சாட்சியாகக் குறிக்கும் வழக்கமும் காணப்படுகின்றது.

சில பட்டயங்களில் சாட்சியும் கையொப்பமும் இல்லாமல் 'இப்படிக்கு திருமலை நாயக்கரவர்கள் தளவாய் ராமப்பைய்யரவர்கள்' என்று திருமலை நாயக்கரோடு உயர் அதிகாரிகளின் பெயர்களும், சம்பந்தப்பட்ட தானத்தார் பெயரும் காணப்படுகின்றன.

## 6. கையொப்பம்

பல செப்பேடுகளில் கையொப்பம் வரும் பகுதியில் அரசராக விளங்கிய திருமலை நாயக்கர் கையொப்பமும், பாளையக்காரர் ஒப்பமும் காணப்படுகின்றன.

> ''யிந்தப்படிக்கி கற்த்தறாகிய திருமலை னாயக்கறவர்கள் கய்யி ஒப்பம்''
> (சிந்துமேட்டுப்பட்டிச் செப்பேடு)
>
> ''யிந்தப்படிக்கி ராசமானிய ஸ்ரீதிரிதிருமலை நாயக்கறவற்கள் திலுக்கறத்தால் கையி ஒப்பம்''
> (தருமத்துப்பட்டிச்செப்பேடு-3)
>
> ''யிந்தப்படிக்கி கற்த்தறாகிய திருமலை னாயக்கறவற்கள் திருக்கறத்தால் ஒப்பம் பாளையகாரன் முத்துலிங்கத் தும்பிச்சினாயக்கற் கய்யி ஒப்பம்'
> (மங்கலரேவுச் செப்பேடு)

என்று மேற்கண்டவாறு குறிப்பிடப்படுகின்றது. சில செப்பேடுகளில் 'எழுத்து' என்று கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்படுகின்றது.

> 'வாலகுமாரபிள்ளை எழுத்து'
> 'கடுத்தமலக்கலு ராமசந்திரய்யன் எழுத்து' (மதுரை ஓதுவார் செப்பேடு)

இவ்வாறு எழுத்து இன்னாரது என்று குறிப்பிடப்படும் முறை நாயக்கர் காலத்திற்கு முன்புள்ள செப்பேடுகளிலும் கல்வெட்டுகளிலும் காணப்படும் மரபாகும்.

## 7. ஓம்படைக்கிளவி

செப்பேட்டில் கையொப்பத்திற்குப் பின்னர் ஓம்படைக்கிளவி காணப்படுகின்றது. ஓம்டைக்கிளவி என்றால் அளிக்கப்பட்ட உரிமையையும் தானத்தையும் பிறர் ஓம்புமாறு (போற்றி நடக்குமாறு) சொல்லப்பட்ட சொல் என்று பொருள். திருமலைநாயக்கர் செப்பேடுகளில் கொடுக்கப்பட்ட தானத்தை போற்றினால் உண்டாகும் நன்மையோடு அதனை அழித்தால் அழித்ததற்கு ஏற்படும் தீமையையும் குறிப்பிடப்படுகின்றன. இவை பின்வருமாறு சில செப்பேடுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

> ''இந்த செங்குளத்திற்கு விகாதம் பண்ணாமல் அனுகூலமாய்
> நடத்திவிச்சு வந்த பேர்கள் வங்கிஷ அபிவிருத்தியாய்
> சகலதிக்கு விசையங்களும் உண்டாயிருப்பார்கள்'' (மதுரை ஓதுவார் பட்டயம்)

> ''யிதைப் பின்னோற்கள் அடி அறிவு செய்தால் காறாம் பசுவைக்
> கொன்ற தோசத்திலும் பிராமனாளைக் கொன்ற தோசத்திலும்
> அடைந்து போவாறாகவும்'' (தருமத்துப்பட்டிச் செப்பேடு)

> கெங்கைக்கரையிலே ஏளு காராம் பசுவை கொன்ற
> தோசத்திலே போவாறாகவும் பெத்ததாயைக் கழுத்தைக்
> கட்டினாப் போலவும் யேளு கோவிலு திருவிளக்கு
> நிருத்தின தோசத்தில் போவாறாகவும்'' (அம்மையநாயக்கனூர்ச்செப்பேடு)

> ''இந்த தற்ம்மத்துக்கு யாதமொருத்தர் வாக்கு சகாயம்
> சாரீர சக(ா)யம் அற்த்த சக(ா)யம் செய்த
> பேருகல் பழனியில் சத்தநதியில் தீற்த்தமாடி
> கயிலாசனாதரை பெரியனா(ய)கியும் பலனியப்பரையும்
> வல்லி தெய்வானையும் சேவித்த பலன் பெருவாராகவும்
> யிந்ததற்மத்துக்கு எடம் இகடு செயிதவன் கெங்க கரையில்
> கராம் பசுவைகொன்ற தோசத்தில் போ
> கடவராகவும்'' (இராமநாதபுரம்செப்பேடு–4)

சிலசெப்பேடுகளில் கொடுக்கப்பட்ட தானத்தை அழித்தால் அழித்தவரைத் தெய்வம் கேட்கும் என்றும் பின்வருமாறு குறிக்கப்படுகின்றது.

> ''யிதை யாதாமொருதற் அடி அளித்தால்
> புதுநாயினார் பெருமாள் கேள்பாற் (மங்கலரேவுச்செப்பேடு)

> 'யிதை ஆறாமொறுதன் அடிஅளித்தால் றாவானசாவிடியில்
> உள்ள தேவாதியளும் மீனாட்சி அம்மனும் கேள்க்கும்''
> (தருமத்துப்பட்டிச்செப்பேடு-3)

> ''கம்பத்தடியான் கருப்பசாமி கேள்பாற்'' (அரசப்பட்டிச்செப்பேடு)

திருமலைநாயக்கர் காலத்துச் செப்பேடுகளில் காணப்படும் இவ் ஓம்படைக் கிளவிகள் நாயர்கர் காலச் சமுதாயத்தில் எதனை நன்மை என்றும். எதனைத் தீமை என்றும் கருதினார்கள் என்பதையும் எதனை மதித்து வாழ்ந்தார்கள், எதனைக்கண்டு அஞ்சினார்கள் என்பதையும் நமக்கு உணர்த்துகின்றன. தமிழ்நாட்டுச் செப்பேடுகளில் காணப்படும் ஓம்படைக்கிளவிகளின் காலவாரியான ஆய்வு தமிழ்ச்சமுதாயம் எவ்வகையான சமூக உணர்வுகளும் எவ்வகையான சமூக-சமய மதிப்பீடுகளையும் கொண்டிருந்தது என்பதை உணர்த்தும் ஆய்வாக அமையும். இவ்வகையில் திருமலைநாயக்கர் காலத்துச் செப்பேடுகள் அவர் காலத்துச் சமூக உணர்வுகளையும் மதிப்பீடுகளையும் நமக்குப்புலப்படுத்தி நிற்கின்றன.

நாயக்கர் காலத்து மக்களிடையே பசுவையும் குறிப்பாகக் காராம் பசுவையும் பிராமணரையும், பெண்ணையும், பெற்ற தாயையும் புனிதமான இடங்களிலோ பிற இடங்களிலோ கொலை செய்வது கொடிய பாவமாகக் கருதப்பட்டது. மேலும் கோயிலில் எரிந்து கொண்டிருக்கும் விளக்கினை நிறுத்துவதும் பாவமாக எண்ணப்பட்டது. தலயாத்திரை செய்வதும் குறிப்பாக இராமேசுவரம், பழனிக்குச் சென்று தீர்த்தமாடி அங்குள்ள தெய்வங்களை வணங்கினால் பலன் பெறலாம் என்ற கருத்து மக்களிடையே இருந்தது. மக்கள் பெருமாள், ஈசுவரன், மீனாட்சி போன்ற தெய்வங்களுக்கு எதிராக செய்யும் செயலைக் கண்டு அஞ்சினார்கள். கம்பத்தடியான், கருப்பசாமி, முனுசாமி போன்ற கிராமதெய்வங்களுக்கும் மக்கள் அஞ்சி வாழ்ந்தார்கள் என்பதைச் செப்பேடுகளில் காணப்படும் ஓம்படைக்கிளவிகள் உணர்த்துகின்றன.

## 8. பட்டயம் செய்தவர்கள்

திருமலைநாயக்கர் செப்பேடுகளில் ஓம்படைக்கிளவிக்கு அடுத்த பகுதியாகச் செப்பேடு செய்தவர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன செப்பேட்டு வாசகத்தை எழுதியவர் பெயரும், செப்புத் தகட்டைச் செய்து அதில் எழுத்துக்களைப் பொறித்தவர்கள் பெயரும் இப்பகுதியில் காணப்படுகின்றன. இவ்விருவர் பெயர்களும் பொறிக்காது வெளியிடப்பெற்ற செப்பேடுகளும் காணப்படுகின்றன. சில செப்பேடுகளில் மட்டும் செப்பேட்டின் வாசகத்தை (முறி) எழுதியவர் யார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பாலான செப்பேடுகளில் செப்புத் தகட்டினைச் செய்து அதில் அவ்வாசகத்தைப் பொறித்தவர் யார் என்பது மட்டுமே காணப்படுகின்றது. இதனைச் செய்தவர்கள் பெரும்பாலும் கம்மாளர் சமூகத்தைச் சார்ந்த 'ஆசாரி'களாகவே விளங்குகின்றனர். சில இடங்களில் மட்டும் 'பிள்ளை' சமூகத்தைச சார்ந்தவர்கள் இச்செயலினைச் செய்து முடித்திருக்கின்றார்கள்.

இப்பட்டயங்களை மதுரையிலும் பாளையக்காரர் கோட்டை இருக்கும் இடங்களிலும் உள்ளவர்கள் தயார் செய்திருக்கின்றார்கள். குறிப்பாக இவர்கள் கோட்டை வாயில்களில் பணிபுரிகின்றார்களாக விளங்கியிருக்கின்றார்கள். மதுரைக் கோட்டையின் வடக்கு வாயில் மதுரைக் கோட்டையின் மேற்கு வாயில், அன்னஞ்சி பாளையக்காரன் கோட்டை, திண்டுக்கலி கோட்டை வடக்கு வாயில் ஆகிய இடங்களில் இவர்கள் பணிபுரிந்திருப்பதைத் திருமலையின் பட்டயங்கள் காட்டுகின்றன.

"இந்தப்பட்டையம் செய்தவன் மதுரைவடக்குவாசல்
மீனாட்சி ஆசாரி" (அரசப்பட்டிச்செப்பேடு)

''பட்டயம் செய்தவன் மதுரைவடக்குவாசல் சொக்கலிங்கம் ஆசாரி''
(இராசக்காபட்டிச்சேப்பேடு)

''யிந்தப்பட்டயம் செய்தவன் மதுரை வடக்குவாசல் நாச்சி ஆசாரி''
(சென்னை அருங்காட்சியகச் செப்பேடு-1)

''யிந்தப்பட்டயம் செய்தவன் மதுறாபுரிவடக்குவாசல் பொன்னம்பலம்பிள்ளை''
(இராமநாதபுரம் செப்பேடு-3)

''இந்தப்பட்டயம் செய்தவன் மேலவாசல் சுப்பையன் ஆசாரி''
(சிந்து மேட்டுப்பட்டிச் செப்பேடு)

''இந்தப்பட்டயம் தயார் செய்தவன் மேலவாசல் சொக்கலிங்கம் ஆசாரி''
(தருமத்துப்பட்டிச் செப்பேடு-1)

''பட்டயம் செய்தவன் மதுரை பொன்னம்பலம்பிள்ளை மகன் முத்துப்பிள்ளை''
(தருமத்துப்பட்டிச் செப்பேடு-3)

அக்காலத்தில் மதுரை கோட்டை வாயிலில் மீனாட்சி ஆசாரி, சொக்கலிங்கம் ஆசாரி, நாச்சி ஆசாரி, பொன்னம்பலம்பிள்ளை, சுப்பயன் ஆசாரி, பொன்னம்பலம்பிள்ளை மகன் முத்துப்பிள்ளை என்று பலர் பணிபுரிந்திருக்கின்றனர். இவற்றில் தருமத்துப்பட்டிச் செப்பேட்டில், ஒன்றும் இராசாக்காபட்டிச் செப்பேடும் மதுரை வடக்கு வாசலிலும் மேல வாசலிலும் மாறிமாறிப் பணிபுரிந்த சொக்கலிங்கம் ஆசாரி என்ற ஒருவரால் தயார் செய்யப் பட்டிருக்கின்றன. இவரது தந்தையின் பெயர் மாணிக்கம் ஆசாரி என்பதாகும். இவரும் மதுரையில் பணிபுரிந்த தருமத்துப்பட்டி இரண்டாம் செப்பேட்டைத் தயார் செய்து எழுதி யிருக்கின்றார். இதேபோன்று இராமநாதபுரம் செப்பேடு மூன்றினைத் தயார் செய்த பொன்னம்பலம்பிள்ளையின் மகன் முத்துப்பிள்ளை தருமத்துப்பட்டி மூன்றாம் செப்பேட்டை தயார் செய்திருக்கின்றார். அரச ஆணைகளைச் செப்புத்தகடுகளில் பொறித்த இவர்கள் தலைமுறை தலைமுறையாய் தந்தையை அடுத்து மகன் என்று பணி செய்து வந்ததையும் இருவரும் ஒரே நேரத்தில் பணிபுரிந்திருப்பதையும் இது காட்டுகின்றது. இதேபோன்று வேறு ஊர்களில் பணிபுரிந்த செப்பேடு பொறிப்போர் பற்றிப் பின்வரும் செப்பேடுகளில் குறிப்புகள் காணப்படுகின்றன.

''பட்டயம் செய்தவன் அன்னஞ்சிக்கோட்டை அளகப்பன் ஆசாரி
(பொம்மயக் கவுண்டன்பட்டிச் செப்பேடு-1)

''யிந்தப்பட்டயம் செயிதவன் திண்டுக்கல்லு வடக்குவாசல் சவால்மூனிசு வேலை மீநாச்சி ஆசாரி''
(பொம்மயக் கவுண்டன்பட்டிச் செப்பேடுகள் 2, 3, 4)

மீனாட்சி ஆசாரியே பொம்மயகவுண்டன்பட்டிச் செப்பேடுகளில் மூன்று செப்பேடு களைத் தயார் செய்திருக்கின்றார். பெரும்பாலும் திருமலை நாயக்கர் காலத்தில் செப்பேடுகளைச் செய்து அவற்றில் எழுத்துக்களைப் பொறிப்பவர்கள் கோட்டையைக்

காக்கும் பணியில் ஈடுபட்டவர்களாகவும் இருந்திருக்க வேண்டும் எனலாம். கோட்டையைக் காக்கும் பணியாளர்களில் இவர்களும் ஒருவராகப் பணிபுரிந்து, அரச முத்திரைகள், ஆணைகளைப் பெற்றுக் கோட்டைக்குள்ளிருந்து வெளியே செல்வோரையும் வெளியிலிருந்து கோட்டைக்குள்ளே நுழைவோரையும் அவர்களிடத்துள்ள அரச முத்திரைகள், ஆணைகள் ஆகியவற்றைக் கண்டு சோதனையிடும் பணியில் கோட்டைக்காவலர்களுக்கு உதவியிருக்க வேண்டும். எனவேதான் செப்பேடுகளில் இவர்கள் இருப்பிடங்கள் கோட்டையோடும் கோட்டைவாசலோடும் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவர்களே நாயக்கர் காலத்தில் அரசுப்பணியாளர்களாக நாட்டின் பல இடங்களுக்குச் சென்று செப்பேடுகளைத் தயார் செய்து எழுதும் பணிகளையும் செய்திருக்கின்றார்கள். இவர்களைத் தவிர நாட்டின் முக்கியமான ஊர்களிலும் செப்பேடுகள் எழுதுவோர் இருந்திருக்கின்றனர். எடுத்துக்காட்டு:

''நல்லமறம் குமறாண்டி ஆசாரி' (மங்கலரேவுச்செப்பேடு-I)

எவ்விடத்திலிருந்து வந்தவர்கள் என்று குறிப்பிடப்படாத திருப்பதிஆசாரி (இலந்தைக்குளம் செப்பேடு)

முத்துவேல் ஆசாரி (வெள்ளியங்குன்றம் செப்பேடு)

என்பவர்களும் திருமலை நாயக்கர் காலத்தில் வாழ்ந்திருக்கின்றனர்.

இச்செப்பேடுகளில் பொறிக்கப்படும் வாசகத்தை எழுதிக் கொடுத்தவர்களாகச் சிலர் பட்டயங்களில் குறிக்கப்பெறுகின்றனர். இவ்வாறு செப்பேட்டு வாசகம் எழுதுவதைச் 'சாதனம் எழுதுதல்' 'முறிஎழுதுதல்' என்ற சொற்கள் சுட்டுகின்றன.

'இப்பட்டயம் எழுதினது விளுப்பாதராயர்' (சிறுவாலை ஜமீன் செப்பேடு)
'இந்த சாதனம் எழுதிக் கட்டில் பதியக்கொடுத்தது' (வெள்ளியங்குன்றம் செப்பேடு)

செப்பேட்டு வாசகத்தை எழுதிக்கொடுத்தவர் பெயரும் அதனைத் தகட்டில் 'பதிவுசெய்த' ஆசாரி பெயரும் வெள்ளியங்குன்றம் செப்பேட்டில் குறிப்பிடப்படுகின்றன. செப்பேட்டு வாசகத்தை எழுதியவர் திருமலை நாயக்கரின் அரசியல் சமஸ்தானி வெங்கிட்டராயர் ஆவார். அதனைத் தகட்டில் பதிவு செய்தது முத்துவேல் ஆசாரி என்பவர் ஆவார்.

## 9. முடிவு

இத்திருமலை நாயக்கர் காலத்துச் செப்பேடுகளில் ஒருசிலவற்றைத் தவிர பெரும்பாலான செப்பேடுகள் இறுதியில் பிள்ளையார் சுழியுடன் முடிவடைகின்றன. பிள்ளையார் சுழியைத் தொடக்கத்தில் மட்டுமல்லாது முடிவிலும் இவர்கள் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதனை இவ்வழக்கம் காட்டுகின்றது. நாயக்கர் கால மக்கள் ஆரம்பத்திலும் முடிவிலும் தெய்வத்தை நினைத்த, சமயம் சார்ந்த மனநிலை படைத்த மக்கள் என்பதை இது காட்டுகின்றது.

சில பட்டயங்களில் பிள்ளையார் சுழிக்கு முன்பாக முடிவுச்சொல்லாக ஏதாவது ஒரு தெய்வத்தின் துணைவேண்டும் சொல்லும் காணப்படுகின்றது. இத்தெய்வங்களில் மதுரையில் குடிகொண்டிருக்கும் மீனாட்சியின் துணையே பல செப்பேடுகளில் காணப்படுகின்றது. அதனையடுத்து வேறு பெருந்தெய்வங்களும் நாட்டுபுறத் தெய்வங்களும் காணப்படுகின்றன.

(எ.கா.) 'மீனம்மாள் துணை வ' — (சிந்துமேட்டுப்பட்டிச் செப்பேடு)
'சிவமயம்' — (இராமநாதபுரம் செப்பேடு 4)

'சோலைமலைஅழகர் துணை உ' — (அம்மையநாயக்கனூர்ச் செப்பேடு)
'ராமச்சந்திரசகாய உ' — (சிறுவாலை ஜமீன் செப்பேடு)
'உ முணுசாமி துணை உ' — (தருமத்துப்பட்டிச் செப்பேடு-2)

முடிவுச்சொல்லுக்கு முன்பாகவும் பின்பாகவும் பிள்ளையார் சுழி போடும் பழக்கமும் காணப்படுகின்றது. மதுரை ஓதுவார் செப்பேடு வடமொழிச் சுலோகத்துடன் காணப்படுகின்றது. அரசப்பட்டிச் செப்பேடு மட்டும் இறுதியில் "கம்பத்தடியான் கருப்பசாமி கேள்ப்பான்" என்று முடிவடைகின்றது.

**அரச ஆணை**

இச்செப்பேடுகளின் செய்தியமைப்புமுறை திருமலைநாயர்கர் காலத்து அரச ஆணைகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை விளக்குகின்றது. ஒரு செப்பேட்டில் சாசனத்தில் தொடக்கம், காலம், நோக்கம், உரிமைஎல்லை, சாட்சி, கையெழுத்து, ஓம்படைக்கிளவி, பட்டயம் செய்தவர்கள், முடிவு என்ற கூறுகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இச்செப்பேடுகள் நாயக்கரின் 'திருவுள்ளப்படி' 'விடைகொடுத்தபடி' 'உத்தரவுப்படி' எனப் பல இடங்களில் வழங்கப்பட்டிருப்பது அச்செப்பேடுகளிலேயே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதனைச் செப்பேடுகள் பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றன.

"திருவிளம்பற்றுனது விடைபெற்றது சாட்சி" (இலந்தைக்குளம் செப்பேடு)

"பட்டயம் செம்புநாலேயேடுக்கலாகுமென்று
தாம்பூரசாசனத்தில் ராசா விடைகொடுக்க" (இலந்தைக்குளம் செப்பேடு)

"தாம்பூரசாதினப்பட்டயத்துக்கு உத்தறவாக
வேணுமென்று கேட்டார்கள் அந்தப்படிக்கி ...
உத்தறவாச்சுது"...... (இராசாக்காப்பட்டிச் செப்பேடு)

"திருமலைநரேந்திரசுவாமி திருவிளப்பிறசாதப்படி அமுதார்
திருமலைநம்பியன் வயித்தியப்பய்யனவர்கள் சமூகத்தில்
நிலவரம்பண்ணி பட்டயம் எழுதி...குடுத்தது" (சிறுவாலை ஜமீன் செப்பேடு)

இவ்வாறு நாயக்கரின் உத்தரவு கிடைத்தபிறகு அதற்குச் சாட்சியாக உள்ளவர்களைக் குறிப்பிட்டு நாயக்கரும் பாளையக்காரரும் சம்பந்தப்பட்டவர்களும் விபரத்தை எழுதிக் கையொப்பம் இட்டு ஆணையாக ஆக்கி, அதனை அரசை சார்ந்தவர்களை வைத்துச் செப்பேட்டில் பொறித்து உரியவர்க்கு அளித்திருக்கின்றனர். சில இடங்களில் நாயக்கரின் பெருமை, அலுவலர்கள் சாட்சி, நாள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு செப்பேடு வழங்கியிருக்கின்றனர். வெள்ளியங்குன்றம் செப்பேட்டில் திருமலைநாயக்கரின் தளவாய் இராமப்பய்யனும் அவரது சமஸ்தானி வெங்கிட்டராயரும் குறிப்பிடப்படுகின்றனர். சிறுவாலை ஜமீன் செப்பேட்டில் திருமலையின் 'பிறதானி வயித்தியப்பய்யன்' குறிப்பிடப்படுகின்றார். சேதுபதி ஆட்சிப்பகுதியில் வெளியிட்ட செப்பேடுகளைத் திருமலைநாயக்கரும், சேதுபதியும் சேர்ந்து அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது. மதுரை நாயக்கர் பாளையப்பட்டைச் சேர்ந்த பாளையக்காரர்களும் தனித்துச் செப்பேட்டு ஆணைகளை வழங்கும் உரிமை படைத்தவர்களாக விளங்கியிருக்கின்றார்கள்.

# செப்பேடுகளின் காலம்

செப்பேடுகள், கல்வெட்டுகள ஆகியவற்றைப் பொதுவாகக் காலக் கணிப்புச் செய்யும் போது அவற்றில் காணப்படும் ஆண்டுக்குறிப்புகளைக் கொண்டும் அவற்றின் எழுத்தமைதி கொண்டும், செய்திகள், சொற்கள் ஆகியவற்றைக் கொண்டும் கணக்கிடுவது வழக்கம். இவை ஒன்றோடு ஒன்று பொருந்தி வருகிறதா என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆண்டுக்குறிப்புகள் ஒருகாலத்தையும் எழுத்தமைதி மற்றொரு காலத்தையும் காட்டினால் அந்தச் செப்பேடுகள் அல்லது கல்வெட்டுகளைக் கவனத்துடன் கையாள வேண்டும். ஒருவேளை அவை பிற்காலத்தில் எடுக்கப்பட்ட படியாகவோ அல்லது போலி யாகவோ கூட அமைந்து விடுவதுண்டு.

மேற்சொன்ன முறையில் திருமலைநாயக்கர் அளித்த செப்பேடுகள் ஆண்டுக்குறிப்பு களைக் கொண்டும், எழுத்து வடிவ அமைப்பைக் கொண்டும், செய்திகளைக் கொண்டும் இங்கு ஆய்வு செய்யப்பட்டு பட்டியலிடப்படுகின்றன எழுத்தமைதி மற்றும் காலக் கணிப்புக்கு இத்துறையால் படியெடுக்கப்பட்ட செப்பேடுகள் மட்டும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

### எழுத்தமைதி - காலக்கணக்கீடு

திருமலை நாயக்கர் காலச் செப்பேடுகள் நாட்டின் பல பகுதிகளிலிருந்து வெவ்வேறு எழுத்தர்களால் வெவ்வேறு ஆண்டுகளில் எழுதப்பட்டவை. எனவே எழுதியவர்களின் கையெழுத்திற்கு ஏற்ப இவை ஒன்றுக்கொன்று வேறுபட்டு இருப்பது இயல்பே. எனினும் எழுத்துக்களின் அமைதியைக் காணும்போது இவற்றை பன்னிரு வகைகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொருவகையும் ஒன்றுக்கொன்று நெருங்கி இருப்பதை மேலும் கருத்தில் கொண்டால் அவைகளை ஆறு வகைகளாகச் சுருக்க முடியும். இவ்வகையில் திருமலை நாயக்கர் செப்பேடுகள் கீழே பிரிக்கப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| | எழுத்து அமைப்பில் மேலோட்டமாக அமையும் பிரிவுகள் | எழுத்தமைதியில் ஒன்றோடு ஒன்று ஒப்பிடுவதால் நெருங்கி அமையும் பிரிவுகள் |
|---|---|---|
| 1 | சிறுவாலைஜமீன்<br>காந்தீசுவரம் | — 1 |
| 2 | வெள்ளியங்குன்றம்<br>இராமநாதபுரம்-1 | |
| 3 | இராமநாதபுரம்-4<br>இராமநாதபுரம்-2 | — 2 |
| 4 | அம்மையநாயக்கனூர் | |
| 5 | மதுரை ஒதுவார் | |
| 6 | திருமுருகன்பூண்டி | |

| | | |
|---|---|---|
| 7 | இலந்தைக்குளம்<br>சிந்துமேட்டுப்பட்டி<br>மங்கலரேவு-1 | |
| 8 | தருமத்துப்பட்டி-1<br>தருமத்துப்பட்டி-2<br>இராசாக்காபட்டி<br>பொம்மயக்கவுண்டன்பட்டி-1 | — 3 |
| 9 | அரசப்பட்டி<br>தருமத்துப்பட்டி-3<br>இராமநாதபுரம்-3<br>சென்னை அருங்காட்சியகம்-1 | — 4 |
| 10 | பொம்மயக்கவுண்டன்பட்டி-2<br>பொம்மயக்கவுண்டன்பட்டி-3<br>பொம்மயக்கவுண்டன்பட்டி-4 | — 5 |
| 11 | இராமநாதபுரம்-4 | — 6 |

இரண்டாவதாகக் கிடைக்கும் ஆறுவகைப் பிரிவுகளில் முதல்வகைச் சிறுவாலைஜமீன் செப்பேடும், காந்தீசுவரம் செப்பேடும் தனித்தன்மையுடன் கி.பி. 16—17-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியோடு விளங்குகின்றன. இது அரசவை எழுத்தச்சர்களால் எழுதப்பட்டது என்று கருதமுடிகிறது. இரண்டிலிருந்து நான்கு வரையிலான பிரிவுகளில் அடங்கும் செப்பேடுகள் திருமலைநாயக்கர் காலத்திய அரசவை எழுத்தச்சன் செலுத்தும் கவனத்திற்கு ஏற்ப அமையாது மக்கள் மத்தியில் விளங்கிய எழுத்தச்சர்களால் எழுதப்பட்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. ஐந்தாவது பிரிவில் வரும் செப்பேடுகள் திருமலைநாயக்கர் காலத்து எழுத்தமைதிக்கு மிகப் பிற்பட்டவை. ஆறாவது பிரிவில் வரும் செப்பேடு மிக அண்மைக் காலத்தில் எழுதப் பட்டிருக்க வேண்டும்.

பொதுவாக எழுத்தமைதியைக் கணக்கிடும்போது நூற்றாண்டுகளைக் காலப்பிரிவாகக் கொண்டு இந்த நூற்றாண்டு எழுத்தென்று கூறுவது வழக்கம். இப்படிக்கணித்துக் கூறும் காலக்கணக்கீட்டினைக் கணக்கிட்ட காலத்திற்கு 100 ஆண்டுகள் முன்பின்னாக எடுத்துக் கொள்ளல் வேண்டும் என்பர்.[1] திருமலை நாயக்கர் ஆட்சிக்காலமே ஒரு நூற்றாண்டு அளவு இல்லாது 31 ஆண்டுகளுக்குள் (கி.பி. 1628—1659) அமைந்துள்ளதால் இவ்வகைக் காலக் கணக்கீடு இங்குப் பயன்படவில்லை.

எனவே எழுத்தமைதியைவிடச் செப்பேடுகளில் குறிப்பிடப்படும் சகாப்தம், தமிழ் வருடம் (60 வருட சுழற்சி வருடங்கள்) போன்ற ஆண்டுக்குறிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க் வேண்டியுள்ளது. சில செப்பேடுகளில் காணப்படும் சொற்களும் (ரூபாய், தாலுகா, ராணுவம் போன்ற) கணக்கிடும் காலம் சரிதானா என்று ஒப்பிட்டு நோக்கவேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகின்றன.

## ஆண்டுக் குறிப்புகளைக் கொண்டு காலக்கணக்கீடு

திருமலைநாயக்கர் செப்பேடுகள் அனைத்திலும் தமிழாண்டுக் (60 வருட சுழற்சி ஆண்டுகள்) குறிப்புகள் வருகின்றன. சில செப்பேடுகளில் சகம், கலி, கொல்ல ஆண்டுக் குறிப்புகளும் காணப்படுகின்றன. சில செப்பேடுகளில் தமிழாண்டு குறிப்பிடும் காலத்திற்கும், பிற ஆண்டுகள் குறிப்பிடும் காலத்திற்கும் முரண்பாடுகளுடன் ஒன்றுக்கொன்று பொருந்தி வராதிருப்பதும் உண்டு. முரண்படும் செப்பேடுகளில் கலி, சகம், கொல்ல ஆண்டு தவறாகப் பொறிக்கப்பட்டதா? அல்லது தமிழாண்டு தவறாகப் பொறிக்கப்பட்டதா? என்பது தெளிவு பெறப்பட வேண்டிய ஒன்றாகும். நாயக்கர் காலத்தில் மக்கள் நடுவில் கலி, சக, கொல்ல ஆண்டுகளை விடத் தமிழாண்டுகளே அதிகப் புழக்கத்தில் இருந்திருக்கின்றன. அதனால்தான் திருமலைநாயக்கர் செப்பேடுகள் அனைத்திலும் தமிழாண்டுகள் காணப்படுகின்றன. எனவே முரண்பாடான ஆண்டுக்குறிப்புகள் உள்ள செப்பேடுகளில் தமிழாண்டுக் குறிப்புகளே நம்பகரமானவை என்று கருதலாம்.

இதுவரை கிடைத்துள்ள திருமலைநாயக்கர் செப்பேடுகளில் குறிப்பிடப்படும் ஆண்டுக் குறிப்புகளும், இயன்றவரை அவற்றிற்கு இணையாக ஏற்புடைய கிறித்தவ ஆண்டும் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

# திருமலைநாயக்கர் காலச் செப்பேடுகள் உணர்த்தும் செய்திகள்

### திருமலைநாயக்கரின் பண்புகள்

திருமலைநாயக்கர் காலச் செப்பேடுகள் அவரது அகவாழ்வைப்பற்றியும் புறவாழ்வைப் பற்றியும் கீழ்க்காணும் பல புதிய செய்திகளைத் தருகின்றன.

### புலியைக் கொன்றவருக்குப் பரிசு

திருமலைநாயக்கர் ஸ்ரீவில்லிப்புத்தூருக்குச் செல்லும் வழியில் அமைந்த திருவண்ணாமலை என்ற ஊரில் தங்கியிருந்தார். அப்போது அப்பகுதியில் இருந்த வெள்ளிக்குறிச்சிப் பாளையக்காரர் புலியினால் அவ்வூரில் ஒருவர் சாவதற்குக் காரணமாத அமைந்ததைக் கண்டு அவரைக் கடிந்து கொண்டதை இலந்தைக்குளம் செப்பேடு தெரிவிக்கிறது உடனே அவ்வூரில் அவ்விடத்திலேயே திருமலைநாயக்கர் மக்களைத் துன்புறுத்தும் அப்புலியைக் கொல்ல முன்வருகின்றவர்களுக்கு அரசனாகிய தன் கையினாலேயே வெற்றிலையை அளிக்கின்றேன் என்று கூறி அப்புலியைக் கொல்லும்படிச் செய்திருக்கின்றார். புலியைக் கொன்றவர்க்கு 'திருமலைமூவரையதேவன்' என்று பட்டமளித்து நாட்டாண்மைப் பதவியும் அளித்துப் பட்டயமும் வழங்கியிருக்கின்றார்.

### புலிவேட்டைக்குப் போனது

திருமலைநாயக்கர் ஒய்வு நேரங்களில் புலிவேட்டைக்குப் போவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவ்வாறு ஒரு நாள் மதுரைக்கு மேற்கே மேலக்கால் பகுதியிலுள்ள நாகமலை அடிவாரத்தில் வேட்டையாடும்போது அவரை அறியாமலேயே அவர்மீது பாயவிருந்த புலியைக் கொன்ற வீரனை மனமகிழ்ந்து பாராட்டினார். அவ்விடத்திலேயே தனது கழுத்தில் அணிந்திருந்த கொத்துச்சரத்தினை அவ்வீரனுக்கு அணிவித்து ஊர்ப்பகுதியில் விருந்தும் வைத்தார். அரண்மனைக்குக் கூட்டிவந்து அவன் வேண்டிக்கொண்டபடி வாகைக் குளம் என்ற ஊருக்கு நாட்டாண்மையாக ஆக்கினார் (சிந்துமேட்டுப்பட்டிச் செப்பேடு). தன்னைக் காத்தவன் சாதாரண நிலையிலுள்ள வீரனாக இருந்தாலும் அவனுக்கு விருந்து அளித்துப் பதவியும் அளித்து நன்றிக்கடன் காட்டியவர் திருமலைநாயக்கர் என்பதை இந்நிகழ்ச்சி காட்டுகிறது.

### பல்லக்குத் தூக்கிகளுக்கு மானியம்

திருமலைநாயக்கரின் தலைநகர் மதுரையாக இருந்தாலும் சில நேரங்களில் அவசரத் தேவையின் காரணமாகத் திருச்சிக்குச் சென்று வந்திருக்கின்றார். ஒருசமயம் திருச்சிக்குச் சென்று மீண்டும் மிக விரைவில் மதுரைக்கு வரவேண்டிய சூழ்நிலை நாயக்கருக்கு ஏற்பட்டது. ஆனால் அவரை அவர் நினைக்கும் வண்ணம் பல்லக்கில் தூக்கிச் சென்று திரும்பமுடியாத நிலையில் அவரது பல்லக்குத் தூக்கிகள் இருந்தனர். பின்னர் அதற்குரிய தகுதியானவர்கள்

அம்மையநாயக்கனூர்ப் பல்லக்குத்தூக்கிகள் என்று அறிந்து அவர்கள் மூலம் திருச்சிக்குச் சென்று திரும்பிவந்தார். தான் நினைத்தபடி செய்த அப்பல்லக்குத் தூக்கிகளைப் பாராட்டி அவர்களுக்கு மானியமும் அளித்ததை அம்மையநாயக்கனூர்ச் செப்பேடு தெரிவிக்கிறது.

## நாயக்கரின் நீதிமுறையும், நல்லிணக்க மனப்பான்மையும்

திருமலைநாயக்கரின் நீதிமுறையைப் புலப்படுத்தும் முறையில் இரண்டு செப்பேடுகள் கிடைத்துள்ளன. மதுரைமாவட்டத்து தி. கல்லுக்குப்பட்டிக்கு அருகிலுள்ள நல்லமறம் என்ற ஊரில் தங்கியிருந்தபோது அவர்முன் வழக்கு ஒன்று வந்தது. ரெட்டியார் சமூகத்தினைச் சார்ந்த ஒருவன் தனக்கு உரிமை உடைய ஊரினைப் பொதுவிடத்தில் வந்து விற்க முனைந்தான். அப்போது அவனது தகுதிக்கும் தாழ்ந்த ஒருவன் அவனிடம் வந்து ஊரை வாங்க விலை கேட்டான். ஊரை விற்க வந்தவனோ அவனைத் திட்டி, குலத்தில் தாழ்ந்தவன் என்று கூறி அனுப்பினான். திட்டப்பட்டவன் மனம் வருந்தி, அப்போது நல்லமறந்தில் வந்து தங்கிய நாயக்கரிடம் சென்று முறையிட்டான். திருமலைநாயக்கர் அவனது முறையீட்டிற்குச் செவிசாய்த்து இருவரையும் அழைத்து விசாரித்து விலைப்பொருள் தந்தவர் யாராய் இருந்தாலும் அவர்களிடம் சொத்துக்குரியவர் மறுக்காது சொத்தினை அளிக்க வேண்டியதுதான் முறை என்று தீர்ப்பு வழங்கினார். அத்துடன் நில்லாமல் தாழ்ந்தவன் என்று திட்டப் பட்டவனின் நிலைக்கு இரங்கி அவனுக்கு 'நாயக்கன்' என்ற பட்டமளித்து அவனது சமூக மதிப்பைக் கூடியிருந்த அனைவரின் முன்னர் உயர்த்திக் காட்டிய பேருள்ளம் கொண்டவராகத் திருமலைநாயக்கர் திகழ்ந்தார் என்பதை மங்கலரேவுச் செப்பேடு உணர்த்துகிறது.

நாயக்கர், குடியேற்றம் தொடர்பான வழக்கு ஒன்றையும் தமது பயணத்தின்போது தீர்த்து வைத்ததைப் பொம்மையக் கவுண்டன்பட்டிச் (அல்லி நகரம்) செப்பேடு தெரிவிக்கிறது. அல்லிநகரம் என்ற ஊர் உண்டாக்கப்பட்டு அதில் முறைப்படி முதலில் குடியேறியவனிடம் அடுத்து வந்தவன் தகராறு செய்தான். பாளையக்காரர்கள் இவ்வழக்கைத் தீர்க்க முன்வர வில்லை. அப்போது அப்பகுதிக்கு வந்திருந்த நாயக்கரிடம் அவ்வழக்குச் சென்றது. நாயக்கர் அவ்வழக்கை நன்கு கேட்டு, முதலில் குடியேறியவனுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கினார் என்று அச்செப்பேடு தெரிவிக்கிறது.

## கோயிலில் களவு போன பொருட்களை மீட்டல்

திருமலைநாயக்கரின் மதிப்பையும் காவலையும் பெற்று விளங்கிய கோயிலாக அழகர் கோயில் இருந்திருக்கிறது. நாயக்கர் அக்கோயிலைப் பாளையக்காரரின் காவல் பொறுப்பில் வைத்துக் கண்காணித்து வந்தார். அதற்காக மானியமும் வழங்கியிருந்தார். ஒருசமயம் கோயிற்காவலை மீறி வேடர்கள் புகுந்து அக்கோயிலின் விலைமதிப்பற்ற பொருட்களைக் களவுசெய்து ஓடி மறைந்தனர். இதுபற்றித் தலத்தார் திருமலைநாயக்கரிடம் சென்று முறையிட்டனர். நாயக்கர் வெள்ளியங்குன்றம் பாளையக்காரரைக் கொண்டு கள்வர்களைப் பிடித்து மீண்டும் களவு போன பொருட்களைக் கோயிலில் சேர்த்தார். கோயிலுக்கு வந்த தீங்கை உடனே நீக்கவேண்டும் என்ற சமயப்பற்றாளராக நாயக்கர் விளங்கினார் என்பதை வெள்ளியங்குன்றம் செப்பேடு விளக்குகிறது.

### ஓதுவாருக்கு மானியம்

தனது வாழ்நாளில் கோயிற்பணிகள் பலவற்றில் தொடர்ந்து ஈடுபட்டவர் திருமலை நாயக்கர். பல அறக்கொடைகளைக் கோயில்களுக்கு அளித்திருப்பதை வரலாற்றுச் சான்றுகள் பல உணர்த்துகின்றன. இவ்வகையில் திருமுறைகள் கோயிலில் ஓதிவர ஏற்பாடு செய்திருப்பதை மதுரைச் செப்பேடு ஒன்று தெரிவிக்கிறது. இச்செப்பேடு மதுரையில் இருந்த ஓதுவார் ஒருவருக்குச் செங்குளம் என்ற ஊரைத் தானமாகத் தந்ததை எடுத்தியம்புகிறது. தெலுங்கர் குடியில் வந்திருப்பினும் தமிழ்மறை கோயில்களில் ஒலிப்பதற்கு வழிவகுத்த தமிழ்ப் பற்றாளர் என்பதை நாயக்கரின் இச்செயல் காட்டுகிறது.

### அறப்பணிகளுக்கு ஆதரவு

திருமலைநாயக்கர் அறப்பணிகள் செய்த பிறரையும் போற்றி அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் அறநெறியாளராக விளங்கியதை இராசாக்காப்பட்டியில் கிடைத்த செப்பேடு ஒன்று உணர்த்துகிறது. திருவத்தேவன், பேய்த்தேவன் என்ற இருவர் ஆள் இல்லாத காட்டுவழியில் கணவாய்க்கு அருகில் தண்ணீர்ப்பந்தல் வைத்துச் சுமைதாங்கிக்கல்லும் நிறுத்தி, விநாயகர் கோயிலும் கட்டி, வழிச்செல்வோருக்குத் தொண்டு செய்து வந்தனர். திருமலைநாயக்கர் அப்பகுதி வழியாகச் சென்றபோது அவர்கள் மூலமாக அவர்களது அறப்பணிகளைக் கேட்டறிந்து அவர்கள் கேட்டுக்கொண்டபடி உடனே அத்தர்மத்திற்கு மானியம் அளித்து ஆணையும் வழங்கியதை அச்செப்பேடு அறிவிக்கிறது.

### குடும்பனுக்கு மானியம்

சமூகத்தில் தாழ்ந்தவரிடத்தும், ஆதரவற்றவரிடத்தும் பரிவு காட்டுவது திருமலை நாயக்கரின் பண்பாகத் திகழ்ந்துள்ளதைப் பல பட்டயங்கள் காட்டுகின்றன. சமூகத்தில் உயர்குடிப் பிறந்தவராக இருந்தாலும் தாழ்ந்த குலத்தவராக இருந்தாலும் இருவரையும் தம்மை நேரில் காண அனுமதியளித்து அவர்களது குறைகளைக் கேட்டுப் போக்கியிருக்கின்றார் திருமலைநாயக்கர் அவர் திருமங்கலம் வட்டத்துப் பகுதிகளிலுள்ள ஊர்களைக் காணச் சென்றபோது கண்மாயில் நீரையடைத்துத் திறக்கும் குடும்பன் ஒருவன் தனக்கு மானியம் இல்லாது இருக்கும் நிலையை அவரிடம் நேரில் வந்து எடுத்துரைத்தான். அவனது குறையைச் கேட்டறிந்த நாயக்கர் உடனே அவன் கேட்டுக்கொண்டபடி அவன் செய்த பணிக்கு மானியம் அளித்துச் செப்பேடும் வழங்கினார். திருமலைநாயக்கர் அளித்த பட்டயம் இன்றும் அரசப்பட்டியிலுள்ள அப்பள்ளர் சமூக வழியினரிடத்து இருந்து வருகின்றது.

### குடித்தலைவர்களுக்கு அதிகாரம் அளித்தல்

மதுரை மாவட்டத்தில் நாயக்கர் காலத்தில் வாழ்ந்த கள்ளர் குடியினர்க்குத் திருமலை நாயக்கர் மதிப்பளித்து அவர்களது சமூகத்தலைவர்களுக்கு அதிகாரமும் அளித்துள்ளார். கள்ளர் நாட்டின் நிர்வாகத்தினை தமக்கு ஆதரவாக இருக்கும்படிப் பார்த்துக்கொண்டார். இதுவே அவரது நாட்டு அரசியல் நெறியாக இருந்தது. நாயக்கர்குடித் தலைவர்களுக்கு வழங்கும் கம்பளி அதிகாரம் போன்றவற்றைப் புன்னைத்தேவன் வழியினர்க்குத் திருமலை நாயக்கர் அளித்துள்ளதைத் தருமத்துப்பட்டிச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. புன்னைத் தேவனுக்கு அவனது நாட்டுக் குடியினைச் சார்ந்தவர்களும் இடைக்குடியினைச் சார்ந்தவர்களும் அளிக்கவேண்டிய மரியாதையை வரையறுத்து நாயக்கர் செப்பேடும் வழங்கியுள்ளார்.

இதனால் கள்ளர்நாடு திருமலைநாயக்கர் காலத்தில் அவரது ஆட்சிக்குத் துணைசெய்யும் நாட்டுப் பகுதியாக விளங்கிற்று எனலாம்.

இதேபோன்று நாயக்க மக்கள் வாழும் இடங்களில் அக்குடியினரின் வழிவந்த பெரியவர்களுக்குக் கம்பளி அதிகாரம் அளித்து அச்சமூகத்தின் பிரச்சனைகளை அவர்களே தீர்மானிக்கும்படி விட்டுவிட்டதைப் பொம்மையக்கவுண்டன்பட்டி என்ற ஊரில் கிடைத்த செப்பேடுகள் தெரிவிக்கின்றன. நாட்டிலுள்ள குடிகளை அக்குடிகளின் தலைவர்களைக் கொண்டே ஆளும் அரசியல் வழியாக இது அமைந்திருந்தது என்று கூறலாம்.

## திருமலைநாயக்கரின் பயணம்

திருமலைநாயக்கர் பாண்டிநாட்டு மக்களிடையே அழியாத இடத்தைப் பெற்று விளங்கும் மன்னராக விளங்கியமைக்கு எதிலும் உடனுக்குடன் நல்ல முடிவெடுக்கும் அவரது பண்பே காரணமாக அமைந்தன எனலாம். மேலும் அவர் தமது ஆட்சிக்காலத்தில் தனது ஆட்சிப்பகுதிகளுக்கு அடிக்கடி பயணம் செய்து மக்களின் குறைகளைக் கண்டு போக்கினார். அவரது இப்பண்பு மக்கள் மனத்தில் அவருக்கு நிலையான இடத்தைத் தேடித்தந்தது. எத்தரப்பினராக இருந்தாலும் அவர்களைச் சந்தித்து அவர்களது பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்க முற்பட்டார் என்பதைப் பல பட்டயங்கள் காட்டுகின்றன. தனது ஆட்சிச் சீர்மையைப் பார்க்கத் திருமலைநாயக்கர் நாட்டில் பல பகுதிகளில் இருந்த ஊர்களில் தங்கியதைப் பட்டயங்கள் தெரிவிக்கின்றன.

திருவண்ணாமலை (ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதி), குமாரக்கோயில் (உசிலம்பட்டிப்பகுதி), கவுண்டன் கோட்டை (திருமங்கலம்பகுதி), நல்லமறம் (தி.கல்லுப்பட்டிப்பகுதி) திண்டுக்கல் போன்ற பல ஊர்களுக்குச் சென்று திருமலைநாயக்கர் தங்கினார். அப்போது அப்பகுதிகளில் நடந்த நிகழ்ச்சிகள் பலவற்றைப் பட்டயங்கள் விரித்துக் கூறுகின்றன.

## திருமலையின் பெயர்கள்

திருமலைநாயக்கர் பட்டயங்கள் அவரைப் பலவாறாக அறிமுகம் செய்து கூறுகின்றன. இவை நாயக்கரின் ஆளுமையையும் பெருமன்னராக அவர் ஆட்சி புரிந்தமையையும் காட்டு கின்றன. அவரைப் பல செப்பேடுகள் மதுராபுரிக்குக் கர்த்தர் என்றே குறிப்பிடுகின்றன. சிறுவாலை ஜமீன் செப்பேடு, 'திருமலைநரேந்திரன்' என்று அழைக்கின்றது.

## அரச மரியாதை

அரசனையும் பெரியவரையும் பார்க்கும்போது பரிசுப்பொருள்கள் பலவற்றை அவர்கள் முன் வைத்துக் காண்பது வழக்கமாக இருந்தது. திருமலைநாயக்கரை அவரது பயணத்தின்போது பார்த்தவர்கள் அவருக்குக் காணிக்கையாய்ப் பல பொருள்களை அவர் முன் வைத்து மரியாதை செலுத்தியதைப் பல பட்டயங்கள் தெரிவிக்கின்றன இராசாக்காப் பட்டிச் செப்பேடு திருவத்தேவன், பேய்த்தேவன் என்ற இருவர் தங்கப்பூ, வெள்ளிப்பூ, பாற்பசு, அரிசி ஐந்து கலம், ஆட்டுக்கிடாய் ஏழு, நவபாண்டத்துடன் பாதகாணிக்கைப் பொன் ஐம்பதும், திருமலைநாயக்கருக்கு முன் வைத்துப் பார்த்ததாகக் கூறுகின்றது. அரசப்பட்டி வீரக்குடும்பன் என்பவனும் இவ்வாறு பல பொருள்களுடன், பாதகாணிக்கைப்

**அதிகாரிகள்**

திருமலைநாயக்கரிடம் பணிபுரிந்த அரசியல் அதிகாரிகளின் பதவிகளையும், பெயர்களையும் செப்பேடுகள் மூலம் அறியமுடிகின்றது. திருமலைநாயக்கரின் மந்திரியாகவும் தளவாயாகவும் விளங்கியவர் இராமப்பைய்யர். பிறதானியாக விளங்கியவர் வைத்தியப்பைய்யர். இராயசம் சமஸ்தானியாக விளங்கியவர் வெங்கிட்டராயர், என்பதை வெள்ளியங்குன்றம் செப்பேடு மூலம் அறியமுடிகிறது. ரெங்கா ரெட்டியார் நாயக்கரின் அவையில் பணியாற்றிய மற்றொரு முக்கிய அதிகாரி ஆவார் என்பதை அம்மையநாயக்கனூர்ச் செப்பேடு தெரிவிக்கிறது. மும்முடிசெட்டியார் என்பவர் கருவூல அதிகாரியாகத் திருமலை நாயக்கரிடத்துப் பணியாற்றியதை வேதபுரீஸ்வரர் கோயில் செப்பேடு கூறுகிறது. திருநெல்வேலிப் பகுதியில் நாயக்கரின் பிரதிநிதியாக இருந்து நிர்வாகம் செய்தவர் வடமலையப்பபிள்ளையாவார் என்பதைக் காந்தீசுவரம் செப்பேடு உணர்த்துகிறது. சித்தரேவுச்செப்பேடு அனந்தனாரணய்யன் என்பவர் திண்டுக்கல் பகுதிக்கு அதிகாரியாக இருந்தார் என்பதைத் தெரிவிக்கிறது

**படை**

நாயக்கர் கடல்போன்ற பெரும்சேனையினைத் தமது நிர்வாகத்தில் வைத்திருந்தார். அப்படையுடன் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று வந்திருக்கின்றார் என்பதையும் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. இலந்தைக்குளம் செப்பேடு திருமலைநாயக்கர் 'ரத கெச துரக பதாதி சேனையுடனே சமுத்திரகோசம் போலவே மகா ஆடம்பரத்துடனே' சென்றார் என்று கூறுகிறது.

நாயக்கர் காலத்தில் பலவிதமான ஆயுதங்களை வீரர்கள் பயன்படுத்தியுள்ளனர். 'சிங்கமுகவேல்' போன்ற ஈட்டியை அவர்கள் படைக்கலனாகக் கொண்டிருந்தனர். (இலந்தைக்குளம்செப்பேடு). கல் உருண்டைகளைத் தோட்டாவாகப் பயன்படுத்தும் துப்பாக்கியும் நாயக்கர் படைவீரர்களிடத்து இருந்தது. இது 'கல்வெடி' என்றும் அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்க செய்தியாகும் (சிந்துமேட்டுப்பட்டிச்செப்பேடு).

**நாடு, ஊர்ப்பிரிவுகள்**

நாயக்கர் காலத்தில் இருந்த நாட்டுப்பிரிவு ஊர்ப்பிரிவுகள் பற்றிப் பல செய்திகளைப் பட்டயங்கள் தெரிவிக்கின்றன. திருமலைநாயக்கர் காலத்தில் பாண்டிமண்டலம் பதிநான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது. இம்மண்டலங்கள் வளநாடு, நாடு, கூற்றம் என்ற பண்டைய பிரிவுகளை உடையனவாக விளங்கின. நாட்டுப்பகுதியைக் குறிக்கச் 'சீர்மை என்ற சொல்லும் இக்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிறுநாட்டுப் பிரிவுகளின் உள்பிரிவாக 'மாகாணம்' (மாகாணி) என்ற பிரிவு நாயக்கர் காலத்தில் வழக்கிற்கு வந்திருக்கிறது. பாளையத்தினை சார்ந்த கிராமங்கள் சமூககிராமங்கள் என்று அழைக்கப்பட்டன. அக்கிராமத்தினைச் சார்ந்த ஊர்கள் 'சேகரம்' என்று பெயர் பெற்று விளங்கின. அவற்றின் உட்புறம் 'உள்ளடையம்' என்று குறிப்பிடப்பட்டது.

**நாட்டு நிர்வாகம் - பாளையக்காரர்கள்**

நாயக்கர் நாடு பல பாளையங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றிற்குப் பெரும்பாலும் நாயக்கர் சமூகத்தினைச் சார்ந்த கன்னடம், தெலுங்குமொழி பேசும் பாளையக்

காரர்களே தலைவர்களாக இருந்தனர். 'பாளையத்திற்குக் கர்த்தர்கள்' என்று இவர்கள் அழைக்கப்பட்டனர். மதுரையில் இருந்த கோட்டையின் கொத்தளங்களைக் காக்கும் பொறுப்பு இவர்களைச் சார்ந்திருந்தது. மதுரைக்கோட்டையின் வடக்குவாசல் அனுமார் கோயில் கொத்தளத்தின் காவல் பொறுப்பை வெள்ளியங்குன்றம் பாளையக்காரர் இம்முடி கனகராமைய்ய கவுண்டர் வழியினர் ஏற்று நடத்தியிருக்கின்றனர். (வெள்ளியங்குன்றம் செப்பேடு). நாட்டுக்காவலையும், கோட்டைக் காவலையும் மட்டுமல்லாமல் கோயில்களைக் காவல்காக்கும் பொறுப்பையும் பாளையக்காரர்கள் மேற்கொண்டிருக்கின்றனர். சிறுவாலைப் பாளையக்காரர் அழகர்கோயிலைக் காவல்காக்கும் பொறுப்பை ஏற்று அதற்காக மானியமும் பெற்றிருக்கின்றார் (சிறுவாலை ஜமீன் செப்பேடு).

திருமலைநாயக்கருக்குப் பாளையக்காரர்கள் காட்சி, கப்பம் காணிக்கை போன்ற பல வரிகளைப் பொன்னாகவும், நெல்லாகவும் செலுத்தியிருக்கின்றனர். சில வேளைகளில் பாளையக்காரர் இருசால் கட்டுகின்ற நெல்லும் பொன்னும் அவர்கள் செய்த தீரச்செயலுக்காக நாயக்கருக்குக் கட்டவேண்டாம் என்றும் முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது (இலந்தைகுளம் செப்பேடு). திருமலைநாயக்கர் தனது நாட்டுப்பகுதிகளைச் சுற்றிப்பார்க்கச் சென்றபோது இப்பாளையக்காரர்கள் உடன்வந்து நாயக்கருக்கு மரியாதை செய்திருக்கின்றனர். நாயக்கர் இவர்களின் துணைகொண்டே அப்பகுதியின் பிரச்சனைளைத் தீர்வு செய்திருக்கின்றார் என்பதையும் அவர்கள் தங்களது பொறுப்பைச் சரிவர நிறைவேற்றாது போனால் அவர்களைக் கண்டித்துத் தவறுகளைத் திருத்தியிருக்கின்றார் என்பதையும் இலந்தைக்குளம், மங்கலரேவு, வெள்ளியங்குன்றம் செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

திருமலைநாயக்கர் பட்டயங்களில் கீழ்க்காணும் பாளையக்காரர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| வெள்ளிக்குறிச்சி | — | சீரங்கநாயக்கர் |
| கண்டமநாயக்கனூர் | — | கண்டமநாயக்கன் |
| பேரையூர்ப்பகுதி | — | முத்துலிங்கத்தும்மிச்சிநாயக்கன் |
| அம்மையநாயக்கனூர் | — | கூளப்பநாயக்கன் |
| சிறுவாலை | — | இம்முடிஅச்சுதராயக்கவுண்டர் |
| வெள்ளியங்குன்றம் | — | இம்முடிகனகராமைய்யக்கவுண்டர் |
| அய்யப்பநாயக்கன்பட்டி | — | அய்யப்பனாயக்கர் |
| குருவுரெட்டி | — | நாவாறுநாயக்கன் |
| கொட்டாணிபட்டி | — | வெள்ளையநாயக்கன் |

கள்ளர் நாட்டின் தலைவர்களாகவும் பட்டயத்திற்குச் சாட்சியம் அளித்தவர்களாகவும் செப்பேடுகளில் பின்வரும் மறக்குடித் தலைவர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

திடியன் தூங்காத்தேவன்
விக்கிரமங்கலம் ஆண்டித்தேவன்
புன்னைத்தேவன்
திருவத்தேவன்

பேய்த்தேவன்
சுந்தத்தேவன்
ஒச்சாத்தேவன்
கருமாத்தூர் கொண்டிரி மாயாத்தேவன்

**ஊர் நிர்வாகம்**

'நாட்டாண்மை' என்று அழைக்கப்பட்டவரே நாயக்கர் காலத்தில் ஊர் நிர்வாகத்தின் பொறுப்பாளராக விளங்கினார். இவருக்குத் துணையாகக் 'கணக்கர்' இருந்தனர். நாட்டாண்மைக்கு மானியமாக அறுபது பொன் அளிக்கப்பட்டுள்ளது. ஒன்று முதல் ஐந்து கிராமங்கள் வரை நாட்டாண்மைக்காரரின் பொறுப்பில் இருந்திருக்கின்றது. இவற்றைச் சுற்றிப் பார்ப்பதற்குக் குதிரை ஒன்றும் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களில் நடக்கும் காரியங்களில் முதல் மரியாதை நாட்டாண்மைக்காரர்க்குத் தரப்பட்டிருக்கிறது என்பதைச் சிந்துமேட்டுப்பட்டிச் செப்பேடு தெரிவிக்கிறது. இவருக்குத் துணை செய்த கணக்கருக்கு முப்பது பொன் மானியமாக அளிக்கப்பட்டுள்ளது. ஊர் நாட்டாண்மையை நியமிக்கும் பொறுப்பை மன்னனும் பாளையக்காரரும் செய்திருக்கின்றனர் என்பதைச் சிந்து பட்டி, இலந்தைக்குளம், மங்கலரேவுச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

**கோயிலும் தெய்வங்களும்**

திருமலைநாயக்கர் காலப்பட்டயங்கள் மூலமாக இருவேறுபட்ட தெய்வ மரபுகள் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. பெருந்தெய்வங்களில் மீனாட்சியம்மனும், மதுரைச் சொக்கரும், சோலைமலை அழகரும் தலையாய இடத்தினைப் பெற்று விளங்கியுள்ளனர். இவர்களது 'துணையாகப்' பல பட்டயங்கள் வழங்கப்பட்டுள்ளன. இராமன் வழிபாடும் நாட்டில் செல்வாக்குப் பெற்று விளங்கியிருக்கின்றது. பல பட்டயங்களில் நாயக்கர் காலத்தில் வைணவ சமய மரபு போற்றப்பட்டது என்பதற்கு அடையாளமாகத் தொடக்கத்தில் 'ராமசெயம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பழனிமலை முருகனும், இராமேசுவரசுவாமியும் பெருந்தெய்வங்களாக இப்பட்டயங்களில் குறிப்பிடப்படுகின்றனர். இத்தெய்வங்கள் உறையும் தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்வது புனிதமாகக் கருதப்பட்டது.

வெள்ளியங்குன்றம் செப்பேடு அழகர் கோயிலில் நடைபெறும் தேரோட்டம், ஆடி, சித்திரை திருவிழாக்களைப் பற்றி எடுத்துக் கூறுகின்றது. இத்திருவிழாக்களைப் பாளையக் காரர்கள் திருமலைநாயக்கர் ஆணைப்படி முன்னின்று நடத்தியிருக்கின்றனர். இதற்குரிய காவற்பொறுப்பையும் அவர்களே ஏற்று நடத்தினர். திருவிழாக்களில் முதன்மை மரியாதையும் பாளையக்காரர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தீர்த்தம், திருமாலை, பட்டுப்பரிவட்டம், முதலியன பாளையக்காரர்க்கு அளிக்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டதை வெள்ளியங் குன்றம், சிறுவாலைச் செப்பேடுகள் உணர்த்துகின்றன.

நாட்டுப்புறங்களில் உறைந்த சிறுதெய்வங்கள் மீதும் மக்கள் பயமும் பக்தியும் கொண்டிருந்தனர். என்பதைப் பல பட்டயங்களின் மூலமாக உணரமுடிகிறது, முனுசாமி, கம்பத்தடிக் கறுப்பசாமி, அய்யனார், அல்லியம்மாள், பொம்மயக்காள். நாட்டாச்சியம்மன் போன்ற பல சிறு தெய்வங்கள் மக்கள் மனதில் இடம்பெற்றிருந்த தெய்வங்களாகப் பட்டயங்களில் குறிப்பிடப்படுகின்றன.

### சமூகப் பிரிவுகள்

நாயக்கர் காலச் சமுதாயம் உயர்வு தாழ்வு உடைய சமூகப் பிரிவுகளைக் கொண்டிருந்தது என்பதைச் செப்பேடுகள் காட்டுகின்றன. அய்யர், பிள்ளை, முதலியார், ரெட்டியார், கவுண்டர், ஆசாரி, செட்டியார், கோனார், போயர், நாடார் என்று சாதிப் பெயர்களைக் குறிக்கும் பட்டப்பெயர்களை மக்கள் வைத்துக் கொண்டிருந்தனர். பிறப்பின் அடிப்படையில் சாதிப்பிரிவுகளைக் கருதும் வழக்கம் நிலவியிருக்கிறது. ஒவ்வொரு சமூகப் பிரிவினரும் தங்கள் சமூகப் பிரிவிற்கு ஏற்றார்போல் தொழில் செய்து வாழ்ந்தனர் என்பதையும் செப்பேடுகள் மூலம் அறியமுடிகிறது.

### பிராமணர்

சமூகத்தில் மிகுந்த உயர்மதிப்புடையவர்களாகப் பிராமணர் விளங்கினர். திருமலை நாயக்கரின் நிர்வாகத்தில் தளவாய், பிறதானி ஆகிய பொறுப்புகளை இராமப்பையயன், வயித்தியப்பையன் போன்ற பிராமணர்கள் பெற்றுப் புகழுடன் விளங்கியுள்ளனர். அக்காலத்தில் கோயில் நிர்வாகத்திலும் பிராமணர்க்கு முக்கியப்பங்கு இருந்திருக்கிறது. சிவப்பிராமணர்களே பெருங்கோயில்களுக்கு வழிபாட்டை நடத்துபவர்களாக இருந்திருக்கின்றனர். நாயக்கர் காலத்தில் இராமேசுவரம் கோயிலில் வழிபாட்டிற்குத் தமிழ் நாட்டிற்கு வெளியிலிருந்தும் பிராமணர்கள் குடியேற்றப்பட்டிருக்கின்றனர். மகாராட்டிரப் பகுதியிலிருந்த அந்தணர்கள் இராமேசுவரம் பகுதியில் குடியேற்றப்பட்டு இராமேசுவரம் கோயிலில் வழிபாடு நடத்தும் தலைமைக் குருக்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை இராமேசுவரம் குருக்கள்மார் இசைவுமுறி தெரிவிக்கிறது.

ஊர் கிராமணிகளாகவும், பிராமண சமூகத்தினைச் சார்ந்தவர்கள் இருந்திருக்கின்றனர் என்பதைப் பல பட்டயங்கள் தெரிவிக்கின்றன.

வேளாண் சமூகத்தினைச் சார்ந்த பிள்ளை, முதலியார், ரெட்டியார் போன்ற சமூகப் பிரிவைச் சார்ந்தவர்களும் நாயக்கர் அரசில் முக்கிய இடத்தைப் பெற்று விளங்கியிருக்கின்றனர்.

### பிள்ளை

வடமலையப்பபிள்ளை என்பவர் திருநெல்வேலிப் பகுதியில் நாயக்கரின் அதிகாரியாக விளங்கியவர் ஆவார். இச்சமூகத்தினர் கிராமக் கணக்கர்களாகவும் விளங்கியிருக்கின்றனர். சிவந்தலிங்கம்பிள்ளை, இராமலிங்கம்பிள்ளை போன்ற கணக்கர்களின் பெயரைச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. மேலும் செப்பேட்டு ஆணைகளை நிறைவேற்றும் பணியில் இவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

### ரெட்டியார்

தெலுங்கு பேசும் ரெட்டியார் சமூகத்தினர் நாயக்கர் நாட்டில் பல இடங்களில் குடியேறி வாழ்ந்திருக்கின்றனர். ரெங்கா ரெட்டியார் என்பவர் திருமலைநாயக்கரின் அரசவையில் முக்கியப் பணியாற்றும் அலுவலராக இருந்திருக்கின்றார். அம்மையநாயக்கனூர் பல்லக்குத் தூக்கிகளுக்கு அளிக்கவேண்டிய வெகுமதியை திருமலைநாயக்கர் இவரைக்கேட்டே

ஆடையைத் தூய்மையாக்கும் வண்ணார் 'நிறமகன்' என்றழைக்கப்பட்டான். முடி திருத்துவோன் 'குடிமகன்' என்று கூறப்பட்டான். கொல்லன், தச்சன், நிறமகன், குடிமகன், மாதாரி (மருத்துவச்சி?), நீறாணி போன்றோர் கிராமப் பணியாளர்களாக விளங்கியதையும்; செப்பேட்டிற்குச் சாட்சியாக விளங்கியதையும் இலந்தைக்குளம் செப்பேடு தெரிவிக்கிறது.

சாணார் பற்றிய வரலாற்றை விரிவாக திருமுருகன்பூண்டிச்செப்பேடு எடுத்துக் கூறுகிறது. கன்னடம் பேசும் தேவாங்கச் செட்டியார் குறித்து ஓ. கோவில்பட்டிச் செப்பேடு மூலம் அறியமுடிகிறது போயர், போவண்டம் என்றழைக்கப்பட்ட சமூகத் தினர் பல்லக்குத்தூக்கும் பணியினை நாயக்கர் காலத்தில் செய்து வந்திருப்பதையும், அவர்கள் நீர்நிலைகளில் மீன்பிடிக்கும் தொழிலைத் தங்கள் குடித்தொழிலாகக் கொண்டதையும் அம்மையநாயக்கனூர்ப் பட்டயம் காட்டுகிறது. அழகர்கோயிலில் களவுத்தொழில் செய்த வேடர் குடியினைப்பற்றி வெள்ளியங்குன்றம் செப்பேட்டின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

## பொன், காசு, அளவை, கட்டளை

நாயக்கர் காலத்தில் புழக்கத்தில் இருந்த நாணயங்கள் பற்றியும் இச்செப்பேடுகள் மூலம் அறிய முடிகிறது. பொதுவாகப் பொற்காசு, பொன் என்று குறிப்பிடப்படுகிறது. 'கலி பொன்' என்ற ஒருவகைக் காசு (இராமநாதபுரம் செப்பேடு-1) அக்காலத்தில் இருந்திருக் கிறது. 'கலிமின்னல் பொன்' என்பதே செப்பேட்டில் கலிபொன் என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். காசினைக் குறிக்த 'பணம்' என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

பாண்டி நாட்டில் நெல்லை அளப்பதற்கு ஏற்கனவே வழங்கி வந்த கலம், மரக்கால் போன்ற அளவுகளோடு, கோட்டை என்ற அளவு முறையும் புழக்கத்தில் இருந்திருக்கிறது. (இலந்தைக்குளம் செப்பேடு). அறக்கொடையாகவும் ஊதியமாகவும் அளிக்கப்பட்ட நிலங் களைக் குறிக்கக் கட்டளை, மானியம், உம்பிளிகை, சுதந்திரம் என்ற சொற்கள் பட்டயங்களில் குறிப்பிடப்படுகின்றன. இவையே நாயக்கர் காலத்தில் பெருவழக்காக இருந்தன. நிலத்தின் அளவைக் குறிக்க விதையளவை வைத்துக் கணக்கிட்டு சொல்லும் 'விதைப்பாடு' என்ற நில அளவுச் சொல்லும் நாயக்கர் காலத்தில் பாண்டி நாட்டில் புழக்கத்தில் இருந்துள்ளது.

இவ்வாறாக, அரசியல், சமயம், சமூகம், பொருளியல் போன்ற பல்வேறு செய்திகளைச் சுமந்து நிற்கும் நாயக்கர் காலத்து வரலாற்றுக் கருவூலங்களாக இப்பட்டயங்கள் விளங்கு கின்றன எனலாம் விரிவஞ்சி அனைத்தையும் இங்கே விளக்கிக்கூற இயலவில்லை. மதுரை நாயக்கர் காலம் பற்றி ஆராய முனைவாருக்கு இச்செப்பேடுகள் சிறந்த சான்றாதாரங்களாகத் திகழ்கின்றன என்று உறுதியாகக் கூறலாம்.

முடிவு செய்திருப்பதை அம்மையநாயக்கனூர் பட்டயம் தெரிவிக்கிறது. ரெட்டியார் சமூகத்தினைச் சார்ந்த பலர் திருமங்கலம் வட்டத்திலும், உசிலம்பட்டி வட்டத்திலும் வாழ்ந்திருப்பதை மங்கலரேவு, இராசாக்காபட்டிச் செப்பேடுகள் உணர்த்துகின்றன. சின்னரெட்டிபட்டி போல இவர்கள் சமூகப் பெயர்களிலேயே ஊர்கள் இருந்திருக்கின்றன. இராசாக்காபட்டிச் செப்பேட்டிற்குச் சாட்சியாகக் குருவரெட்டி என்பவர் குறிப்பிடப்படுகின்றார். ரெட்டியார் சமூகத்திலும் உயர்வு தாழ்வு நிலவியிருக்கிறது உயர்ந்த சமூகத்தினைச் சார்ந்த ரெட்டியார் ஒருவர் தனக்குக் கீழுள்ள ஒருவனைக் 'குரவரெட்டி' என்று தாழ்த்திப் பேசியதாக வரும் வாசகத்தினை மங்கலரேவுச் செப்பேட்டில் காணமுடிகிறது.

### கவுண்டர்

கன்னடம் பேசும் கவுண்டர் சமூகத்தினைப் பற்றிப் பொம்மயக் கவுண்டன்பட்டிச் செப்பேடுகள் மூலம் அறிந்துக் கொள்ள முடிகின்றது. இச்சமூகத்தினர் தங்களுக்குள் ஒரு குடித்தலைவனைத் தேர்வு செய்து அவர்களுக்குரிய கம்பிளி அதிகாரத்தினை (சமூக அதிகாரம்) நாயக்கமன்னர் மூலம் வாங்கித் தங்கள் சமூகத்தினை நடத்தி வந்திருக்கின்றார்கள். சாதியில் பிரச்சனைகள் வந்தால் கம்பிளியின் (ஆட்டு மயிரினால் தயாரிக்கப் பட்ட ஆடை) மீது அமர்ந்து இக்குடித்தலைவர்கள் நேர்மையான முடிவைச் செய்து வந்திருக்கின்றனர். கவுண்டர் சமூகத்தினைச் சார்ந்தவர்கள் ஊர் நாட்டாண்மைப் பதவியிலும் இருந்திருக்கின்றனர். தருமத்துப்பட்டிச் செப்பேடு, இருளப்பக்கவுண்டன் என்பவனைத் திருமலைநாயக்கர் புளியங்குளத்தின் ஒரு பகுதிக்கு நாட்டாண்மையாக நியமித்ததைத் தெரிவிக்கிறது. கவுண்டர் என்று அழைக்கப்பட்ட சமூகத்தினர் வெள்ளியங்குன்றம், சிறுவாலை முதலிய பல இடங்களில் பாளையக்காரராக இருந்திருக்கின்றனர்.

### தேவர்

தேவர் என்ற பட்டப்பெயர்களைப் பெற்ற கள்ளர் சமூகத்தினர் உசிலம்பட்டிப் பகுதியில் செல்வாக்குடன் விளங்கியதை அப்பகுதியில் கிடைத்த பட்டயங்கள் காட்டுகின்றன. இவர்களில் சிலர் நாயக்கரின் அரச ஆதரவு பெற்ற நாட்டுத் தலைவர்களாக விளங்கியுள்ளனர். இவர்களுக்கும் கம்பளி அதிகாரம் அளித்து அவர்களது சமூகத்தின் பிரச்சனைகளைத் தீர்த்து வருவதற்கு நாயக்கர் அதிகாரம் அளித்திருக்கின்றார். இப்பகுதியில் அளிக்கப்பெற்ற செப்பேட்டு ஆணைகளுக்குச் சாட்சியாகவும் இக்குடித்தலைவர்கள் விளங்கியிருக்கின்றனர். பதினெட்டுப்பட்டு ஆயர்கள் (யாதவர்) இவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதையை நாயக்கரிடம் இவர்கள் கேட்டுப் பெற்றிருக்கின்றனர்.

### பிற சமூகத்தினர்

ஒவ்வொரு ஊரிலும் கொல்லர், தச்சர், ஆசாரி என்ற பஞ்சகம்மாள சமூகத்தினர் வாழ்ந்திருக்கின்றனர். ஆசாரிமார் செப்பேட்டை உருவாக்கும் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். பள்ளர் சமூகத்தினைச் சார்ந்த குடித்தலைவன் 'குடும்பன்' என்றழைக்கப் பட்டான். நீர்நிலைகளில் மடையடைத்துத் திறக்கும் பணியினை இவர்கள் செய்து வந்தனர் 'நீராணிக்கன்' என்று இப்பணி செய்தவர்களை அழைத்தனர்.

# இலந்தைக்குளம் செப்பேடு

## புலியைக் கொன்றவற்குப் பட்டயம்

### இடம்

காமராசர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகில் உள்ள இலந்தைக்குளம் என்ற ஊரில் இருக்கும் திரு. கே. அண்ணாமலைத்தேவர் அவர்களிடம் இச்செப்பேடு உள்ளது. தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அருங்காட்சியக் காப்பாட்சியர் திரு. இரா. ப. கருணானந்தன் அவர்கள் மூலம் முகவரி பெறப்பட்டுக் கடிதத்தொடர்பு கொண்டதில் திரு. கே. அண்ணாமலைத் தேவர் தன் மைந்தன் மூலம் செப்பேட்டை எங்கள் பார்வைக்கு அனுப்பி வைத்தார். அதன் மைப்படிகள் எடுக்கப்பட்டன. கல்வெட்டுப்பயிற்சி நிறுவன மாணவர் திரு. இரா. இரகுநாதன் தனது ஸ்ரீவில்லிப்புத்தூர் பற்றிய ஆய்வு நூல் கைப்பிரதியில் இதன் வாசகத்தினை எழுதிப் பயன்படுத்தியுள்ளார். திரு. சீவல் தனது செப்புப்பட்டயப் பட்டியலில் இதனை 197-வது எண்ணாகக் குறித்துள்ளார்.

### அமைப்பு

இச்செப்பேடு 29 செ.மீ. நீளமும் 19 செ.மீ. அகலமும் உடையது. விளிம்புகள் ஒழுங்கற்றவை. தலைப்பகுதியின் நடுவில் துளையுடன் கூடிய வட்டமான இதழ் அமைப்பு உள்ளது. இப்பகுதி சிறிது உடைந்துள்ளது. இப்பகுதியில் 'திருமலை மூவரையத்தேவனுக்கு கொடுத்த பட்டயம்' என்று எழுதப்பட்டுள்ளது. முன்புறம் 44 வரிகளும் பின்புறம் 42 வரிகளும் பொறிக்கப்பட்டுள்ளன. தொடக்க வரிகளில் எழுத்துக்கள் பெரியனவாகவும் அடுத்து சிறியனவாகவும் பொறிக்கப்பட்டுள்ளன.

### காலம்

செய வருடம் ஆடிமாதம் 23-ஆம் தேதி. இதற்குச் சமமான கி.பி. 23-7-1654 ஞாயிற்றுக் கிழமை.

### செய்தி

திருமலைநாயக்கர் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் நாச்சியாரை வணங்கச் சென்று கொண்டிருந்தார். வழியில் குலையப்பாறை பருவத தடாகம் என்ற இடத்தில் ஒரு பெண்ணும் அவளது குழந்தைகளும் தலைவிரிகோலமாக அழுது புலம்பிப் பெருத்த ஆரவாரம் செய்து கொண்டிருந்ததைக்கண்டு தனது ராச்யத்தில் தனது விசயத்தின்போது ஏன் இப்படி ஒரு அவலம் என்று சினந்து அப்பகுதி வெள்ளிக்குறிச்சி பாளையக்காரர் சீரங்க நாயக்கரை அழைத்துக் காரணத்தை வினவினார். பாளையக்காரர் அப்பெண்ணிடம் ஓடி விசாரித்து அவளது புலம்பலுக்குக் காரணம், ஒரு புலி அவளது கணவனைக் கொன்றமை என அறிந்து திருமலைநாயக்கரிடம் விபரம் கூறினார். திருமலைநாயக்கர் பாளையப்பட்டுக்காரரை அழைத்து அந்தப்புலியைக் கொல்ல வேண்டுமென ஆணையிட வெள்ளிக்குறிச்சி சீரங்க நாயக்கர் தனது பாளையப்பட்டுக்குடிகளை அழைத்து, 'வெற்றிலைப்பாக்கு வாங்கி யார் அந்தப் புலியைக் கொல்லப்போகிறார்கள்' என்று கேட்க, மூவரையத்தேவன் முன்வந்தான்.

அவனும் அவனது உறவினர் ஆறுபேரும் சீரங்கநாயக்கனுடன் சென்று புலியைத் தேடிக் கொன்றார்கள். அவனுக்குத் "திருமலை மூவரையத்தேவன்" என்று திருமலை நாயக்கர் பட்டமளித்தார். வத்திராயிருப்பை ஒட்டிய கிராமத்தைத் தந்து பாரிசமாக்கிச் செம்புப் பட்டயம் வழங்கினார்.

## செப்பேட்டு வாசகம்

உ திருமலை மூவரையதேவனுக்கு குடுத்த பட்டயம்

உ ஸ்ரீ ராமஜெயம்

1 அதிகமான மதுராபுரித்தல பாண்டி மண்
2 டலம் பதிநாலு முடிபொருத்த கர்த்தறாகிய
3 றாயெ ஷத்திரி திருமலைறாயக்கறவற்கள் சிரி
4 வில்லிபுத்தூர் நாச்சியாரைச் சேவிக்க வே
5 ண்டி ரத கெச துரக பதாதி சேனையுடனே சமுத்திர
6 கோசம் போலே மாக ஆடம்பறத்துடனே வந்து
7 திருவண்ணாமலையில் யிரங்கி யிருக்கும்போது
8 குலையபாரை பறுபத[1] தடாகத்திலே கம்மவாற் னாக்க
9 னை பெரியவல்லிய் மறண சங்கார செய்து போ
10 ட்டுதென்று அவன் பெண்சாதி பிள்ளைகளும் தலை
11 விரிகோலமாக அளுது அபையம் போட்டுப் போ
12 ரது ராசா காதிலே அபையக்குரள்[2] கேட்டு திடுக்க மு
13 ளித்து நாமும் வந்திருக்க யிந்த அணியாயஞ் செ
14 ய்ய (வே)ரே யின்னம் ஒருவரே உண்டோவென்று
15 கோவாக்கினி தலை மண்டை கொண்டு வெள்ளிக்குரி
16 ச்சி சீமைக்கி கற்த்தறாகிய சீரங்கனாக்கரை வறவளைத்
17 து அளுகுரதென்ன வென்று கேள்க்கும் படிக்கி உத்தறவு
18 அவற் பதரி அளுகையமத்தி றாசா உத்தர்ரமாகுது ஆம்மா
19 அடித்ததாற் திட்டுனதாற் என்று கேள்க்க யிந்த சம(ா)சாறஞ்
20 சொல்ல அமத்தி வயித்து போட்டு நீ யிங்கே யிறு அம்மா
21 வென்று ஓட்டமு நடையுமாக ஓடிவந்து றாசா சமூகத்தில்
22 சொல்ல பாளையக்காரற் எல்லோரையு கொண்டு வா

---

1. பறுவத என்று படிக்கவும்.
2. அபையக்குரல் என்று படிக்கவும்.

23 என்றாற் அப்போது எல்லாறு சமூகத்தில் கயிகட்டி பதரி
24 நின்றார்கள் அப்போது சீரங்கரைப் பாத்து றாசா சீரங்
25 கனாக்கரைப் பாத்து றாசா நாமு பிவடம்[3] வந்திருக்கவும் யி
26 ந்தப் பெரும்புலி பயமில்லாமல் துடுக்கு செய்த வல்லி
27 யந்தன்னை[4] சியம் பன்னின[5] பாளையக்காரன் அவன் நம
28 க்கு யிருசாலக்[6] கட்டுகிர பணம் நமக்கு வேண்டாம் பொருப்
29 பு நீக்கி அவனுக்கு பரிபாலினமும் பூமி பாறத(ா)ங்குஞ் சிரஞ்
30 சீவியாக பட்டயஞ் செம்புநாலே குடுக்கலாகு மென்று
31 ராசா விடையருளியது எல்லோரையு ஒருமுகமாகச்
32 சமூகத்திலே நிறுத்தி சீரங்கநாக்கற் பறந்த உத்தறவு குடுத்து
33 வெத்திலைப் பாக்கு பிடித்து சீவன் பெரிய கருவேங்கைக்கி
34 யிறையாகனு அல்லது அன்னந்தேடனும் சீரஞ்சீவி ஆ
35 ன றாவணன் உயித்தியத்தல மந்திரியாகிய மகோதறன்
36 சொ(ன்)னது போல நானுஞ் சொல்லுகிறோம் நல்ல சுத்த
37 வீரன் மகன் பாளையகாறன் சமூகத்திலே வந்து வெத்திலை
38 பிடியென்று சொல்ல எல்லோரும் நிகளந்து நின்றாற்க
39 ளப்போது மூவரையதேவற் சமூகத்திலே வந்து நெறுங்கி நி
40 ற்கும் போது அவன் தம்பிமா ரெண்டு பேரும் சின்னய்யா மக்கள்
41 நாலுபேருஞ் தேவரிடத்தில் யிந்த ஆறுபேரும் சொன்னது ஒ
42 ன்னைப் புலிவாயிலே காட்டிக்குடுத்து நாங்கள் பட்டமா
43 ளவோ சன்னியதானத்தில் றாசா திருக்கரத்துனாலே குடுக்க முந்
44 தியேந்தி வாங்கி வெளியில் வந்து நிக்கவும் றாசா உத்தார

## பின் பக்கம்

45 மாச்சுது சீரங்கனாக்கன் ஆணையின்பேரில் எளுந்தருளி
46 னாற் ரத கெச துரக பதாதி சேனையும் குலையபாரைப்பருவதத்தை
47 த துப்பாக்கி மனை மளைமாரி பொளிந்து வரும்போது மூலை(ல)னா
48 ய விட்டு வல்லியிம் கண்ங்கள் சிவந்து ஆங்காரங் கொண்டு
49 மூவரைய தேவன் சனத்தில் மூணுபேரை சின்னாபின்னமாக கொன்

3, யிவிடம் என்று படிக்கவும்.
4. வல்லியம் என்ற சொல் புலியைக் குறிக்குமெனத் தெரிகிறது.
5. செயம் பண்ணின என்று படிக்கவும்.
6. இருமுறை.

50 று வருபோது எல்லோரும் மதிமயங்கி நின்றான்(ர்)யவன் நான் சு
51 த்தவீரத்தனத்தை அரியலாமென்று காட்டிக்குடுத்து அகலநின்
52 றார்கள் அப்போது தேவற் சிங்கமுகவேல் கய்யிலே வாங்கி
53 அதின் பேரிலே நடந்தான் டி தம்பி ரெண்டுபேரும் சின்னய்
54 ய்யா மக்கள் நாலுபேரும் ஆக யேளுபேரும் வல்லியத்தின்பே
55 ரிலே பாய்ந்து தேவற்கு முந்தி ஆறு குத்து ஒருமித்து குத்தி விரு
56 க்காட்டினாற்கள் தேவருக்கு நெஞ்சிலே காயப்பட்டுது சீரங்கனாக்க
57 ற் ஆனைவிட்டு யிரங்கி அன்னந்தேடிக்கொண்டாய் யென்று அ
58 திசெயப்பட்டு வில்லியத்தை தேரிலேத்திக்கொண்டு விறாலச்
59 சமுத்திரத்தில் றாசாவிடத்தில் வைத்தாற்கள் வயித்தவுடனே யிவன்
60 திருமலை யிந்த யேளுபேரையுந் திருக்கரத்துனாலே அனைத்து
61 உச்சி முகந்து திருமலை மூவரைய தேவரென்று மூணுதெரம்[7] நா
62 மகிரணம் ராசா உத்தாரமாச்சிது யிந்த தேவருக்கு முதப்பட்டமும்
63 யிந்த ஆறுபேருக்கு சின்னத்தேவர் பட்டமும் யிவாளுக்குப் ப
64 ட்டயந் தயாற் செய்யும் படிக்கி உத்தாரமாச்சுது[8] செய௵ஆடி
65 மீ உ௱௩ உ வத்திராயிருப்பு சேகறம் முடுக்கு நாடுள்ப்பட்ட
66 யெல்கை மால்க்கட்டு விவரம் கண்டப்ப னாக்கன் மாலுக்கு கிள
67 க்கு ஆனைக்கல்லுக்கு வடக்கு கோபாலசாமி மலைக்கு யிடைவிட்டு
68 சங்கரப்பொய்கைக்கு சிட்டுளப்பட்டி கிராமத்துக்கு மேற்க்கு சாம
69 யநாக்கன் மால் யேணி சாத்தி பாரைக்கி தெற்கு யிந்த மாலு
70 க்குள் யின கவிசலுக்கு ராசாவுக்கு பொறுப்புடை உா௰ பொ
71 ன்னு ௩ஞூ[9] கோட்டை நெல்லும் வருசாந்திரம் துரைக் கச்சே
72 ரியில் செழுத்தி[10] விச்சு உத்தறவு பெற்றுக் கொண்டு தன் பதிக்கி
73 றவும் யிந்த கிராமம் தன்னுட பாரிசமாகத் தாம்பூரசாதின
74 த்தில்[11] றாசா விடை கொடுக்க திருக்கறத்தில் ஒப்பம் யாதாமொரு

---

7. மூன்று முறை.
8. உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
9. மூன்றுக்கு என்பது தமிழ் எண்ணாலும் குறியீட்டாலும் எழுதப்பட்டுள்ளது.
10. செலுத்தி என்று படிக்கவும்.
11. தாம்பிர சாதனத்தில் என்று படிக்கவும்.

75 வற் அடி அளித்தால் கெங்கைக்கரையில் காறாங்கோவைக்[12] கொ
76 ன்ற தோசத்திலும் பிறாமனாளைக் கொன்றதோசத்திலும் யிஷ்த்திரி[13]
77 யைக்கொன்ற தோசத்திலும் யிந்த மூன்று தோசத்திலும் அடைந்து
78 போவாறாகவும் யென்று திருவிளம்பற்றுனது[14] விடைபெற்ற சாட்சி
79 வெள்ளிக்குறிச்சி சீரங்கநாயக்கற் கண்டப்பனாக்கன்
80 வத்திறாயற் அறுப்பு கிராமணி சுந்தரமய்யன் ஷெ அனந்த
81 ய்யன் காவல் அங்கு சேருவைகாறன் கணக்கு சிவந்தலிங்கம்
82 பிள்ளை கொல்லக்கருப்பன் தச்சு குப்பாக்காத்தான் நிறமகன் கு
83 ளந்தைவேல் குடிமகன் பூமாலை பண்டிதன் மாதாரி
84 அத்திக்குமல்லன் நீராவி பாண்டிக்குடும்பன் விடைபெற்ற கா
85 ட்சியிதுவும் பட்டையந் தயாற் செய்தவன் திருப்பதி ஆசாரி
86 குமாரன் மன்னாரு உ.

---

12. காறாம் பசு என்றுதான் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் காணப்பெறும் இப்பட்டயத்தில் 'காறாங்கோ' என்று குறிப்பிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

13. ஸ்திரி என்று படிக்கவும்.

14. திருவுளம் பற்றினது என்று படிக்கவும்.

# சிந்துமேட்டுப்பட்டிச் செப்பேடு

## புலியிடமிருந்து மன்னனைக் காத்தவனுக்குப் பட்டயம்

### இடம்

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் சிந்துமேட்டுப்பட்டி என்ற ஊரில் திரு. சமுத்திரபாண்டியன் என்பவரிடம் இருந்து இப்பட்டயம் அன்பளிப்பாகப் பெறப்பட்டது. இவர் தற்போது தொல்பொருள் ஆய்வுத்துறை திருமலை நாயக்கர் அரண்மனையிலேயே காவலராகப் பணியாற்றி வருகின்றார். துறை வெளியீடான 'கல்வெட்டு' காலாண்டு இதழில் இதன் வாசகம் வெளியாகியிருக்கிறது.[1]

### அமைப்பு

இப்பட்டயம் 22.5 செ.மீ. நீளமும் 13 செ.மீ. அகலமும் உடையது. தலைப்பகுதியில் நடுவில் அரை வட்டமான இதழும் அதன் நடுவில் வட்டத்துளையும் உள்ளன. விளிம்புகள் சிறிது ஒழுங்கற்றவை. முன்புறம் 34 வரிகளும் பின்புறம் 9 வரிகளும் பொறிக்கப்பட்டுள்ளன

### காலம்

செய வருடம் ஆனிமாதம் 9-ஆம் தேதி. இதற்குச் சமமான கி.பி. 19-5-1654 புதன்கிழமை.

### செய்தி

திருமலை நாயக்கரின் அரண்மனைக்காவலராக அரங்கயசாமி நாயக்கன் என்பவன் இருந்தான். ஒரு சமயம் திருமலைநாயக்கர் வேட்டைக்குச் சென்றபோது இவனும் கூடச் சென்றான். ஒரு புலி வாலை முறுக்கிக்கொண்டு வருவதைக்கண்டு அரசரை யாதேனும் செய்து விடக்கூடும் என்றஞ்சி கல்வெடியால் இரண்டு குண்டுகள் போட்டு புலியைச் சுட்டு வீழ்த்தினான். அவனை மெச்சிய திருமலை நாயக்கர் ஒரு ஆபரணத்தை அவ்விடத்திலேயே பரிசளித்து முகாம் இருந்த இடத்தில் அவருக்குச் சாப்பாடு போட்டுப் பாராட்டி அரண்மனை வந்து அவன் விருப்பத்திற்கிணங்க அவனது கிராமமான வாகைக்குளத்துக்கு நாட்டாண்மை முதன்மை வழங்கிச் செப்பேடும் அளித்துள்ளார்.

உ றாமசெயம்

1 செயா[2] ௵ ஆனி மீ ௯உ மதுறாபு

2 ரி தலத்துக்கு கற்த்தறாகிய - றாசமானிய

3 ஸ்ரீத்திரி திருமலைனாயக்கறவற்கள் யி

---

1. பொருப்புமேட்டுப்பட்டிச் செப்பேடு என்ற பெயரில் எண்: 18-ல் வெளியிடப்பட்டுள்ளது.

2. செய என்று படிக்கவும்.

4 டத்தில் - வாகக்குளம் ரெங்கயசாமி
5 னாக்கன் அரமனை காத்திருந்து மேலக்கா
6 ல் ஊடையத்தில் கூடயிருந்து முடுக்க
7 ணையில் வேட்டை மாற்க்கம் போயி றா
8 சாவுக்கு முன்பாக பெரும்புலி தண்டவா
9 ல் முருக்கி வாறபோது ருசாவுக்குப்பளுது
10 வருமென்று ரெங்கயசாமி னாக்கன் கல்
11 வெடியால் ரெட்டைக்குண்டு போட்
12 டுச் சுட்டான் றாசா ஆனைமேல் அம்பா
13 ரி வச்சு பாத்திருந்தவற் சந்தோசமாகி கூ
14 ப்பிட்டு கொத்துச் சறப்பளி போட்டு ஊடை
15 (டை)யத்துக்கு கூட்டி வந்து சாப்பாடு போட்
16 டு அரமனைக்கி வந்து றாசா உனக்கு என்ன வே
17 ணுமென்று கேட்பாற் யென் கிராமத்துக்கு நா
18 ட்டாமை முதமை கணக்குக்கு[3] தாம்பூரசாதின
19 ப்பட்டயம் குடுக்க வேணுமென்று சொன்னா
20 ன் அந்தப்படிக்கி உத்தறவு - வாகக்குளத்து-அ
21 ஞ்சு கிறாமத்து மாலுக்கு[4] விபறம் - கருமாத்தூ
22 ற்-மாலுக்கு தெக்கு-கலுங்குக்கு மேற்கு-பா
23 ப்பான் அய்யன் அளிசிரை மாலுக்கு வட
24 க்கு-திடியன் தூங்கதேவன் மாலுக்கு கிள
25 க்கு-யிந்த னாங்கெல்கைக்குள்பட்ட அஞ்சு
26 கிராமத்துக்கும் நாட்டாமைக்கி மானிபம்[5]
27 ஒ௬௰[6]-பொன் கணக்கு மானிபம் ஒ௩௰[7]
28 பொன்-சம்மதித்த கணக்கனை வச்சுக்கொ
29 ள்ளவும் குதிரைமட்டம் குடுத்தாற் ஷி[8] வா
30 க்குளத்தைச் சேற்ந்த அஞ்சு கிறாமத்து

---

3. க்கு என்பது குறியீட்டால் எழுதப்பட்டுள்ளது.
4. மாலுக்கு என்றால் எல்லைக்கு என்று பொருள் போன்று தெரிகிறது.
5. மானியம் என்று படிக்கவும்.
6. பொன் 60.
7. பொன் 30.
8. மேற்படி.

31 நாட்டாமை முதமை தீத்தந் திருமாலை சக
32 லமும் ரெங்கயசாமி நாகனுக்கு சாதினப்ப
33 ட்டயத்துக்கு உத்தறவு - யிந்தப்படிக்கி சாட்சி வி
34 க்கலமங்கலம் ஆண்டித்தேவன் திடியன்

## பின் பக்கம்

35 தூங்கதேவன் கொங்கபுளியங்குளம்
36 யிருளப்ப கவண்டன் யிந்தப்பட்டயம் செ
37 ய்தவன் மேலவாசல் சுப்பயன் ஆசாரி
38 யிதை யாதாமொருதற் அடிஅளித்தால்க்
39 காறாம் பசுவைக் கொன்ற தோசத்திலும்
40 பிறாமனாளைக் கொன்ற தோசத்திலும் அடை
41 ந்து போவாறாகவும் யிந்தப்படிக்கி கற்த்த
42 றாகிய திருமலைனாயக்க றவர்கள் கய்யி ஒப்
43 பம் உ மீனம்மாள் துணை உ




முன் பக்கம்



பின் பக்கம்

இலந்தைக்குளம் செப்பேடு


முன் பக்கம்


பின் பக்கம்

அம்மைய நாயக்கனூர்ச் செப்பேடு

# அம்மையநாயக்கனூர்ச் செப்பேடு

## போயர்களுக்கு மானியம்

### இடம்

திண்டுக்கல் அண்ணா மாவட்டம் அம்மையநாயக்கனூரில் தியாகி திரு. ஏ. கந்தசாமி கன்னடியர் இடம் இச்செப்பேடுள்ளது. இச்செப்பேட்டினைத் தொல்பொருள் ஆய்வுத்துறை கல்வெட்டாய்வாளர் திரு. செ. போசு அறிந்து படியெடுத்துக் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார். செப்பேட்டு வாசகம் அடங்கிய அக்கட்டுரை தொல்லியல் கருத்தரங்கு என்ற நூலில் வெளியிடப்பட்டுள்ளது.[1]

### அமைப்பு

இச்செப்பேடு 28 செ.மீ. நீளமும் 18 செ.மீ. அகலமும் உடையது. தலைப்பகுதியில் செவ்வகமான இதழ் அமைப்பு உள்ளது. அதன் நடுவில் சிறுதுளை அமைப்புள்ளது. எழுத்துக்கள் பெரிதாகவும் ஆழமாகவும், பொறிக்கப்பட்டுள்ளன. முன்புறம் 36 வரிகளும் பின்புறம் 34 வரிகளும் உள்ளன. முடிக்கும் பகுதியில் வரிகள் நெருக்கமாகவுள்ளன. முன்புறம் தலைப்புப்பகுதியில் அமைந்துள்ள செவ்வக இதழ் அமைப்பில் தெலுங்கில் 'ஸ்ரீ(ரங்க)நாயகலு' என்று எழுதப்பட்டுள்ளது.

### காலம்

சகம் 1453 கலி 4635 சுக்கில வருடம் தை மாதம் 27-ஆம் தேதி வியாழக்கிழமை. ஆண்டுகள் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளன. சுக்கில வருடம் தை மாதம் 27ம் தேதி என்பது மட்டும் சரி என்று கொண்டால் 24-1-1629 ஞாயிறு என்று கொள்ளலாம்.

### செய்தி

திருமலை நாயக்கர் ஒருசமயம் அவசரமாகத் திருச்சிக்குச் சென்று மூன்று தினங்களில் மதுரை திரும்ப வேண்டியிருந்தது. வழக்கமாகப் பல்லக்குத் தூக்குபவர்களைக் கேட்க அவர்கள் தங்களது சனங்கள் சேகரமாக இல்லை எனவே அம்மையநாயக்கனூர் பாளையப் பட்டுப் பல்லக்குத்தூக்கிகள் வந்துள்ளார்கள். அவர்களால் முடியும் என்று சொன்னார்கள் அவர்களைக்கேட்க அவர்கள் தூக்கிச்செல்வதாக ஒப்புக்கொண்டு மூன்று தினங்களில் மதுரை யிலிருந்து திருச்சிக்குத் தூக்கிச் சென்று திரும்பினார்கள். அரசன் மகிழ்ந்து அவர்களுக்கு நிலங்களைக் கொடுத்தான். ஆனால் அவர்கள், நிலம் பிற்காலத்தில் தங்களிடம் தங்காது என்று கூறிக் தங்களுக்குக் குறிப்பிட்ட பகுதி நீர்நிலைகளில் மீன்பிடிக்க உரிமை பெற்றுக் கொண்டனர். அந்த உரிமையைக் குறிப்பதே இந்தச் செப்பேடாகும்.

---

1. நடன. காசிநாதன், தொல்லியல் கருத்தரங்கு தொகுதி 2. பக்கம் 37

உ மீனாட்சி சுந்தரேசுர கிறுபா கடாவ்ஷ
சத்தினாலே சாலிவாகன சகாற்த்தம் ௲சா
ருயஈ கலியுக சகாற்த்தம் ச௲சுாஈயரு
இதின்மேல் செல்லாநின்ற சுக்குல இ தை
ய் மீ ௴உயள உ பூறுவ பட்சத்து விசாழ
கிழமையும் பஞ்சமியும் மிருகசீற்ஷ்ச ந
ட்செத்திரமும் சவுபாக்கிய னாரம யோகமும் பா
லவற் கறணமும் சாத்திக வேளையும் சந்திர
வோரையுங் கூடிய சுபதினத்தில் ராசமானிய
ராச[1] திருமலைனாயகரவர்கள் மதுரையிலிருந்து
திருச்சினாப்பள்ளிக்கிப் போகவேணுமென்
று ஆனைகட்டி அக்கலப்ப போயனையும் குரு
வ போயனையும் அளைப்பவிச்சு கேழ்க்க ச
ாமி நம்மிட சனங்கள் சேகரமாய் இருக்க
வில்லை அம்மையனாயக்கர் பாளைப்பட்டு ஷே
தானாபதியும் போண்டமாரும் வந்துயி
றுக்கிறார்கள் அவளாளானால் சீக்கறங் கொண்
டு போயி விடுவார்கள்ளென்று சொல்ல
அந்தப்படிக்கி அளைப்பிச்சு கேள்க்கிறபோது
சாமி னாங்கள் கொண்டு போயி விடுகிறோ
ம் மென்று சொல்ல அந்தப்படிக்கி சிமந்து
கொண்டு திருச்சினாப்பள்ளிக்கி போயி
திரும்ப மதுரைக்கி வந்ததின் பிறகு மெ
த்த சந்தோசப்பட்டு ரங்காரெட்டியானா
ர் ஆளைப்பிவிச்சு[2] இவர்களுக்கு யென்ன ெ
வகுமதி பண்ணுவோம் யெந்தக் கிறாம
விட்டுக் குடுப்போம் மென்று கேழ்க்க சு
வாமி சித்ததுக்குச் சரிபோனது
யென்று சொல்ல அம்மையனாயகறவர்
கள் கிறாமத்துக்கு சமுக்கிறாமம் கலுப்பிட்டி
முதல் விளாம்பட்டி வரைக்கும் ஏளுகிராமம்

1. 'ராச' என்பது குறியீடு மூலம் காட்டப்பட்டுள்ளது
2. அழைப்பித்து என்று படிக்கவும்

32 உம்பளம் விட்டுக்குடுக்குறொம் மென்று(சொ)
33 சொன்னார்கள் அப்போது அழகபோயனும்
34 கம்பயபோயனும்ஞ் சொன்னது சுவா
35 மி யெங்களுக்கு அதுவெல்லாம் நிலைய
36 ாது யெங்களுக்குத் தங்காரும் அதுக்கு
37 கேணியளும் விட்டுக்குடுக்க வேணு
38 (ணு)ம் தங்காத்து தண்ணீற் பாச்சல்
39 பண்ணிமுட்டி முதல்க்கொண்டு விள
40 ாம்பட்டிக் கறுப்பணசுவாமி கோவில்
41 நெல்லித்தோப்பு வளுக்கபாறை முத
42 ல் வரைக்கும் எங்களுக்கு விட்டுக்குடுக்க வே
43 ணும் ஆத்துப்போக்கும் விட்டுக் குடுக்கவே
44 ணுமென்று கேட்டாற்கள் அப்படியே தரு
45 கிறோமென்று மாடக்குளம் முதல் வி(ா)
46 ளாம்பட்டி வரைக்கும் கிறாமணி அய்
47 யமாறும்க் காவல் காறனும் அய்யப்ப
48 னாயக்கப்பட்டி அய்யப்ப னாயக்கரை
49 ம் வச்சுக்கொண்டு கூழப்பனாயக்கற்
50 கொப்பயனாக்கறரையும் வச்சுக் கொ
51 ண்டு பண்ணிமுட்டி முதல் தங்க
52 ாறு ஆத்துப்போக்கு கலிங்கு ப
53 ாறை வளுக்கப்பாரை வரைக்கும்
54 அம்மையனாயக்கரவர்களாற் பே
55 ாயண்டமாருக்கு அதகளிலுள்ள
56 மச்சம் சலபுற்ப்பங்களை வலைவீ
57 சி பிடிச்சு (ஆ)ண்டு அனுபவிச்சுக் கொ
58 ள்ள சொல்லி வெகுமதியும் பண்ணி
59 க் கல்லும் வெட்டி கல்லுங் காவே
60 வரி புல்லும் பூமி சந்திறாத்திர உ
61 ள்ள வரைக்கும் ஆண்டு அனுபவிச்சுக் கொ

62 ள்ள சொல்லி தாம்பிறசாதனம் மெளுதிக்கு
63 டுத்தோம் இதுக்கு ஆறாமெ(ா)ருதர் ஆச்சித
64 ம் பண்ணினால் கெங்கை கரையி
65 லே ஏளுகாறாம் பசுவை கொன்ற
66 தோசத்துலே போவாறாகவும் பெத்(த)தா
67 யை களுத்தை கட்டினாப் போலவும் யேளுகே
68 ாவிலு[3] திருவிளக்கு னிருத்தின தோசத்தில்
69 போவாறாகவும் யிந்தப்படிக்கி சோலமலை
70 அழகந்துணை உ

3. ஏழு கோயிலு என்று படிக்கவும்.

# 4. வெள்ளியங்குன்றம் செப்பேடு

## கள்ளர்களைப் பிடித்ததற்குப் பட்டயம்

### இடம்

மதுரை மாவட்டம் அழகர்கோயிலையடுத்த வெள்ளியங்குன்றம் என்ற ஊரில் இந்த திருமலைநாயக்கர் செப்பேடும், விசுவநாதநாயக்கர் காலத்தில் வெளியிடப்பட்ட மற்றொரு செப்பேடும் உள்ளன. இவை முன்னாளில், வெள்ளியங்குன்றம் பாளையக்காரர்களாகவும், ஜமீனாகவும் இருந்தவர்களின் வழிவந்தவர்களிடம் உள்ளவை. தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறைப் பதிவு அலுவலர் திரு. மா. சந்திரமூர்த்தி அவர்கள் மூலம் இப்பட்டயம் பெறப்பட்டு இதன் மைப் படிகள் எடுக்கப்பட்டன. மதுரை வரலாற்றுக் கழக இதழ் (HISTORIA) தொகுதி ஒன்றில் (1981) இதன் வாசகம் வரலாற்றுக் குறிப்புகளுடன் வெளியிடப் பட்டுள்ளது.

### அமைப்பு

நீண்ட சதுரமான கனத்த செப்புத் தகட்டில் இருபக்கங்களில் வாசகங்கள் பொறிக்கப் பட்டுள்ளன. இச்செப்பேட்டின் தலைப்பகுதியின் நடுவில் பிடிப்பதற்கு ஏற்ப ஓர் இதழ் அமைப்பு அமைந்துள்ளது. அதில் துளையேதும் இல்லை. இச்செப்பேடு 22 செ.மீ. உயரம், 17 செ.மீ. அகலம் உடையது. பட்டயத்தின் விளிம்புகள் நேராக அமையாதும் ஓரத்தில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் தேய்ந்தும் உள்ளன. முன்புறம் 30 வரிகளும் பின்புறம் 30 வரிகளும் எழுதப்பட்டிருக்கின்றன. செப்பேட்டின் தொடக்கத்தில் 6 செ.மீ. உயரத்தில் திருப் பாதங்களுடன் கூடிய திருநாமமும் அதன் இருமருங்கிலும் சங்கு, சக்கரமும் வரிப்படங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

### காலம்

சகம் 1491 சவுமிய வருடம் தை மாதம் 7-ஆம் நாள் மங்கள வாரத்திற்குச் சமமான ஆங்கில நாள் 4-1-1670 செவ்வாய்க்கிழமை.

### செய்தி

அழகர்கோயில் இறைவன் சன்னதியில் வேடர்கள் நுழைந்து தங்க, வெள்ளிப் பாத்திரங்கள் மற்றும் திருவாபரணங்களைக் கொள்ளையிட்டுச் சென்றுவிட்டனர். இதனைக் கோயில் தலத்தார் திருமலை நாயக்கரிடம் முறையிட்டனர். திருமலைநாயக்கர் வெள்ளியங் குன்றம் பாளையக்காரர் இம்முடி கனகராமயக் கவுண்டரை அழைத்துக் கள்ளர்களைப் பிடிக்கவும் கொள்ளை போன பொருட்களை மீட்கவும் ஆணையிட்டார்.

கவுண்டரும் ஆணையை நிறைவேற்றிக் கொள்ளைபோன பொருட்களை மீட்டுக் கோயிலில் சேர்த்துக் கள்ளர்கள் தலையை வெட்டித் திருமலைநாயக்கர் முன் பொதியாகக் கொண்டு சென்றார். திருமலைநாயக்கர் மகிழ்ந்து, ஏற்கெனவே இந்தப் பாளையப்பட்டிற்கு (விசுவநாத நாயக்கர் காலத்தில்) அளிக்கப்பட்ட பாளையப்பட்டுக் கிராமங்களுக்காகக்

கொடுக்க வேண்டிய காட்சி, கப்பம் முதலியவற்றை நீக்கியதோடு (மாப்பு செய்தல்) சித்திரை விழா, ஆடித் திருவிழா, திருமங்கையாழ்வார் திருவிழா ஆகியவற்றில் அவரும் அவரது சுற்றமும் சிறப்புப் பெறவும் வகை செய்து கொடுத்தார் என்று இச்செப்பேடு விவரிக்கிறது.

## (முன் பக்கம்)

| பீடத்தின் மீது நிறுத்தப்பட்ட திருச்சங்கின் படம் | திருப்பாதங்களுடன் கூடிய திருநாமத்தின் படம் | பீடத்தின் மீது நிறுத்தப்பட்ட திருவாழியின் படம் |
|---|---|---|

1 சுபஸ்திறிமண்[1] மகா மண்டலேஸ்பறன் அறியராய
தளவிபாடன் பாஎ

2 சக்கு தப்புவறாய கண்டன் மூவறாய கண்டன் கண்ட நாடு
கொண்டு கொ

3 ண்ட நாடு கொடாதான் பூர்வ தக்ஷிண பச்சிம உத்தர
சதுத் சமுத்திராதிபதி

4 யெம்மண்டலமுந் திரை கொண்டருளிய றாசாதிராசன்
றாசபறமேஸ்வறன்

5 றாசப்பிரதாவன் றாச மார்த்தாண்டன் றாசகெம்பீரன்
றாசறணசூரன் றாசெ

6 லட்சுமி புயங்கறன் யிந்திறர் யசுர தாரணன்
அசுபதி கெசபதி நறபதி நவகே

7 ாடி நாராயணன் யெம்மண்டலமுந் திரை கொண்ட
ருளிய துங்காபி றாம

8 ன் சங்கிறாம கெம்பீரன் சுகளித காம்பீர புருஷ
றணமுக வீறவிக்கிறம (நா)

9 க்கண் சமைய சமறாடி விசும்பமான் செஞ்சரப
வன சம்பாத கெம்பமான்

10 கட்கடோரி புட்கபேரி பச்ச பாஞ்சால உத்தண்ட
தொத்தண்ட கண்டி

11 மகா கண்டித விபதாளி மண்டலாதீஷ்பறன்
துலுக்கர் தளவிபாடன்

12 துலுக்கர் மோகந் தவிள்த்தான் ஒட்டிய
தளவிபாடன் ஒட்டிய

1. 'சுவத்திஸ்ரீமன்' எனப் படிக்கவும்.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
Acc No. ......
Date ......
MADRAS-28.

13 றாட்டத் தவிள்த வங்கற் கலிக்கற்
மறாடற் குச்சலற் கொங்கு

14 கொங்கண கோகறண கங்க த்றாவடம்
சதிரகிறி கல்லாடம் யெ

15 ங்குந் திரை கொண்டருளிய ராசாதிறாசன்
ஈ[2]ளமும் கொங்கும்

16 யாள்பாணஞ்[3] சீன மாளுவம் கொச்சி கொல்லம்
மத்தம் மலைய

17 ாளம் சற்வதேசப் பிறகாச சற்வதேச விசையங்
கொண்டருளி

18 ய றாயசிங்காசனத் தாபனா தீபறாய கெசவேட்டை
கொண்டருளி

19 ய தேவதேவ மகாதேவ விசையேந்திர சிங்கா
தன தாபனாதியா

20 கியருள நின்ற சாலிய வாகன சகாற்தம்
சூசாஈகூ மக செல்

21 லாநின்ற சவுமிய தை மீ எ மங்களவாற
சுபதினத்தில் ஸ்ரீ

22 மது திருமலை நாயக்கறவர்கள் வடக்குகோட்டை வாசலி
ல் அனு

23 மார் கோவில் கொத்தழங்காவல் வெள்ளியக்
குண்டம் பாளை

24 யம் விருதுறாயற் மெச்சிய இம்முடி கனகறாமய
கவுண்டனுக்கு

25 தாம்பிரசாஷனம்[4] யெழுதிக் கொடுத்தபடி தாம்பிர
சாஷனமா

26 வது திருமாலிருஞ்சோலை தென்திருப்பதியில் ஆண்ட
வன் சன்ன

27 தியில் வேடற்களடற்ந்து புகுந்து அனேக திருவா-
பறணங்களை

---

2. 'இ' கரத்தையே சுழித்து 'ஈ' காரமாக எழுதப்பட்டுள்ளது.
3. யாழ்ப்பாணம் என்று படிக்கவும்.
4. தாம்பிரசாசனம் என்று படிக்கவும்.

28 யும் சொர்ணபாத்திரம் வெள்ளிபாத்திரங்கள் முதலா
ன சாமான்

29 களிள கொள்ளையடித்துக்கொண்டு போய்விட்டதாய்
தலத்தார்

30 வந்து கூக்குரல் போட்டதில் தம்மை வறவழைத்துக்
கள்ளரை

## (பின்பக்கம்)

31 வெட்டிச் செயித்து களவு போன ஆவறணம்[5] பாத்திர
32 முதலானதுகளை வாங்கிக் கொடுக்கும்படி அனுப்பி வை
33 க்க தாமுந் தளசேகறத்துடன் போய்த் துப்புத்துவருடனே
34 களவாளிகளைக் கண்டுபிடித்து அவற்கள் களவில்க்கொண்டு
35 டு போன சொத்துக்களை ஒன்று தவறாமல் வாங்கி ஆண்டவன்
36 கருவெலப் பொட்டியில்[6] சேற்த்துப் போட்டு அவற்கள்
37 தலைகளை வெட்டிப் பொதிபிடித்து சமூகத்தில் கொண்டு
38 வந்து வைத்து சியப் பிரதாபஞ்[7] சொல்லிக் கும்பிட்ட
முன்னுகு
39 சந்தோஷமாகி அந்த சந்தோஷத்தில் சாதனம் யெளுதிக்
40 கொடுத்தோம் சாதனமாவது இதற்குமுன் விசுவநா
41 த நாயக்கறவற்களால் ஒமக்கு விட்டுக் கொடுத்திருக்கிற
பாளை
42 யப்பட்டு கிராமங்களில் நீற் கொடுக்கவேண்டிய
காச்சி க
43 ப்பம் காணிக்கைகளை மாப்புச் செய்திருக்குரது மல்லா
ம
44 ல் ஆண்டவன் காரியத்தில் நீர் பட்ட பிரயாசை
காக ஆண்ட
45 வன் சன்னதியுள்ளவரைக்கும் ஒமக்கும் ஒம்முட
வம்சத்தாரு

5. ஆபரணம் என்று படிக்கவும்.
6. கருவுலப் பெட்டி என்று படிக்கவும்.
7. 'செயப்பிரதாபம்' என்று படிக்கவும்.

46 க்கும் அளிவில்லாது நடத்துகிற வெகுமானமென்ன வென்றால் வரு

47 சந்தோரும் நடக்கிற சித்திரை உச்சபத்தில்[8] சுவாமியுடன் நீறு

48 ம் ஒம்முடைய சனத்துடன் போய் சிறப்புச் செய்து திருவிருப்பில் சே

49 த்தி செய்து அரிதிப்பட்டும் திருத்தளுகை தீற்ந்தப் பிறசாதம் வந்த ச

50 னங்களுக்கும் படியும் ஆடி உத்தபத்தில்[8] ஒம்முட சன சன்னாகத்

51 துடன் திருத்தேர் ஓட்டி வைத்து தீர்த்தம் திருத்தளிகை பட்டுப் ப

52 ரிவட்டமும் பாளையசனங்களுக்குப் படியும் மார்களி உச்சபத்தில்

53 திருமங்கையாள்வார் லீலையில் யாகம் நடப்பி வித்து அதில் தீர்த்தம்

54 திருமாலை பரிவட்டமுமாக அழகர் திருமலையும் ஆதித்த சந்திர(ா)ரு

55 ம் கல்லுங் காவேரி புல்லும் பூமியுள்ள வரைக்கும் புத்திர புத்திர பா

56 ரம்பரியமாய் அனுபவித்து வருவாராகவும் ஸ்ரீமதுதிருமலை நா

57 யக்கறவர்கள் மந்திரி தளவாய் ராமப்பையனவர்கள் இந்த

58 இந்த சாதனமெளுதித் தகட்டில்ப் பதியக் கொடுத்து சமூகம் றாய சம

59 ஸ்தாணி வெங்கிட்டறாயர் இந்த தாம்பிர சாதன பதிவு செய்தது

60 முத்துவேலு ஆசாரி வ

---

8. 'உற்சவத்தில்' என்று படிக்கவும்

# 5. சிறுவாலை ஜமீன் செப்பேடு

## காவல் காணியாட்சிப் பட்டயம்

### இடம்

. மதுரை மாவட்டம் மதுரை அருகில் சிறுவாலை என்ற ஊர் உள்ளது. இது செப்பேட்டில் சிறுபாலை என்று குறிப்பிடப்படுகிறது. சிறுவாலை ஜமீன்தார் பற்றிய ஆய்வுக் கட்டுரையைத் தனது எம்.பில். ஆய்வுக்காகச் சமர்ப்பித்த மதுரை யாதவர் கல்லூரி வரலாற்றுத்துறைத் துணைப் பேராசிரியர் திரு. ச. பாலசுப்பிரமணியம் அவர்கள் இப்பட்டயத்தைச் சிறுவாலை ஜமீன் உறவினர் திரு. காமராசபாண்டியன் அவர்களிடமிருந்து பெற்று வந்து தந்தபோது இச்செப்பேட்டின் மைப் படி எடுக்கப்பட்டது.

### அமைப்பு

இச்செப்பேடு குறுக்கு வாக்கில் எழுதப்பட்ட ஒன்று. 30.5 செ.மீ. நீளமும் 16.5 செ.மீ. அகலமும் உடையது. இடது புறம் துளையுடன் கூடிய இதழ் அமைப்பு வேலைப்பாட்டுடன் உள்ளது. செப்பேட்டின் விளிம்புகள் ஒழுங்கற்றவை. எழுத்துக்கள் முன்புறம் 37 வரிகளிலும் பின்புறம் 18 வரிகளிலும் எழுதப்பட்டுள்ளன. இறுதியில் வரிப்படங்களாகச் திருச்சங்கு, திருநாமம், திருச்சக்கரம் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன.

### காலம்

சகம் 1210 ஏவிளம்பி வருடம் பங்குனி மாதம் 27-ஆம் நாள். (ஆண்டு தவறாக உள்ளது)

### செய்தி

திருமலை நரேந்திரனாகிய திருமலை நாயக்கரின் பாராட்டுக்குரிய பிரதானி வயித்தியப் பய்யன், தளவாய் ராமப்பய்யன், அமுதார், திருமலை நம்பி போன்ற எல்லோரும் அழகர் மலையில் கொடிக் கம்பம் அருகில் கூடியிருந்து இம்முடி அச்சிராம கவுண்டருக்குப் பரிவட்டம் கட்டி அவர் திருக்கோயிலையும், இறைவன் செல்கின்ற திருவீதிகளையும் காவல் காத்துக் கொடுப்பதற்காகச் சுவாமியின் திருவிடையாட்டமான சிறுபாலை என்ற ஊரினைக் காவல் காணியாட்சியாக வழங்கியதைக் குறிப்பிடுகிறது. ஊரின் எல்லைகள் விரிவாக பேசப் படுகின்றன. மேலும் காவல் சீர்மையில் அடங்கிய கிராமங்கள், தண்டல்மானியம் (தண்டியலும்பிளிகை) தொடர்பான கிராமங்கள் முதலியவையும் குறிப்பிடப்பட்டு அங்கு இவரது சொல் சுதந்திரமும், அனுபோகபாத்தியமும் குறிக்கப்படுகின்றன. ஆடித் திருவிழா, சித்திரைத் திருவிழா, திருமங்கையாழ்வார் திருவிழா, ஆகியவற்றில் உரிய சன்னதி வெகுமானங்கள் பெற்றுக்கொள்ளும் உரிமையையும் குறிப்பிடுகிறது.

இப்பட்டயம் வழங்கியதற்கு முன் வேறொரு பட்டயம் வழங்கப்பட்டிருந்ததையும் அதில் குறிப்பிட்டிருந்த கிடாரிப்பட்டி மாங்குளத்துக்குப் பதிலாக வேறு குளப்பாசனங்கள் அளிக்கப் பட்டதையும் குறிக்கிறது.

''முன் பட்டயத்துக்கு எதிரிடை காணியாட்சி பட்டையம்'' என்ற வரிகள் செப்பேட்டில் உள்ளன.

1 சுபாமத்தி ஸ்ரீ[1]மன்மகாமண்டேலேசுரன் ஆயிரம் இரவிபாடன் பாஷெக்கு தப்புவரா கண்ட

2 ன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பாண்டி மண்டலத் தாபனாசாரியன்

3 சோழமண்டலம் நரலோகர் கண்டன் நவகோடி நாராயணன் யீழமுங் கம்பளமும்

4 யாற்பாண[2] பட்டணமும் கெசவேட்டை கண்டருளிய ராசாதி ராசன் ராசபரமேசுரன் ராச

5 மாத்தாண்டன் ராசகெம்பீரன் மலைகலங்கினு மனங்கலங்காத கண்டன் செகுவீறபிற

6 இடுவார் கண்டன் குடைக்குக் கர்ணன் பொறுமைக்குத் தன்மன் அழகுக்னங்கன்[3] அறிவிலகஸ்

7 ற்தியன்ச் சொல்லுக்கு அறிச்சந்திரன் ஈ[4]ளஞ் சேதுமட்டும் செங்கோல் செழுத்தி ஆண்

8 டருளிய பிறபுடை தேவமகராயர் விருப்பாட்சிராயர் வீர நரசிங்கராயர் மல்லிகாச்சிராயர்

9 ராமதேவராயர் சீரங்கராயர் திருமலைநரேந்திரன் மெச்சியவிருதராயர் கண்டன் கெருட

10 க்கொடி அனுமக்கொடி விருதுடையோன் திருமாலிருஞ்சோலைத் திருப்பதி காவலுடை

11 யோன் இம்முடி அச்சிராம கவண்டருக்கு முன் அமுதார் திருமலைநம்பியளும் அரம

12 னையாரும் சகாற்தம் ௲௨௱௰ (னை)க்குமேல் செல்லா நின்ற ஏவிளம்பி ௵ (வை)பங்கூ

13 னி மீ ௨௰௭௨ குடுத்த காணியாட்சிப் பட்டையத்துக்கு நாளது திருமலைநரேந்திரன்

14 மெச்சியப்பிறதானி வயித்தியப்பய்யனவர்களும் தளநாயக்கன் ராமப்பய்யனவர்க

---

1. ''சுபமஸ்து''. என்று படிக்கவும்.

2. 'யாழ்பாண' என்று படிக்கவும்.

3. 'அழகுக்கு அனங்கன்' என்று படிக்கவும்.

4. 'இ' கரமே சுழித்து 'ஈ' காரமாகக் காட்டப்பட்டுள்ளது.

15 ளும்(த்)தலத்தில் அமுதார் திருமலைநம்பியள் சகலருங்கூடி சுவாமி ஆண்டவன் திரு

16 க்கம்பத்தடியில் இம்முடி அச்சிராம கவண்டருக்குப் பரிவட்டமுங்கட்டி வெகு

17 மானமும் பண்ணி முன் பட்டையத்துக்கு எதிரிடை காணியாட்டி ஷிப்[5]பட்டையங்

18 குடுத்தது சுவாமி ஆண்டவன் திருவிளையாட்டமான[6] சிறுபாலைக்கு எல்லை இது

19 க்குத் தெற்கு பிள்ளையாநேந்தல்க்கரை இதன் தென்மேல்மூலை வயலூர் கீளோடிய கூரை

20 யிலுள்வா யிதன் மேற்கு ஓடை மேளிமடங்கலுக்கு மேற்கு அதிகாரி காட்டுக்குக்

21 கிளக்குப் பாம்பைமாத்துப்புத்து இதன் வடமேல்மூலை பாணாறு கொண்டான் குளத்

22 துள்வாயில் உப்போடை ஒடிய வாய்க்கால் இதன் வடக்கு வில்லவராயர் காணியும்

23 ஓடைக்கிஏந்தல்க் கடவயல் இதன் கிளக்கு திருவாதூற் காலோடி மேளிமடங்கன்

24 வில்லவராயர் சங்கிடயத்தானு இதன் கீளோடி வில்லவராயர் காணியாட்ஷிக்கு வ

25 டக்கு நல்லமனாயக்கர் இலந்தைகுளத்துச் சொறிகல் பிஞ்சைமேடு இதன் கீளோ

26 டிய மேனி மடங்கல் புதுப்பட்டிக்கு மேல்புறம் ஊறணி உள்வாய் இதன் கீளோடி

27 வடகீள் மூலைகல்லணை குளத்துள் வாய்க்கால் முற்குறம்பு—இதன் தெற்குகோடி பறளிக்கு

28 ளத் துள்வாயில் மேல்கடைக்கோம்புள்வாய் இதன் தெற்கோட மேனி மடங்

29 கல் அரையூர்க் குளத் துள்வாயில் மூலைசம்பைகுளத்துக் கீளக்கரை யுளால் இ

30 ந்தச் சதிரத்தில் இன்னாங் கெல்கைக்குள்பட்டது[7] நஞ்சை பிஞ்சை மாவிடை மரவி

---

5. 'காணியாட்சி' என்று படிக்கவும்.

6. 'திருவிடையாட்டம்' என்று படிக்கவும்.

7. 'இந்நான்கெல்லைக்குட்பட்டது' என்று படிக்கவும்.

31 டை கீள்நோக்கிய கணறும்[8] புத்திரபவுத்திர பாரம்பரைக்குந் சந்திரப்பிறவே

32 சமே சந்திராதித்த வரைக்கும் உம்பளிக்கை சறுவமானிபமாகக் கட்ட

33 ளையிட்டது தண்டியலும்பிளிகைக்குக் கட்டளையிட்டது வயலூர் சம்பை குள

34 ம் அரையூர் அலங்காநல்லூர் பாதைவளி காவலுக்கும் உம்பளம் விட்டது சொ

35 ன்ன வேலைகாறர் இருக்குங் கம்மாளப்பட்டி யிட்டங் குளத் துள்வாயில் கறுப்ப

36 டக்கி மேல் மணியஞ்சி ஆறுத்துப்பட்டி வலையப்பட்டி திருப்பதிக்குக் கிளக்கு மலை

37 யோரம் புளியமரத்துப்பட்டி யுள்பட அனுபவிச்சிக் கொள் வாராகவும் இதன்

38 க்காவல்ச்சீர்வை கோலைக்குறிஞ்சிக் கட்டைக்குளம் தனிச்சியம் இதன் கிளக்கு

39 புதுப்பட்டி கல்லணை சத்திரத்து பாதை புதுக்கோட்டை இதின் தெற்கு விளாங்குடி

40 இதன் மேற்கு தேனூர் வைய்கை வடபி(ற) முண்டாகிய கிறாம மெல்லாம்க் காவல்

41 கட்டளையிட்ட படிக்குக் கிறாமங்கள் தோறும் உண்டாகிய சொல்ச் சுவந்திரம் நஞ்

42 சை பிஞ்சை சகலமும் சுற்றி சுவந்திரம் சுவாமிய முள்பட அனுபவிச்சு கொள்ளுவ

43 ாராகவும் சுவாமி ஆண்டவன் திருப்பதியும் பாதைவளியும் காத்துக் கொண்

44 டுத் தமக்குக் குடுத்தப் பட்டையப்படிக்கு உண்டாகிய கிறாம மெல்லாம் அனுபவி

45 ச்சுக்கொண்டு ஆடித்திரு(வி)ளாச் சித்திரைத் திருவிளாத் திருமங்கைஆள்வார் திரு(வி)

46 ளா இந்தவகையில் உண்டானது சன்னதி வெகுமான முன் கட்டளைப்படிக்கி

6. 'கிணறும்' என்று படிக்கவும்.

47 வாங்கிக் கொள்ளுவராகவும் இந்தப்படிக்குச் சம்மதித்து அமுதார் திருமலை ந

48 ம்பியன் தலத்திலுள்ளவர்களும் பிறதானி வயித்தியப்பய்யன வர்களும் இம்முடி

49 அச்சிராம கவண்டருக்குப் பட்டையங் குடுத்தோம் இந்தப் பட்டையம் எழுதினது

50 விளுப்பாதராயர் முன்பட்டயத்தில்க் கிடாரிப்பட்டி மானகுளத் துக்குப் பதில்

51 பாம்பைக்குளம் ஆன்னக்குளம் தேவப்பண்ணைவெச்சி நெருஞ்சிக்கு மேல்பிறம் க

52 ள்ளிக்குடி உள்வர்ய்யேந்தல் பிஞ்சை நஞ்சை உள்பட அனுபவி ச்சுக் கொள்ளு

53 வாராகவும் இப்படிக்கு திருமலை நரேந்திரசுவாமி திருவிளப் பிறசாதப்படி

54 அமுதார் திருமலைநம்பியன் வயித்(தி)யப்பய்யனவர்கள் சமூகத்தில் நிலவரம் பண்

55 ணி பட்டையம் எழுதி இம்முடி அச்சிராமகவுண்டருக்கு குடுத்தது உ

அமுதார் - திருமலைநம்பி - திருமலநரேந்திரன் பிறதானி-வயித்தியப்பன் உ
உ ராமசந்திரசகாயழ உ

[சங்கு திருநாமம் சக்கரம். வரிவடிவங்கள்]




முன் பக்கம்

சிறுவாலை ஜமீன் செப்பேடு

பின் பக்கம்





முன் பக்கம்



பின் பக்கம்

இராஜாக்காபட்டிச் செப்பேடு

TAMIL NADU STATE ... OF ARCHAEOLOGY
LIBRARY.
ACC NO ....
Date ....
MADRAS 28.

# 6. இராஜாக்காபட்டி செப்பேடு

## தண்ணீர்ப்பந்தல் மானியம்

**இடம்**

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் உசிலம்பட்டியிலிருந்து ஏழுமலை செல்லும் சாலையில் எட்டு கி. மீ. தொலைவில் இவ்வூர் உள்ளது. இவ்வூர் திருத்தேவன் வகையறாவைச் சேர்ந்த திரு. கோடங்கருப்புத்தேவர், திரு. வெள்ளையத்தேவர் ஆகிய சகோதரர்களிடம் இச்செப்பேடு இருந்ததை அறிந்து நாட்டார்மங்கலம் பள்ளியாசிரியரும் இத்துறையில் கோடைகாலக் கல்வெட்டுப் பயிற்சி பெற்றவருமான திரு. பழனியப்பன் அவர்கள் இத்துறை கல்வெட்டுப் பயிற்சி மாணவர் திரு. கோபால்சாமியின் உதவியோடு படித்தும், பிறகு இப்பட்டயத்தை மைப்படி யெடுக்கப் பெற்றுத்தந்தும் உதவினார். இச்செப்பேடு சுமார் 80 ஆண்டுகளுக்கு முன் எலி வேட்டைக்குச் சென்றவர்களால் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

**அமைப்பு**

இச்செப்புப்பட்டயம் 22·5 செ. மீ. நீளமும், 14·5 செ. மீ. அகலமும் உடையது. பட்டயத்தின் தலைப்பகுதியின் நடுவில் ஒரு பெரிய இதழமைப்பு துளையுடன் உள்ளது. மேலும் தலைப்பகுதியில் இரு ஓரங்களில் சிறு சிறு இதழ்களும் உள்ளன. முன்புறம் 26 வரிகளும், பின்புறம் 8 வரிகளும், எழுதப்பெற்றிருக்கின்றன.

**காலம்**

பிலவங்க ஆண்டு ஆவணி மாதம் 25-ம் தேதி (26-8-1667 திங்கள்). பட்டய எழுத்தும் அமைப்பும் பிற்காலத்தியப் படியாக எண்ண வைக்கிறது. செய்திகளுக்கு இன்றும் சான்றுகள் உள்ளன.

**செய்தி**

திருமலைநாயக்கர், குமரக்கோவில் உள்ள இடத்தில் (படைவீடு) வந்திருந்தபோது திருவத்தேவன், பேயத்தேவன் ஆகியோர் பாதகாணிக்கைப் பணம், அரிசி, ஆடு, பசு முதலியவற்றுடன் தங்கத்தாலும், வெள்ளியாலும் பூக்கள் செய்து கொண்டு சென்று முன் வைத்து வணங்கி மகிழ்வித்தனர். இவர்கள் விண்ணப்பத்திற்கு இணங்க இவர்கள் கோவலங்கணவாய் அருகில் அமைந்திருந்த பிள்ளையார் கோயில், சுமைதாங்கிக் கல், கிணறு மற்றும் தண்ணீர்ப்பந்தல் ஆகியவற்றிற்கு அரசன் மானியம் வழங்கினான். மானிய நிலத்தின் எல்லைகள் பேசப்படுகின்றன.

இன்றும் கோவலன் கணவாய் அருகில் எவ்வித ஊரும் இல்லாத நிலையில் ஒரே ஒரு தேனீர்க்கடை மட்டும் உள்ளமை இவ்விடத்தில் அன்று தண்ணீர்ப்பந்தல் அமைக்க வேண்டியதின் அவசியத்தை நமக்கு நன்கு உணர்த்துகிறது. அங்கு உபயோகமற்ற நிலையில் கிணறு, கல்லால் ஆகிய நீர்த்தொட்டி, உடைந்த சுமைதாங்கிக்கல், பிள்ளையார் சிலை, சிதைந்த ஒரு கல்வெட்டு ஆகியவை உள்ளன.

உ றாமசெயம்

1. பிலவங்கா ஸு ஆவணிமீ உயரு உ மது
2 றபுரித் தலத்துக்கு கற்த்தறாகிய மகறாச மா
3. னிய ஸ்ரீ-ரி திருமலை நாயக்கறவர்கள் கும
4. றகோவில் ஊடையத்தில் வந்திரங்கி சீமை
5. மை பாற்க்கும்போது திருவத்தேவன் பெய
6. த்தேவன்[1] வகையறாப் பேற்கள் தங்கப்பூவு
7. வெள்ளிப்பூவுச் செய்து பால்ப்பசுவு அரி
8. ருள[2] ஆட்டுக்கிடாய் எ நவபாண்டத்துஉ[ட]
9. னே பாதகாணிக்கை ஒடுய்ட பொன் வச்
10. சு றாசாவைக் கண்டு கொண்டாற்கள் அப்போ
11. து றாசாவுக்கு சந்தோசமாகி உங்களுக்கு எ
12. ன்ன வேணுமென்று கேட்டாற் நாங்கள்க்
13. கோவலங் கணவாயருகில் கிணறுவெட்டி சி
14. மைதாங்கி வய்த்து வினாயகன்கோவில் தண்
15. ணீற்பந்தல் வய்த்து தற்மம் செய்திருக்குறோம்.
16. ஷெதற்மத்துக்கு மானியம் தாம்பூரசாதினப் ப
17. ட்டயத்துக்கு உத்தறவாக வேணுமென்று கேட்ட
18. ாற்கள் அந்தப்படிக்கி திருவத்தேவன் பெயத்
19. தேவன் வகையறாவுக்கு உத்தறவாச்சுத யிதற்
20. க்கு மால் நாவாறுபட்டி நாவாறுனாக்கன் நட்
21. ட கல்லுக்கு மேற்க்கு லிங்கம்கோயில் சிலை
22. க்கி கிளக்கு மொட்டமலைக்கி வடக்கு புத்துமேட்
23. டுக்கு தெற்க்கு யிதுக்குளகப்பட்ட பிஞ்சை[3] கள[4] வி
24. ரைப்பாடு மானிபம் பிள்ளையாற்கோவில் மா
25. னிபம் சமீல[5] விரைப்பாடு பிஞ்சை[3] யிந்த மா
26. னிபத்தை புத்திருள் புத்திறாள்[6] உள்ளவரைக்கு

---

1. இவன் வழிவந்தோரைத் தற்போது பெரியதேவன் வகையறா என்று அழைக்கின்றனர்.
2. அரிசி 5 கலம் என்று படிக்கவும்.
3. புஞ்சை என்று படிக்கவும்.
4. 1 கலம் என்பதின் குறியீடு.
5. 4 மரக்கால் என்பதன் குறியீடாகலாம்.
6. 'புத்திராள் பௌத்திராள்' என்று படிக்கவும்.

## பின் பக்கம்

27. ஆண்டுவரும்படிக்கி றாசா உத்தறவு யிதற்கு
28. சாட்சி குருவுரெட்டி நாவாறுனாக்கன் சாட்
29. சி யிதை யாதாமொருதற் அடி அளித்தால்
30. யீசுபறன் பெருமாள் கேள்ப்பாற் யிந்தப் ப
31. டிக்கி கற்த்தறாகி திருமலைனாயக்கறவற்கள்
32. திருக்கறத்தில் ஒப்பம் யிந்தப் பட்டயஞ் செ
33. ய்தவன் மதுரை வடக்கு வாசல் சொக்கலி
34. ங்கம் ஆசாரி உ

# 7. அரசப்பட்டி செப்பேடு

## நீர்பாய்ச்சும் குடும்பனுக்குப் பட்டயம்

**இடம்**

மதுரை மாவட்டம் திருமங்கலத்தை அடுத்த அரசப்பட்டி என்ற இடத்தில் திருவீரக்குடும்பன் என்பவரிடம் இச்செப்புப்பட்டயம் உள்ளது அவ்வூர் சென்று அப்பட்டயத்தின் பென்சில்படியும், புகைப்படமும் எடுக்கப்பட்டது. மத்திய தொல்பொருள் துறையினர் வீரப்பெருமாள்புரம் என்ற அரசப்பட்டியை ஒட்டிய பெரிய கிராமத்தின் பெயரில் இச்செப்பேட்டின் செய்திக்குறிப்பை 1963-64 ஆம் ஆண்டறிக்கையில் வெளியிட்டுள்ளனர்.

**அமைப்பு**

இச்செப்பேடு 23·5 செ.மீ. நீளமும் 17 செ.மீ அகலமும் உடையது. தலைப்பின் நடுப்பகுதியில் துளையுடன் கூடிய இதழமைப்புள்ளது. தலைப்பின் இரு முனைகளிலும் சிறிய இதழ்கள் உள்ளன. எழுத்துக்கள் ஒரு பக்கம் மட்டும் 24 வரிகளில் பொறிக்கப் பட்டுள்ளன.

**காலம்**

செயவருடம் ஆனிமாதம் 9ஆம் தேதி (7-6-1654 புதன்). பட்டய அமைப்பையும் எழுத்துக்களையும் பார்க்கும்போது இப்பட்டயம் பிற்காலத்தில் படியெடுக்கப்பட்டிருக்கக் கூடுமெனத் தோன்றுகிறது.

**செய்தி**

திருமலைநாயக்கர் அரசப்பட்டிக்கு அருகில் வந்திருந்தபோது வீரக்குடும்பன் என்பவன் அரிசி, பருப்பு, ஆட்டுக்கிடாய், பசு, பாதகாணிக்கை பணம் 20 ஆகியவற்றுடன் சென்று வணங்கினான். மகிழ்ந்த திருமலைநாயக்கர் அவனது விண்ணப்பம் என்னவென்று கேட்டார். அவன் தான் அரசப்பட்டியில் தண்ணீர் பாய்ச்சும் பணி மேற்கொள்ளும் நீராணிக்குடும்பன் என்று கூறித் தனக்கு மானியம் வேண்டுமெனக் கேட்க அதன்படி அவனுக்கு மானியம் தரப்பட்டு இச்செப்புப்பட்டயம் பொறிக்கப்பட்டது.

உ நாயசெயம்

1. செயாஸ் ஆனிமீ" க மதுறாபுரித் தலத்திலிருக்கு
2. ம் ற[ா]சமானிய ற[ா]யர்த் திரி திருமலை நாயக்கறவற்
3. கள் கவண்டங்கோட்டை றுடையத்தில் வந்து யி
4. றுந்து சீமை பாற்க்கும்போது அறசப்பட்டி குடும்ப(ன்)
5. வீறகுடுப்ப வீறானிக்கன் அரிசி பறுப்பு ரூ கள ○[1]

---

1. 'கலம் என்று' என்று படிக்கவும்.

6. ஆட்டுகிடாய் க பால்பசுவு க பாதகாணிக்கை
7. உ௰ஹ[2] யெரிகறும்பு யிவளவு சாமான் வயி
8. த்து றாசாவெ சந்திப்புக் கண்டான் றசாவுக்கு சந்
9. தோசமாகி நீறானிக்க வீறகுடும்பா ஒனக்கு யெ
10. ன்ன வேணுமென்று கேட்டாற் யெனக்கு அறச
11. பட்டி கிறாம கொழமடை குடும்பனாயிருந்து வே
12. லை பாத்து வாறதுநாலை யிதுக்கு மானிபம் நஞ்சையில்
13. கனளி பெரியமடை வாக்காலில் சின்னகாணிக்கி உஇய்[3]
14. காணி பிஞ்சை மாநிபம் சூஇஜு[4] நிலம் யிதுக்கு தாம்
15. பூறசாதின பட்டையம் வேணுமென்று கேட்டே
16. ன் அந்தபடிக்கு றாசா உத்தறவு ஆச்சுது யிந்தப்படி
17. க்கி கற்த்தறாகிய திறுமலை நாயக்கறவற்கள்
18. திறுக்கறத்தால் கயிருப்பம்[5] யிந்தபட்டைய
19. ம் செயிதவன் மதுரை வடக்கு (வடக்கு) வாசல் மீ
20. னாச்சி ஆசாரி யிந்தப்படிக்கி கல்லுகாவேரி
21. புல்லும் பூமியும் உள்ளவரையிலும் ஆண்
22. டு வறவும் யிதை யாதா ஒறுத்தன் அடிஅளி
23. த்தால் கம்படித்தடியான் கறுப்பசாமி கேள்ப்பா
24. ற் உ

---

2. 20 பணம் என்பது குறியீட்டில் குறிக்கப்பட்டுள்ளது.
3. $2\frac{1}{2}$ காணி குறியீட்டில் எழுதப்பட்டுள்ளது.
4. $6\frac{1}{2}$ குழி குறியீட்டில் எழுதப்பட்டுள்ளது.
5. கையொப்பம் என்று படிக்கவும்

# 8. தருமத்துப்பட்டி செப்பேடு - 1

## குடிகள் அமர்த்தி நாட்டாண்மை உரிமைக்குப் பட்டயம்

**இடம்**

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம், கப்பலூர் அருகில் தருமத்துப்பட்டி என்ற இவ்வூர் உள்ளது. இவ்வூரில் உள்ள திரு. தவமணிகல்யாணித்தேவர் என்பவரிடம் பட்டயங்கள் உள்ளதாக மதுரை யாதவர் கல்லூரிப் பேராசிரியர் திரு. இராமானுஜம் அவர்கள் மூலம் அறிந்து சென்று அவரிடமிருந்து மூன்று பட்டயங்கள் பெறப்பட்டு மைப்படிகள் எடுக்கப் பட்டன. அவற்றில் ஒன்றே இப்பட்டயம்.

**அமைப்பு**

இச்செப்பேடு 22·5 செ.மீ உயரமும், 15 செ.மீ. அகலமும் உடையது. விளிம்புகள் சற்று ஒழுங்கற்று வளைந்தவை. முன்பக்கம் 26 வரிகளும், பின்பக்கம் 14 வரிகளும் பொறிக்கப் பட்டுள்ளன. செப்பேட்டின் தலைப்பகுதியின் நடுவில் துளையுடன் கூடிய இதழ் அமைப்புள்ளது.

**காலம்**

துன்முகி வருடம் ஆவணி மாதம் 29-ஆம் தேதிக்குச் சமமான ஆங்கில ஆண்டு 29-8-1656 வெள்ளி.

**செய்தி**

திருமலைநாயக்கர் தன்னுடைய படைகளுடன் மேற்குத்திசைக்குச் சென்று திரும்பிப் புளியங்குளம் அருகில் (இன்றைய மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ளது) வந்தபோது இருளப்பகவுண்டன், புன்னைத்தேவன் இருவரும் அரசனையும் அவனது படைகளையும் இருபொழுதுகளுக்கு இறுத்தி, வேண்டிய உபசரணைகள் செய்தனர். குடிகளே இல்லாது சீரணமாயிருந்த ஊரில் உபசரித்த இருவரையும், கண்டு மகிழ்ந்து அங்கு மக்களைக் குடியமர்த்தி, ஊரமைத்து வடக்குத்தெரு, தெற்குத்தெரு என்று அவ்வூரை இரண்டாகப் பிரித்து நாட்டாண்மை புரியும் உரிமையையும் இருவருக்கும் பகிர்ந்தளித்ததை இச்செப்பேடு காட்டுகின்றது.

உ றாமசெயம்

1 துன்முகி ஹு ஆவணி மீ" உ௯ வ மது.
2 ராபுரிக்கலத்துக்கு[1] கற்த்தறாகிய திரும
3 லை னாயக்கறவற்களும் சில றாணுவங்
4 களும் மேற்கே யாத்திரை (ரை) யாயி
5 ப் போயி திரும்புகாலில் நாகமலை யரு

---

1. தலத்திற்கு என்று படிக்கவும்.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY, MADRAS-28
LIBRARY
Acc No. 10095
Date

6 காண்மையில் புளியங்குளத்தில் வந்து
7 தருகியிருக்கும் போது ஷெ கிராமத்தைச்
8 சேற்ந்த பூமியனில்[2] குடியேறாமல் சீர
9 மையாயிருந்தது[3] னாலே யிருளப்ப கவன்
10 டன் புன்னைத்தேவன் யிருபேரும் றசா
11 வை யெதிற்கொண்டு கண்டு றாசாவையும்
12 றாணுவங்களையு ரெண்டு நேறம் நிருத்தி
13 வயித்து சாமான் படி பாற்க்கிலை[4] விசா
14 றணை செய்து றாசா பூமியை பாற்த்து யிருள
15 ப்ப கவண்டன் புன்னைத்தேவன் யிவாள்
16 பேரில் சந்தோசம் வந்து நாட்டாமை யிரு
17 பேருக்குங் கொடுத்து கிராமமும் உண்டு பண்
18 ணி தெருவும் பகுந்து முதலாவது நாட்டா
19 மை தெற்க்கு தெருவு யிருளப்ப கவண்டனுக்கு
20 ரெண்டாவது நாட்டாமை வடக்குதெரு
21 வும் புன்னைத்தேவனுக்கு தீத்தம் திருமாலை வகைகள்
22 பொங்கல் புதியல் சகலமும் யிவாளு
23 க்கு நடக்கும்படி உத்தறவு யிந்தக் கிராமத்து
24 க்கு மால் வய்யிருக்கன் கிராமத்துக்கு மேற்
25 க்கு கண்ணிமங்கலத்துக்கு வடக்கு தேங்கிலி
26 ப்பட்டி வெள்ளைக்குறட்முக்கு[5] கிளக்கு நாக
27 மலைக்கி தெற்க்கு யிந்த நாங்கு எல்லைக்கு
28 ள்ப்பட்ட பூமியனில் குடியளை உண்டு ப
29 ண்ணி றாசா அரமனைக்கி ௳ சூ ய ட[6] ஹ கற்
30 குத்தகையாய் செலித்தி வறவும் யிதைப்

2. 'பூமியளில்' என்று படிக்கவும்.
3. 'ஜீர்ணமாயிருந்தது' (சிதைவடைந்து இருந்தது) என்று கொள்ளுதல் நன்று.
4. 'வெற்றிலை, பாக்கு'ப் போலும்.
5. 'குறட்டுக்கு' என்று படிக்கவும்.
6. அறுபது பணம் எனக் குறியீடால் எழுதப்பட்டுள்ளது.

31 பின்னோற்கள் அடிஅளிவு செய்தால் காறா
32 ம் பசுவைக் கொன்ற தோசத்திலும் பிராம
33 னாளைக் கொன்ற தோசத்திலும் அடைந்து
34 போவாறாகவும் யிந்தப்படிக்கி கற்த்தறா
35 கிய திருமலை நாயக்கறவற்கள் கயி ஒ
36 ப்பம் சாட்சி வய்யினாக்கன் கருமாத்தூ
37 ற் கணக்கு றாமலிங்கம்பிள்ளை யிந்தப்ப
38 ட்டயந் தயாற் செய்தவன் மேலவாச
39 ல் சொக்கலிங்கம் ஆசாரி வேணும்
40 மீனம்மாள் துணை உ

# 9. தருமத்துப்பட்டி செப்பேடு-2

## 'திருமலை'பட்டம் கட்டி மரியாதைகளுக்குச் செப்பேடு

### இடம்

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் கப்பலூரை அடுத்த தருமத்துப்பட்டி என்ற இவ்வூரில் திரு. தவமணிகல்யாணித்தேவர் என்பவரிடம் பட்டயங்கள் உள்ளதாகத் திரு. இராமானுஜம் அவர்கள் (மதுரை யாதவர் கல்லூரி பேராசிரியர்) தந்த தகவலின் பேரில் அவரைச் சந்தித்து அவரிடம் உள்ள மூன்று திருமலை நாயக்கர் காலப் பட்டயங்களின் மைப்படி எடுக்கப்பட்டன. அவற்றில் ஒன்று இப்பட்டயமாகும்.

### அமைப்பு

இச்செப்பேடு 21 செ.மீ. உயரமும் 14 செ.மீ. அகலமும் உடையது. மூலைகள் சற்றுக் கோணலானவை. தலைப்பகுதியின் நடுவில் துளையுடன் கூடிய இதழ் அமைப்புள்ளது முன்பக்கம் 30 வரிகளிலும் பின்பக்கம் 6 வரிகளிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

### காலம்

செய வருடம் பங்குனி மாதம் 21-ம் தேதி திங்கள்கிழமைக்குச் சமமான ஆங்கில வருடம் 19-3-1655.

### செய்தி

திருமலை நாயக்கரிடம் 'பெத்தபிள்ளை' என்றும் 'திருமலை' என்றும் பட்டம் பெற்ற பெத்தபிள்ளை திருமலைப்புன்னைத் தேவன் என்பவனுக்குக் கம்பிளி அதிகாரம், பாதகுறடு, காளாஞ்சி முதலிய சிறப்புகள் செய்து அவனுக்குக் கம்பிளி போடுகிறபோது பாத காணிக்கையாக 5 பணம், அரண்மனையிலிருந்து பணமுடிப்பு 60 பணம் ஆகியவை கிடைப்பதற்கும்; அவனுக்குப் பெண்குழந்தை பிறந்த போது 'திருமலைபுன்னியக்கா' என்று பெயர் வைத்துத் தங்கப்பதக்கம் வழங்குவதற்கும் மேலும் உச்சப்பட்டி, தருமத்துப்பட்டி ஆகிய இரண்டு கிராமங்கள் அவனுக்கு விட்டுக் கொடுத்ததற்கும் பதினெட்டுப் பட்டிக் கோனார்கள் அவனுக்குச் செய்ய வேண்டிய சிறப்புகளுக்கும் ஆதாரமாக அளிக்கப்பட்ட செப்பு பட்டயம் இது. இதில் சிவகங்கை மன்னர், புதுக்கோட்டை மன்னர் இருவரும் குறிப்பிடப் படுகின்றனர். மதுரையில் இன்றுள்ள யாதவர்களுக்கான கிருஷ்ணமடத்தில் இன்னும் திருமலைத்தேவன் வழியினருக்கு மரியாதைகள் இருப்பதாகத் தெரிகிறது.

உ றாமசெயம்

1 மதுராபுரிக்கி கற்த்தறாகிய திருமலைனாயக்கறவ
2 ற்களுக்கு பெத்த பிள்ளை திருமலைப்புன்னைந்தே
3 வனுக்கு எழுதிக்[1] குடுத்த பட்டயம் செய௵ பங்

---

1. எழு-என்பது குறியீடு மூலம் காட்டப்பட்டுள்ளது.

4 கூனி மீ௵ ௨௰௧ ௨ சோமவாறத்தில் நாடு யெ
5 ட்டு வணிகத்துக்கும் கம்பிளி அதிகாரமும் பு
6 டிசெம்பும் பட்டமும் முதமையும் பாதகொ
7 றடு காளஞ்சியும்[2]ஆக யிவளவும் திருமலை
8 ப் புன்னைத்தேவனுக்கு பட்டங்கட்டி வச்சது ஷெ
9 யானுக்கு வருமானம் சாதியாற் நாட்டில் வந்
10 து கம்பிளி போடுகிறபோது பாதகாணிக்
11 கை ௰௫ வச்சு கண்டு கொள்கிறரது ரெண்டா
12 வது சுந்தத்தேவன் மூணாவது ஒச்சாத்தேவ
13 ன் ஷெ திருமலை புன்னைத்தேவனுக்கு அரமனை
14 யிலிருந்து ௨ ௯௰ ௰ முடிப்பு குடுத்தனுப்பு
15 கிரது ஷெயானுக்கு பெண் குளந்தை பிரந்தத
16 க்கு திருமலைப் புன்னியக்காளென்று[3] பேறும்
17 வச்சு தங்கப்பதைக்கமும் போட்டு வீரமடை
18 யான் செயிக்கி கிளக்கு கணக்கு மானிபத்துக்கு வ
19 டக்கு நாலுசெயி நிலம் நஞ்சை மானிபம் பாக்கு
20 வெத்திலை சிலவுக்கு உச்சப்பட்டி தற்மத்துப்பட்டி ஆ
21 க ரெண்டுகிராமம் விட்டுக் குடுத்தது பதினெட்டுப்
22 பட்டிக் கோனாக்கள் ஆடி தீவாளி சங்கழுந்தி[4]
23 க்கி கும்புக்(கு)[5] கிடாய் க னாக்கமாறகள் பால்க்கு
24 டம் நெய்க்குடம் கொண்டு வந்து கண்டு கொ
25 ள்ளவும் யிந்தப்படிக்கி ராசமானிய ஸ்ரீதிரி
26 திருமலை நாயக்கறவற்கள் ஒப்பம் சாட்சி சிவ
27 சங்குறாசா தொண்டமான் புதுக்கோட்டை சி
28 வத்ததம்பி கறுமாத்தூற் கொண்டிரி மா
29 யத்தேவன் தாம்பூரப்பட்டயஞ்செய்தவன்

---

2. 'யும்' என்பது குறியீடு மூலம் காட்டப்பட்டுள்ளது.
3. 'பொன்னியக்காள்' ஆதல் வேண்டும்.
4. 'சங்கராந்தி' என்றிருக்கலாம்.
5. 'கெரம்பு கிடாய்' எனப் படிக்கவும்.

## பின்பக்கம்

30 ஆசாரி யிந்தப் பட்டயத்தை பின்னோர்கள்
31 அடி அளிவு செய்தால் பிராமணாளைக்கொன்
32 றதோசத்திலுங் காறாங்கோவைக் கொ
33 ன்ற தோசத்திலு அடைந்து போவாறாகவும்
34 வேணும் சொக்கலிங்கம் மீனம்மாள் து
35 ணை உ முனுசாமிதுணை உ

# 10. தருமத்துப்பட்டி செப்பேடு-3

## திருமலைபுன்னைத் தேவனுக்குக் கோனார்கள் செய்ய வேண்டியவை பற்றியது

**இடம்**

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம், கப்பலூரை அடுத்த தருமத்துப்பட்டியில் திரு. தவமணிக்கல்யாணித்தேவர் என்பவரிடம் மூன்று செப்பேடுகள் உள்ளன. மதுரை யாதவர் கல்லூரி பேராசிரியர் திரு- இராமானுஜம் அவர்கள் தந்த தகவலின் பேரில் இச்செப்பேடுகள் பெறப்பட்டு மைப்படி எடுக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றே இது.

**அமைப்பு**

இப்பட்டயம் 24 செ.மீ. நீளமும், 15.5 செ.மீ அகலமும் உடையது. விளிம்புகள் ஒழுங்கு இல்லாதவை. தலைப்பகுதியின் நடுவில் ஒரு துளையுடன் கூடிய இதழ் அமைப்பும் இரு முனைகளில் ஒவ்வொரு சிறிய இதழ் அமைப்புகளும் உள்ளன. எழுத்துக்கள் ஒரு பக்கம் மட்டும் பொறிக்கப்பட்டவை. முன்பக்கம் முப்பது வரிகள் மட்டும் உள்ளன.

**காலம்**

பார்த்திப வருடம் ஆனி மாதம் 19-ஆம் தேதிக்குச் சமமான ஆங்கில ஆண்டு 17-6-1645 செவ்வாய்க்கிழமை.

**செய்தி**

திருமலைபுன்னைத்தேவன், ஆறுதாயமகன் ஆகிய இருவரும் திருமலைநாயக்கரை ஆட்டுக்கிடாய், அரிசி பருப்பு, பாதகாணிக்கைப் பணம் ஆகியவற்றுடன் சந்தித்துச் சந்தோசப் படுத்தினார்கள். மகிழ்ந்த மன்னன் என்னவேண்டும் என்று கேட்க, கோனார்கள் (கோங்கி மார்கள்) தெருவில் வீட்டுமனைகள் இருவருக்கும் விட்டுக்கொடுக்கவும், மதுரை ராவணச் சாவடியில் அவர்கள் கூடும் போது, கொம்புகிடாய், குத்துக்கிடாய் கொடுக்கவேண்டுமென்றும் நிலங்களில் ஆட்டுக்கிடை கிடத்தப்போனால் வருமானத்தில் ஒருபங்கு கொடுக்க வேண்டு மெனவும் வேண்டினர். அதன்படி செய்ய மன்னன் இப்பட்டயம் வழங்கியுள்ளான்.

உ றாமசெயம்

1 பாத்திவா ௵ ஆனி மீ ௰௯ மதுறாபுரித் தல
2 திலிறுக்கும் றாசமானிய றாயர் ஷத்திரி[1] திறு
3 மலைநாயக்கறவற்களிடத்தில் தெயிவ கே

---

1. ஏனைய சில செப்பேடுகளில் 'ஸ்ரீத்திரி' என்றுள்ளது.

4 ாத்திறமாகிய திறுமலை புன்னைத்தேவனை
5 சேற்ந்த ஆறுதாய மகனும் ஆட்டுக்கிடாய் க
6 அரிசி பறுப்பு ருா[2] பால்பசு க பாதகாணி
7 க்கை ருடை[3] சீனி சக்கரை யெரிதுறும்பு
8 யிவழவு சாமான் வயித்து றாசாவெ சந்
9 திப்புக் கண்டாற்கள் றாசாவுக்கு சந்தோ
10 சமாகி கோத்திறமாகிய புன்னைத்தேவ
11 ா ஒனக்கு யென்ன வேணுமென்று றாசா கே
12 ட்டாற் எனக்கு கோங்கிமாற்கள் ரெண்டு தெறு
13 வீதி௦ கட்டடம் விட்டுக் குடுக்கவும் யிதை சேற்ந்த
14 கிறாம(ம்)பதினெட்டுபட்டி கோங்கிமாற்கள்
15 றாவான சாவிடியில் கூடியிறுக்கும்போது
16 தெயிவ கோத்திறமாகிய புன்னைத்தேவனு
17 க்கு கும்புக்கிடாயி க குடுக்கவும் குத்துக்கிடாய்
18 ஆறுதாயி மகனுக்கு குடுக்கவும் தேவற்கிடை
19 க்கிப் போனால் கிடை வறுமானம் ஒறு பங்
20 கு குடுக்கவும் யிந்தப்படிக்கி தாம்பூறசாதின
21 பட்டையம் வேணுமென்று கேட்டான் அந்
22 தப்பட்டிக்கி றாசா உத்தறவு ஆச்சுது யிந்தபடிக்கி
23 திறுமலைநாயக்கறவற்கள் திலுக்கறத்தால்[4] கை
24 கயிஒப்பம் யிந்த பட்டையம் செயிதவன்
25 மதுரை பொன்னம்பலபிள்ளை மகன்
26 முத்துப்பிள்ளை யிதை ஆறாமொறுதன் அடி
27 அளித்தால் றாவான சாவிடியில் உள்ள தே
28 வாதியளும் மீனாச்சி அம்மனும் கேள்க்கும்
29 யிதில் புன்னைத்தேவன் ஆறுதாயமகன்
30 சேற்ந்தவன் உ

---

2. 5 கலம் என்பதாகலாம்
3. 50 பணம் என்பதாகலாம்
4. திருக்கரத்தால் என்று படிக்கவும்

# 11. மங்கலரேவுச் செப்பேடு

## சாதி இகழ்ச்சி பேசியவனுக்குத் தண்டனை

**இடம்**

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டத்தில் மங்கலரேவு என்ற ஊரில் திரு. வி. ராமசாமி நாயுடு அவர்களிடமிருந்து தொல்பொருள் ஆய்வுத்துறை கல்வெட்டாய்வாளர் திரு. செ போசு தன் ஆய்வில் பெற்று மைப்படி எடுத்திருந்தார். அந்த மைப்படி இவ் வெளியீட்டிற்காகப் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்செப்பேட்டின் வாசகமும், செய்தியும் கட்டுரையாகத் தஞ்சை தொல்லியல் கருத்தரங்கில் திரு. செ. போசு அவர்களால் படிக்கப்பட்டு வெளியாகியுள்ளது.

**அமைப்பு**

இச்செப்பேடு 22 செ.மீ. நீளமும், 15 செ.மீ. அகலமும் உடையது. தலைப் பகுதியின் நடுவில் ஒரு துளையுடன் கூடிய இதழ் அமைப்பும் இரு முனைகளில் சிறிய இதழ் அமைப்பு களும் உள்ளன. முன்பக்கம் 34 வரிகளும், பின்பக்கம் 10 வரிகளும் உள்ளன.

**காலம்**

ராக்ஷச (றாச்சிதா) வருடம் ஆடி மாதம் 29-ஆம் தேதிக்குச் சமமான ஆங்கில ஆண்டு 29-7-1615 சனி (அல்) 26-7-1675 வியாழன்

**செய்தி**

சிந்துரெட்டி என்பவர் தனது கிராமமான சின்னாரெட்டிப்பட்டியை விற்பதற்கு முனைந்தார். சோலப்பரெட்டி என்பவர் அதை வாங்க முன்வந்தார். சிந்துரெட்டி சோலப்ப ரெட்டியைக் குரவரெட்டி என்று இகழ்ந்துபேசி விலைக்குக் கொடுக்க மறுத்து விட்டார். இகழப்பட்ட சோலப்பரெட்டி நன்மறம் என்ற ஊருக்குத் திருமலை நாயக்கர் வந்தபோது அவரிடம் முறையிட்டார். திருமலைநாயக்கர் முத்துலிங்க தும்பிச்சினாக்கரை கலந்து நியாயமறிந்து இகழ்ச்சி பேசின சிந்துரெட்டியிடமிருந்து ஊரைப்பறிமுதல் செய்து சோலப்ப ரெட்டிக்கு கொடுத்ததையும், சிந்துரெட்டிக்கு அன்றாடவாழ்வுச் செலவுக்காகச் சிலவற்றை மட்டும் விட்டுக்கொடுத்ததையும் இச்செப்பேடு கூறுகிறது.

உ றாமசெயம்

1 றச்சிதா வு ஆடி மீ உக உ சின்னாரெட்
2 டிபட்டி சிந்துரெட்டி சுப்புலாபுறத்தில்ப்
3 போய் ஊரைவிக்கப் போனான் அப்போது
4 ஷைறுற் சோலப்பரெட்டி நான் கிராமம் வா
5 ங்கிக் கொள்கிரேனென்று சொன்னான்.

6 உனக்கு விக்கிறதில்லையென்று குரவரெட்டி எ
7 ன்று சோலப்பரெட்டியைப் பாற்த்து யிகள்
8 ச்சியாய் சொன்னான் ஷையான் கோபங்கெ
9 ண்டு கற்த்தறாகிய மகறாச மானிய ஸ்ரீத்திரி
10 திருமலைனாயக்கறவர்கள் நல்லமறம் கோவ்
11 விலில் சீமை பாற்க்க வந்திரங்கி யிருந்தா
12 ற்கள் அப்போது சோலப்பரெட்டி சமூகத்தி
13 ல் பிறாது சொன்னது சிந்துரெட்டி ஊரை
14 விக்கப் போனான் நான் கேட்டேன் என்னை வி
15 த்தேசமாய்ப் பேச்சுப்பேசி உனக்கு விக்கிரதி
16 ல்லையென்று சொன்னான் றசாவாகிய திரு
17 மலைனாயக்கறவற்களுக்கு பாதகாணிக்கை
18 ஷெகூமய[1] பொன் வச்சுக்கண்டுகொண்டா
19 ன் ஷை றாசாவானவற் முத்துலிங்கத்தும்
20 பிச்சினக்கரை வறவளைச்சு யிருபேற் நாய
21 த்தை பாற்ப்பதில் சிந்துரெட்டி பேரில் கு
22 த்தம் சிமந்து கட்டினவீடும் -௬- சங்கிலி நி
23 லமும் நஞ்சை -௪- காணி வச்சு சீவனம் பண்
24 ணிக் கொண்டிருக்கவும் சோலப்பரெட்டிக்கு
25 சோலப்பனாக்கரென்று கற்த்தாக்களரிய பா
26 ளையகாறரிய னக்கமாரென்ற[2] பட்டங் குடுத்த
27 து சோலப்பனக்கருக்கு நாட்டாமை முதமை
28 தீத்தம் திருமாலை சகலமும் தாம்பூரசாதினப்
29 பட்டயத்தில் உத்தறவு சிந்துரெட்டிக்கி கலியா
30 ணச் சிலவு ஷெ-௬மய[3] பொன் நெல்லு -௪- பொ
31 தி வரகு -௨- பொதி ஒறு யெருமாடு யிவளவும்
32 வாங்கிக் கொண்டபடியினாலே சின்னாரெட்

---

1. பணம் 60 பொன்
2. பணம் 30 பொன்
3. 'நாயக்கன்மார்' என்ற பட்டம்

33 டிபட்டியைத்தொட்டு சிந்துரெட்டிக்கி பாத்திப
34 ம் யில்லையென்று எழுதிக்[4] குடுத்தது சோலப்

## பின் பக்கம்

35 பனாக்கனுக்கு யிதை யாதாமொருதற் அடி
36 அளித்தால் புதுநயினாற் பெருமாள்கேள்
37 ப்பாற் யிதற்கு சாட்சி கொட்டாணிபட்டி
38 வெள்ளையனாக்கன் நல்லமறம் சூரியதேவ
39 ன் யிந்தப்படிக்கி கற்த்தறாகிய திருமலைனாயக்
40 கறவற்கள் திருக்கறத்தில் ஒப்பம் பாளைய
41 காறன் முத்துலிங்கத் தும்பிச்சினாக்கற் கய்
42 யி ஒப்பம் சிந்துரெட்டி கய்யி ஒப்பம் யி
43 ந்தப் பட்டயஞ்செய்தவன் நல்லமறம் கும
44 றாண்டி ஆசாரி உ

4. எழுதி என்பது குறியீட்டால் சுருக்கி எழுதப்பட்டுள்ளது.

# 12. இராமநாதபுரம் செப்பேடு-1

### ( கோயிலுக்கு நிலம் கொடுத்தது )

**இடம்**

இராமநாதபுரம் சேதுபதிகள் அரண்மனையைச் சேர்ந்த இச்செப்பேடும் மேலும் 31 செப்பேடுகளும் சேதுபதி வழி அரசரிடமிருந்து அன்பளிப்பாகப் பெறப்பட்டு இராமநாதபுரம் இராமலிங்க விலாசத்தில் அமைந்துள்ள தொல்பொருள் ஆய்வுத்துறை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. இச்செப்பேடுகள் இராமேஸ்வரம் மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலரில் வெளியிடப்பட்டுள்ளன. இச்செப்பேடு அம்மலரில் 12வது எண் பட்டயமாக வெளியிடப்பட்டுள்ளது.

**அமைப்பு**

இச்செப்பேடு 25.5 செ.மீ நீளமும் 17 செ.மீ. அகலமும் உடையது. ஓரங்கள் ஒழுங்கற்றவை. தலைப்பகுதியின் நடுவில் ஒரு துளையுடன் கூடிய இதழும் அவ்விதழிலிருந்து ஓரங்களுக்கு விரிந்தவை போன்ற இரு இதழ்களும் அமைந்துள்ளன. முன் பக்கம் 37 வரிகளும் பின்பக்கம் 8 வரிகளும் எழுதப்பெற்றுள்ளன. எழுத்துக்கள் ஒழுங்கற்ற நிலையில் பொறிக்கப்பட்டுள்ளன.

**காலம்**

சகம் 1395, சித்தார்த்தி ஆண்டு தை மாதம் 27ஆம் தேதி எனக்காணப்படுகிறது. சக ஆண்டு திருமலைநாயக்கர் வாழ்ந்த நூற்றாண்டையொட்டி அமையாததால் தமிழ் ஆண்டைக் கணக்கில் கொண்டால் 24-1-1620 திங்கள்கிழமை அல்லது 25-1-1680 ஞாயிற்றுக்கிழமை என்று சொல்லலாம். இரண்டாவதில் (25-1-1680) பூர்வபக்ஷம் 4வது திதி வருவதாலும் செப்பேட்டில் 5வது திதி குறிப்பதாலும் 25-1-1680 ஞாயிறு ஏற்புடையதாகலாம்.

**செய்தி**

பிடாரனேந்தல் வேதபுரிசுவாமி கோவில் இறைவனுக்கும், இறைவிக்கும் சிவதர்மம் திருப்பணி ஆகியவற்றுக்காக மும்முடிசெட்டி என்பவர் திருமலைநாயக்கரிடம் 4000 கலிபொன் கொடுத்து விலைக்கு நிலம் வாங்கிக் கொடுத்ததைக் குறிக்கிறது.

1 ஸவஸ்தி ஸ்ரீ கோமாறனாகிய திருபுவ

2 ன சக்கவர்த்தி வீரபாண்டித்தேவர்ஆண்டு


3 பெற்ற சாலிவாகன சகாப்தம் ௲௩௱௯௰௫

4 ரு மேல் செல்ல நின்ற சித்திறாவுத்தி (வுத்தி) ஷு


5 தைய் மீ ௨௰௭ ௨ பூர்வ பக்ஷத்து பஞ்சமி

6 யும் சோமவாரமும் மகா நக்ஷத்திர ஸா . . . .
7 வ நாம நாம யோகமு வஓவா[க] ரணமும் கூ
8 டிய சுபயோக சுபதினத்தில் கூடல் மதுரை
9 வகை மானதி மேவிய தென்ம்பாண்டி வளநாடு ஸ
10 ஹமஸநாதிவதி[1] கத்தநாகிய திருமலை நாக்கரவர்கள்
11 சறாப்பு[2] மும்முடி செட்டியார் அதறம்பூற் கூ[த்]
12 தத்தில் முப்பேர் பொருந்திய மும்முடி சோள
13 புரத்துக்கு தென்பிடாகையாகிய சீறணநல்
14 லூர் திருக்கானைப்பேற் கூ(த்)தத்தில்[3] நல்லவள நாட்
15 டில் சேனைமாநகர் மேவிய பிடாரனேந்தல் வே
16 காவில் வேதபுரீசபாமியாருக்கும் பூவிலிமே
17 ல்லி நல்லதேவியாருக்கும் சிவதற்மம் திருப்
18 பணி செய்து கலி(ண)சதூ பொன்[4] ராசஸ்ரீ திரு
19 மலைனாயக்கரவர்களுக்கு குடுத்து ரொக்க கிரைய
20 த்துக்கு வாக்[5] கிவிட்டது கோவில் திருவிருப்பு நத்தம்
21 கீள்பாறக் கெல்கை யாவது புதுகுறிச்சி கண்மாய்
22 காரைகி மேற்கு மேல்பார்க்கெல்கை பிடாரனே
23 ந்தல் வயல் பாப்பான்குட்டம் யெல்கைக்கி கிளகு
24 வடபாறக்கெல்கை அய்யன்கோவில் திடலுக்கும் அ
25 னுமானேந்தலுக்கு தெற்கு தென்ம்பாறக் கெ(ல்)கை புதுக்கு
26 ட்ச்சிக்கும் செம்புகுட்டது (க்)குவட(க்)கு இன்னாகெல்ல(க)கி உள்ப
27 ட்ட அறிச்சினாபர்கம்[6] உள்பட்ட நத்தந் தேறோடு வீதி வே
28 தாப்பு கோவில் கிறாமம் மாவடி தனியூர் கீள்
29 பாறக்(கெ)ல்கை செம்பு குட்டத்துக்கும் புலவன் குட்ட
30 த்துக்கு(மே) மேற்கு மேல்பாறக்கெல்கை கோவிந்தமங்
31 கலத்துக்கும் மூலவயலுகு கிளக்கு வட்பாறக் செ

1. சமஸ்தானாதிபதி என்று படிக்கவும்
2. ஷராஃப்
3. கூற்றம்
4. நான்காயிரம் பொன்
5. வாங்கி
6. அர்ச்சனாபோகம்




முன் பக்கம்




பின் பக்கம்

இராமநாதபுரம் செப்பேடு - 1



தருமத்துப்பட்டிச் செப்பேடு - 3



இராமநாதபுரம் செப்பேடு - 3

32 க[ல்]கை மேமருதங்குளத்துக்கும் கீள்மருதங்கொளத்துக்கும்
33 தெற்கு [தென்ம்பார்க்] தென்ம்பாற்க் கெல்கை கோப
34 ாலனேந்தலுகு வடக்கு இன்னாங்கெல்கைகி உள்பட்ட
35 நஞ்சை புஞ்சை மாவடை மரவடை திட்டு திடல் ஆவி
36 ரை கொளுஞ்சி கீள்னோக்கிய கிணறு மேல்னோகிய
37 மர௸[7] மீன்ம்படுபள்ளம் தேன்ம்படுசோலை

## பின்பக்கம்

38 நிதி நிட்சோபம்[8] உடும்போடிய மற்றும் [றெறும்] வே
39 தபுரி சுவாமியாருக்கு பூதானமாக ஆதிசண்டேசுபர பட்டை
40 டயம் பண்ணி ஷை கோவில் குறுக்கள் பரமேஷ்பர நம்பிய
41 ார் கய்யில்த் தானம் பண்ணி குடுத்தேன் இந்தபடி ஆதிசந்தி
42 றாதித சந்திர பிறவேசமாயி புத்திறா பெ[ள]த்திரா பாரம்பரை
43 ரயாயி அனுபவித்துக் கொள்ளகடவாறாகவும் இந்தப[டி]
44 க்கி கல்லும் செம்பிலும் கண்டு குடுத்தேன்
45 மும்முடி செட்டி

---

7. ம் எழுத்து கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ளது
8. நிட்சேபம்

# 13. இராமநாதபுரம் செப்பேடு - 2

## ( இராமேஸ்வரம் குருக்கள்மார் சபை, தமிழ் ஆரியர் இசைவு முறி )

### இடம்

இராமநாதபுரம் சேதுபதிகள் அரண்மனையில், இச்செப்பேட்டோடு 32 செப்பேடுகள் இருந்தன. இவை அனைத்தும் சேதுபதி மன்னரால் இராமநாதபுரம் இராமலிங்க விலாசத்தில் தொல்பொருள் ஆய்வுத் துறையால் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்துக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டுள்ளன. அவற்றில் நான்கு திருமலைநாயக்கர் காலத்தவை இச்செப்பேடு அந்நான்கனுள் இரண்டாவது செப்பேடாகும். இது இராமேஸ்வரம் கும்பாபிஷேக மலரில் செப்பேடு எண் 3 ஆக வெளியாகியுள்ளது.

### அமைப்பு

இச்செப்பேடு ஓலைச்சுவடி வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது 53 செ.மீ. நீளமும் 13.5 செ.மீ அகலமும் உடையது. நீளம் அதிகமாதலால் இரண்டு செப்புத்தகடுகளை ஒன்றாக இணைத்து நீளமாக்கியுள்ளனர். எழுத்துக்கள் தொடக்கத்தில் நெருக்கமாக மிகச் சிறியதாகவும் பிற்பகுதியில் இடைவெளிவிட்டுப் பெரியதாகவும் பொறிக்கப்பட்டுள்ளன. முன்பக்கத்தில் 18 வரிகளும் பின்பக்கத்தில் 13 வரிகளும் காணப்படுகின்றன.

### காலம்

பிரசோற்பத்தி ஆண்டு தை மாதம் 15-ஆம் தேதி இதற்குச் சமமான 13-1-1632 வெள்ளிக்கிழமை

### செய்தி

இராமேஸ்வரம் கோயிலில் உள்ள குருக்கள்மார் சபையார், தமிழ்ஆரியர் அனைவருமாக ஒன்று கூடி, இராமேஸ்வரம் கோயிலில் உள்ள எந்தெந்த தெய்வங்களுக்கு எந்தெந்த பூஜைகள் செய்வது, விழாக்கள் நடத்துவது, அதற்குப் பெற்றுக் கொள்ளும் பங்குகள் என்ன என்பதை நிர்ணயித்துத் திருமலை நாயக்கருக்கும் தளவாய் சேதுபதி காத்த தேவரவர்களுக்கும், எழுதிக் கொடுத்த இசைவுமுறி இச்செப்பேடு ஆகும்.

1 பிறசோற்பதி ௵ தைய் மீ ௰௫உ திருமலைநாயக்கரய்யனவர்களுக்கு தளவாய்சேதுபதி காத்ததேவரவர்களுக்கு ராமீசுரம் குருக்கள்மார் சபையார் தமிழ் ஆரியர் அனைவருமோம் இசைவுமுறி குடுத்தபடி நாங்கள் அனைவரும் சுவந்தர

2 சுவாமியம் நிமித்தமாய் அ[ர்]ரமனை ஏறிப்போய் வாசலில் கும்பிட்ட படியினாலே அரமனையார் கேட்டு வகைய்த்தபடி சுவாமி பூசிக்கிற

குருக்கள்மார் அவர்க செய்யும் தொழில் அனுமேசுரத்தை பூசை பண்ணுகிறது ராமனாதசுவாமியை பூசை பண்ணுகி

3 றது மலைவளர் க[ா]தலியம்மனை பூசை பண்ணுகிறது படிகலிங்கத்தை பூசை பண்ணுகிறது உச்சவ விக்கிரகம் ராமனாத சுவாமியை பூசை பண்ணு கிறது த[ா]ண்டவேசுரரை பூசை பண்ணுகிறது தேவை அம்பலவாண

4 ரை பூசை பண்ணுகிறது பல்லக்கு னாயகரைப் பூசை பண்ணுகிறது மெழுந் தருளப் பண்ணுகிறதும் வெள்ளைத் துற்க்கையம்மனை பூசை பண்ணுகிறதும் சுத்து கோவிலுக்கும் பரிவார தேவதையளுக்கும் நெய்வே

5 த்தியும் தீபாராதனையும் பண்ணுகிறதும் திருவாபரணம் சாத்துகிறதும் யிந்ததொழில் காலாகாலங்களிலே பண்ணிக்கொண்டு யெங்கள் சுவந்திரம் அனுமேசுர பூசைக்கு யவ[1] ராமனாதசுவாமி பூசை

6 க்கு யகம் அம்மன் மலைவளர் க[ா]தலி அம்மன் பூசைக்கு யவம்[1] ஆக யகஇ[2]யும் பிறசாதம் பூறுவமில்லாத படியினாலே பிற்ப்பாடு கட்டளை யிட்டது படிகலிங்க பூசைக்கு பிறசாதம் யிருனாழியும் வெள்ளை து

7 ற்கைக்கு னாழிப் பிறசாதமும் ஆக முன்னாழி பிரசாதமும் சந்தணம் பத்துக்கு ஒன்றும் தோசை வடை பணியாரம் பத்துக்கு ஒன்றும் பாக்கு வெத்திலை யேழ் னாளைக்கு ஒரு னாளும் யேறுபடி மாத மொன்றுக்கு

8 கய் வித்தாரம் அழகு பணி சாத்த யசம் திருக்காற்த்திகைக்கு ஒஉ யக மார்கழித் திருவிழாவுக்கு ஒஉ யகம் மாசித் திருவிழாவுக்கு கும்பவத்திரத் துக்கு[3] பச்சவடம் மூன்றும் கும்பதெட்சணை ஒஈ

9 ம் தன்ம கற்த்தர் உபயக் கட்டளையில் ருத்திரர் ஆடி செகம் பண்ணிவித்தால் யஎம் பஞ்சாமிறுதம் பண்ணிவித்தால் ஒரு பணமும் குப்பி அபிஷேகம் காவடி உண்டி கட்டில்காசும் எள்ளும்

10 சுவாமிக்கு ரண்டு பங்கும் எங்களுக்கு ஒரு பங்கும் பத்திக் கொள்ள கடவோ மாகவும் சபையார் செய்யிற தொழில் விசுவலிங்கம் ராமலிங்கம் மலைவளர் க[ா]தலி அம்

11 மன் எழுந்தருளும் நாயகர் தாண்டவேசுர தேவை அம்பலவாணசுவாமி இவர்களுக்கு திருமஞ்சனமு மெடுத்து கட்டுகிறது உள்ளே கொண்டு வந்து வ

1. பணம் $\frac{1}{4}$ என்பது குறியீட்டால் எழுதப்பட்டுள்ளது
2. $1\frac{1}{2}$ என்பது குறியீட்டில் எழுதப்பெற்றுள்ளது
3. கும்ப வஸ்த்ரம் (குடத்துக்குக் கட்டும் ஆடை)

12 ச்சபடி கட்டளையை எடுத்துக் கொடுக்கிறது சுயம்பாகமும் பண்ணி அந்த நெய்வேத்தியமும் சன்னதியில் கொண்டு வந்து போடுகிறது தூபதீபம் கொடுக்கி

13 றது சுத்து பரிவாற தேவதையளுக்கு அபிஷேகமும் பண்ணி நெய்வேத்தியம் கொண்டு போறது சீவிலிநாயகர் பல்லக்கிலெழுந்தருளப் பண்ணுகிறது யாணை மேல்

14 திருமஞ்சனம் கொண்டு வருகிறது வந்த பரிசுக்கு கோடி தீர்த்தமெடுத்து விடுகிறது இந்த தொழில்களெல்லாம் சபயார் காலகாலங்களிலே செய்து கொ

15 ண்டு எங்கள் சுவந்திரம் னாளொன்றுக்கு படி பிறசாதம் நாழி இருபத்து நாலும் சுத்துக்கட்டளை உபையத்தில் குறுணிக்கு நாழிப் பிறசாதமும் கறியமுது எட்டிலொன்றும் சிலவரி

16 சிக்கு நாளொன்றுக்கு அரை பணமாக மாதமொன்றுக்கு பதினன்ஞ்சு பணமும் பத்திக்கொள்ளக் கடவோமாகவும் தமிழ் ஆரியர் செய்யிற தொழில் இந்த வகைச் சன்னிதிய

17 ளுக்கு நெய்வேத்தியம் பண்ணின தளிகை மாத்துகிறதும் சய்வப்பண்டா ரங்கள் யிருக்கிற அறைபோக மத்துண்டாகிய அறைமுறையிலே யிருக்கிறதும் சந்தணம்

18 அரைக்கிறது திருவிளக்கு பார்க்கிறது பல்லக்கு யெழுந்தருளப் பண்ணுகிறதும் உச்சவத்துக்கு சுவாமியை கேடகத்தில் திருத்தேரிலெழுத்தருள

## பின்பக்கம்

19 ப்பண்ணுகிறதும் அந்த அந்த சன்னதிவாசல் காத்திருக்கிறதும் வில்வம் திருமாலை கட்டுகிற பண்டாரங்களல்லாமல் விஷேச முண்டானால்

20 செய்து வருகிறதும் தானத்தார் திருவாபரணம் கொண்டு போய் வய்க்கிறதும் கட்டியம் அட்டபம் காளாஞ்சி அண்ணக் கெண்டியை பரிசையடியொழுக்கு சலம் அ

21 ணை சுதாசியளுக்கு தட்டி பாற்க்கிறதும் நிற்மாலியம் சில வழிக்கிறது வந்து இருக்கிற காரியக்காறர் மரியாதி மனுசருக்கு பிறசாதம் கொண்டு போய் குடுக்கிறது இந்த தொழிலுண்

22 டாகியதெல்லாம் செய்து கொண்டு யெங்களுக்கு நிலபரம் பண்ணின சோறம் சம்பளமும் பத்திக்கொண்டு காலாகாலங்களிலே சுவாமி பணிவிடை தாட்சி வாரா

23 மல் செய்து வரக்கடவோமாகவும் யிப்படி காலாகாலங்களிலே பூசை பண்ணாமலிந்தாலும் கோவில் யடைத்தாலும் ராச முத்திரைக்குள்ப்பட்டு நடவாமலிருந்தாலும்

24 அரமனைக்கு அபராதம் அட்டித்திருனூறு பொன்னு மிறுத்து யெங்கள் காணியாட்சியும் இழந்துபோகக் கடவோமாகவும் இந்தப்படிக்கு சம்மதித்து இசைவுமுறி குடுத்தோ

25 ம் திருமலைநாயக்கரய்யனவர்களுக்கும் தளவாய்சேதுபதி காத்த தேவரவர்களுக்கும் குருக்கள்மார் சபையார் தமிழு ஆரியருமோம் இந்த படிக்கு தி

26 ருமலை நாயக்கரய்யனவர்கள் பாதத்தாணை தளவாய்சேதுபதி காத்த தேவர்களாணையே தப்பாது இந்த இசைவுமுறியெழுதினேன் முத்துக்கா

27 மாட்சி உ வாமதேவகுருக்கள் கெங்காதரகுருக்கள் சங்கரகுருக்கள் சறுவேசுரகுருக்கள் ராமனாதகுருக்கள் சந்திரசேகரகுருக்கள் சவையாரில்

28 செராமபட்டன் வீரிசிபட்டன் நரசிங்கபட்டன் தமிழு ஆரியரில் நயினார் அரிசந்திரன் நாராயணன் வேல்வாங்கினான் தம்பிராமன் உமையாதேவன் அ

29 மரர் தொழநிண்ணான் சோமேசுர முதலி கடலடைத்தான் கெங்கையாடி பெருமாள் சறுவேசுரன் ஆண்டயினான் நயினாபிள்ளை சேது நிலையிட்ட பிரமாதிராயன். தெ

30 சரதராமன் தாண்டவமூத்தியார் அரிபட்டன் பெரியமுதலியெங்குதேவன் சந்திரதேவன் ஆண்டயினான் மாதவபட்டன் ராமபிள்ளை தன்மராசி தாறுமூர்த்தி ஆண்டாயினா

31 ன் சறுவேசுரன் தம்பிநாயினார் ஒப்பில்லாத பெருமாள் தும்மினியாண்டி உ.

# 14. இராமநாதபுரம் செப்பேடு - 3
## (கோயில் மரியாதை, காணிக்கை உரிமைக்குப் பட்டயம்)

**இடம்**

இராமநாதபுரம் சேதுபதிகள் அரண்மனையில் இச்செப்பேட்டுடன் 32 செப்பேடுகள் இருந்தன. இவை சேதுபதி மன்னரால், இராமநாதபுரம் இராமலிங்க விலாசத்தில் அமைந்துள்ள அருங்காட்சியகத்துக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. இவற்றில் 4 செப்பேடுகள் திருமலை நாயக்கர் காலத்தவை அவற்றில் இது மூன்றாம் செப்பேடாகும். இராமேஸ்வரம் கும்பாபிஷேகச் சிறப்பு மலரில் இப்பட்டயம் எண் 26 ஆக வெளிவந்துள்ளது.

**அமைப்பு**

22 செ.மீ. நீளமும் 14.5 செ.மீ. அகலமும் உடையது. எழுத்துக்கள் முன்பக்கம் மட்டும் 23 வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளன. தலைப்பகுதியின் நடுவில் துளையுடன் கூடிய ஒரு இதழமைப்பு மட்டும் உள்ளது. செப்பேடும், எழுத்துக்களும் புத்தம் புதியதாய்க் காட்சி தருகின்றன.

**காலம்**

ஆனந்த ஆண்டு, ஆவணி மாதம் 15-ஆம் நாள்.

**செய்தி**

அலவாக்கரை கோயிலில் இராமநாதபுரம் இராமலிங்க சேதுபதி தீர்த்தமாடி வழிபடும் போது தீர்த்தம், திருமாலை முதலிய சிறப்புக்களும், காணிக்கைகளும் ஒருவருக்கு வழங்கப் பட்டதைக் குறிக்கிறது. யாருக்கு வழங்கப்பட்டது என்பது இச்செப்பேட்டின் மூலம் அறிய முடியவில்லை. இச்செப்பேடு திருமலைநாயக்கர் காலத்தில் எழுதப்பெற்று, பிற்காலத்தில் அது மாற்றப்பெற்று மீண்டும் புதிய சொற்களைச் சேர்த்து எழுதப்பெற்றதாகத் தோன்றுகிறது.

உ ஸ்ரீமசெயம்

1 ஆனந்தா ஷு ஆவணி மீ" ௰டு - மதுறாபுரித் த

2 லத்திலிறுக்கும் ஸ்ரீசமானிய றாயர் ஷத்திரி

3 திறுமலை நாயக்கறவற்கள் பள்ளிமடம் த

4 ாலுகாவில் வந்து யெறங்கியிறுக்கும்

5 போது றாமநாதபுறம் றாமலிங்கதொரை

6 றயவற்கள் அலவாக்கரையி லிறுக்கும் றா

7 மயீசுபறன் கோவில் சாமிக்கி ௰௮ வை
8 க கொடிகட்டி றாமேசுபரன் தீத்தம் ஆ
9 டி பச்சைபுல்லை மிதியாமல் தன்னீற் ஆ
10 த்து வளியே போயி சாமிதெரிசினம் ப
11 ண்ணி தீற்த்தம் குதிக்கும்[1] போது சாமி வறு
12 ம்படி தீற்த்தம் திருமாலை பிறசாதம் வாங்
13 கி வாறது யிந்தப்படிக்கி - ௯௰௧ - மாண்
14 டு ஆனந்தா ௵ தாம்பூற சாதிநப் பட்டயம்
15 சய மொகற் போட்டுக் குடுத்தாற் யிந்தப்
16 படிக்கி திருமலைநாயக்கறவற்கள் திருக்க(ர)
17 றத்தால் கயிஒப்பம் யிந்தப்படிக்கி றாம
18 லிங்க தொறை யவற்கள் கயிஒப்பம்
19 யிந்தப் பட்டயம் செயிதவன் மதுறாபுரி
20 வடக்கு வாசல் பொன்னம்பலம் பிள்
21 ளை யிதை ஆறாமொறுதன் அடிஅளிவு
22 செயிதால் றாமநாதபுறம் றாமயீசபற
23 ன் கேள்ப்பாற் உ

---

1. குளிக்கும் போது என்று படிக்கவும்

# 15. இராமநாதபுரம் செப்பேடு - 4

(வீரமுடிவாளர் உறவின்முறை பட்டயம்)

### இடம்

இராமநாதபுரம் சேதுபதிகள் அரண்மனையில் இச்செப்பேட்டுடன் 32 செப்பேடுகள் இருந்தன. இவை சேதுபதி மன்னரால் இராமநாதபுரம் இராமலிங்க விலாசத்தில் தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அமைந்துள்ள அருங்காட்சியகத்துக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. இவற்றில் 4 செப்பேடுகள் திருமலை நாயக்கர் காலத்தவை. அவற்றில் இது நான்காம் செப்பேடாகும். இராமேஸ்வரம் கும்பாபிஷேக மலரில் எண் 15-ஆவது பட்டயமாக இதன் வாசகம் வெளியிடப்பட்டுள்ளது.

### அமைப்பு

இச்செப்பேடு நான்கு ஏடுகளைக் கொண்டுள்ளது. 30 செ.மீ. நீளமும் 12 செ.மீ. அகலமும் உடையது. இருபுறமும் பெரிய எழுத்தில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. தலைப்பகுதி ஓரத்திலிருந்து படிப்படியாக அடுக்குகள் அமைந்து நடுவில் இதழமைப்புடையது. நடுவில் துளை உள்ளது. தொடக்கப் பகுதியில் சேவல், மயில், வேல் முதலியவை வரிப்படமாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

### காலம்

கலி ஆண்டு 4584, விகாரி ஆண்டு தைத் திங்கள் 15-ஆம் நாள், திங்கள்கிழமை

### செய்தி

பாடல் வடிவில் முதலில் முருகப்பெருமானது சிறப்புகளையும், அடுத்து விசயநகர மன்னர் மதுரை நாயக்கர் சிறப்புகளையும் கூறிப் பின், திருமலை நாயக்கர் சிறப்பினைக் கூறுகிறது. இதனைத் தொடர்ந்து பாளையப்பட்டு சின்னோப நாயக்கனைப் புகழ்ந்து அவனிடம் வீரமுடி வாளர் மடசிவாலயம் அமைக்க உரிமை வேண்டியதைத் தெரிவிக்கிறது. மேலும் சிவாலயத்திற்கு வருபவர்களுக்கு உப்பு, எண்ணெய், காரம் வழங்க வேண்டுமென்பதையும் இது தொடர்பான செலவுகளுக்கு வீரமுடிவாளர் உறவின் முறையினர் குடிக்கு இரண்டு பணமும், திருமணங்களுக்கு கொடுக்க வேண்டிய பணமும், பிள்ளையார் பூசைக்குக் கொடுக்க வேண்டிய பணமும் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. இது பழனிப்பகுதியைச் சார்ந்த செப்பேடு. எப்படியோ இராமநாதபுரம் பகுதிக்குச் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

1 ஆறுமுகம்துணை சிவமயம்

2 உ வைய்ய நீடுக மாமளை[1] ம

3 ண்ணுக மெய் விரும்பிய அன்

---

1. 'மாமழை' என்று படிக்கவும்

4 பர் விளங்குக சைய்வ நன்னெ
5 ரிதான் தளைத்தோங்குக தெ
6 ய்வ வெண்திருநறு[2] சிறக்கதே
7 வ கருணை பொழி திருமுகங்க
8 ளாறும் வாழி கரகமல பன்னி
9 ரண்டு கையும் வேலும் வாழி
10 இருசரணமெந்தலை மேல் ந
11 ாமு மோங்க யிந்திர விக்கப் பா
12 லுமினிதும் வாழி அருள் ப
13 ாலி அமரர்சிரை மீட்டே ஆ
14 ண்ட ஆறிரண்டு திருநயனத்த
15 ளகும் வாழி மருவணியும் மை
16 பங்கடப்பந் தாரு மார்பும் வாழி ம
17 யில் பரி செஞ்சேவல்க் கொடி
18 யும் வாழி அடியவற்க் கெழியாய்
19 வாழி மடந்தைதன்னாமந்தா[3] வ
20 ாழி மாதவன் மருகாவாழி திடம்
21 புணை வேலாவாழி தேவராருயிரே
22 ர வாழி படந்த பேரசுரர் கூத்தா
23 ன[4] பரனேவாழி வாழி ஸ்ரீதிரி
24 புவன தகன பரமேசுபர குமார
25 ன் தேவர்கள் தேவன் தெய்வ
26 லோகநாயகன் அகிலாண்ட

2. 'திருநீறு' என்று படிக்கவும்
3. 'மைந்தா' என்று படிக்கவும்
4. 'கூற்றான' என்று படிக்கவும்

27 கோடி விறுமாண்ட நாயகன்
28 கோகநகனேச் சரச மாடிக் கு
29 ட்டிக் குடிமியை நெட்டை போ

## முதல் ஏடு பின்பக்கம்

30 க்கி கொல் விறுமம் பதங் கொடு
31 த்த குமாரக் கெம்பீரன் கொக்
32 கார வலை கொட்ட றாவுத்தன் வ
33 க்கிறமிடு அசுரேசா வட்டநீர் ெ
34 ராப்ப உக்கிறமயில்லேறி வரு
35 ம் உத்தண்ட தீரன் பக்கனாற்ப் ப
36 கட்டா ராக்கர் பட்டிடர் படைக்க
37 மூாத்தில் கொக்கரித்துடல்க் கி
38 ளித்த குக்கிடக் கொடிக் குமாரன்
39 கூளி கொட்டக்கூகை பசாசுக
40 ள் தோக்க நிறத்த தழமொத்த சூ
41 ரன் மழவாதற்கு வடிவேலெ
42 டுத்த சேவுகதீரன் மகா முரவோ
43 ங்குங் கொக்கு நாகமுரை வெட்டி
44 விட்ட தேவர் சிரை மீட்ட தேவ
45 ர் சேணாபதி திசிரகினிலென் வ
46 ரிப்பரிய வீசிடு மரகத கலாபன்
47 மாயவர் கன்ன நாரதன் வழுத்த
48 வேள்வியில்ப் பிறந்த திருபுரிே
49 காட்டுத்தகர் வரும் மதியோன் அ
50 கஷ்த்தியற்குச் செந்தமிள்ப் பணு
51 வலு மாறெளுத்துண்மையு
52 ம் ஓதிவித்தவன் தேனுவுக்கு

53 யின்பம் சிறப்பாலழித்தவன் சூ
54 ரியனுக்குப் பதவி தோன்ற யழி
55 த்தவன் வாணிக்கு வாக்கு வரமு
56 ங் கொடுத்தவன் மலைமகள்க்
57 கின்பமும் வாள்வுங் கொடுத்த
58 வன் அசுரர் குலைகாரன் அம
59 ராபதிகாவலன் தோடுசெரிக(ா)

## இரண்டாவது ஏடு முன்புறம்

60 திரன்ன தோகை மயில் வாக
61 னன் சீதரன் திருமுருகன் சிவ
62 சுப்பிரமன்னியன் சண்டப்பிற
63 ச்ண்டன் வன்டக் கொரு மிண்ட
64 ன் உத்தண்ட குமார யானாறு நூ
65 று யஷ்ட்டமங்கலம் யாவினங்
66 குடி பழனிக்கதிவன் பத்திப் பி
67 றியன் பற்த்தவற்த்திநாசலன்
68 பரபதிபுத்திரன் சிவசுதகணாப
69 தி விக்கிணா விணாயகன் தெய்வச
70 கோதரன் யெல்லா தேவர்களு
71 ம் வல்லர்பிதாவாகிய பழனிபிவ[5]
72 ல வேலாயுத சுவாமியார் திருவி
73 ளப்படிக்கு வீரவாகுதேவர் ய
74 ருளிப் பாடல் யீத்திரிளை பழ
75 னிமளை வேலாயுத சுவாமியார் தி
76 ருப்புரம்குன்றம் சீர்அலவாய் அவி
77 னங்குடி ஏரகம் பழமுதிர்சோலை

5. 'பழனிபிலவ' என்று படிக்கவும்

83 லேசுரன் அரிய தழுவப்பாடன்ப் ப
84 ரசைக்குத் தப்புவராய கண்ட
85 ன் மூவராயகண்டன் முத்தமிள்ரா
86 ய கண்டன் கண்டநாடு கொண்ட
87 நாடு கொடாதவன் மண்டலிகர் க
88 ண்டன் துலுக்க தளுவிப்படன் து
89 லுக்கமோகம் தவிள்த்தவன் சே
90 ாழமண்டல பிறாதிட்டானசாரி
91 பாண்டிமண்டல தவனசாரி சே
92 ர மண்டலத் திசையவுதாரன் செ
93 தாண்டர் மண்டல சண்டனப் பி
94 றா சண்டன் எமண்டலமும் திசை
95 ர கொண்டுருளி ராசாதி ராச
96 பரமேசுரன் ராச மாத்தண்ட

## இரண்டாவது ஏடு பின்பக்கம்

97 ன் ராசகெம்பீரன் ராசகும
98 ாரன் ராசபிரதபன் என்னப்பட்ட
99 புகள் பூன்று யின்சொல்லி யினிது
100 தளித்து வள்ளவர் மரவு காத்து மு
101 ப்பால் மொளியும்படியிக்கு அல்ல
102 ாவை கடிந்து நல்லாவை நாடிக
103 ால் மெலியக் குடித்தளைக்க ஆறா
78 குன்றுதோரலடலும் யாகபதியா
79 கிய ஆரு திருப்பதியிலும் எளுந்து அ
80 ருளி மகாபூசை கொண்டருளிய நிற்
81 த்திய சுப்பிறாமணிய சுவாமிக்கு
82 யுகந்தப் பத்தராகிய மகாமண்ட
104 லொன்று கடமை கொண்டு அசை

105 யாமணிக்கட்டி யரசர் யாளு நா
106 ளியில் அறத்துக்கு தற்ம்மரை
107 ப் போலவும் பொறுமைக்கு பூம
108 ாதேவியை போலவுந் குடைக்
109 குக் கர்ண(ண)னைப் போலவும்
110 படைக்கு றாமனைப் போலவும் வி
111 ல்லுக்கு விசைஅனைப் போல
112 வுஞ் சொல்லுக்கு அரிச்சந்திரனை
113 னப் போலவும் கரிக்குத் தேவேந்
114 திரனைப்[1] போலவும் யுளிக்குக்[2] கதி
115 ரோனைப் போலவும் யளிக்கு[3] சந்
116 திரனைப் போலவும் ஆக்கினைக்கு
117 ச் சுக்கிதீபனைப்[4] போலவும் து
118 ஷ்ட்ட நிற்சிஷ்ட்ட பரிபாளிணஞ்
119 செய்து அறுபத்திநாலு பல கிரி
120 துர்க்கத்துக்கு மய்ந்ப்பத்தாறு வன
121 துற்க்கத்துக்கு முப்பத்தாறு த
122 லத் துற்க்கத்துக்கு யிரணூத்துப்
123 பதினாலு கணவாய்க்கும் பதிநெட்
124 டு மன்னியருக்கு எளுபத்தேளு
125 பாளையகாரருக்குந் தெஷ்ணப்பி
126 றவென்ன அதிபதியாகி நாவலோ
127 கம் பெருந்தீவில் விசையநகரத்
128 தில் வீரப்பிறதாபேசுரனாகிய வீர
129 சிங்காசனத்தில் எளுந்தருளி
130 மகராயர் அரியராயர் பிறதாவ ரு

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
Acc No.
Date
MADRAS 8

---

1 யானைக்குத் தேவேந்திரனது ஐராவதத்தைப் போலவும் என்பது பொருள்
2 ஒளிக்கு எனப் படிக்கவும்
3 குளிர்ச்சிக்கு என்று பொருள்
4 சுக்கிரீவனை என்று படிக்கவும்

131 த்திரராய திற(ா)யம்புகராய(னை)
132 ர் வசந்தராயர் யச்சுதராயர் கி
133 ஷ்ணராயர் யெறதிம்மராயர் வே
134 ங்கிடபதிராயர் விருப்பாட்சி ரா
135 யர் முசுகுந்தராயர் குமார நரசி
136 ங்கராயர் சிக்கராயர் சீரங்கராய
137 ர் ஒதியுணர்ந்து யுலக முளுதும் ஒ

## மூன்றாவது ஏடு முன்பக்கம்

138 ரு குடைக்கீழாண்டு வேத வொலியு
139 ம் விழாவர[ா]ாவீதியும் அந்த உடமும்
140 யாகசாலையு சைவநெறியுந் தபோ
141 தண விளக்கமு மாட மாளிகையும்
142 கூட(ா)கோபுரமுந் தண்ணீர்ப்பந்
143 தலுந் தபனசத்திரமும்[5] யிவை முத
144 லான பலவித நம்மையும்[6] சந்தத
145 ம் நடக்கத் தனிமணிகட்டிப் பதி
146 நெட்டாயுதந் தொலில்[7] பெறவே
147 த்தி அல்லவை கடந்து நல்லவை
148 ந[ா]டி கால[8] மெலிய குடிதளைக்க ம
149 குட மன்மதன சுகுட சுந்தனவிரு
150 து துஷ்ட்ட நெட்டூரன் கொட்ட கோ
151 லாகலன் விகடமிடுமருவலர்கள்
152 மகுட முடி திருகி விருது கங்காண

---

5 நீராடுமாடமும் என்று பொருள்
6 நன்மையும் என்று படிக்கவும்
7 தொழில் என்று படிக்கவும்
8 கலி என்று படிக்கவும்

153 ம் கட்டும் வீரப்பிறதாவனமும் முற
154 சறையு முத்தமிள் விநோதன் தவ
155 நெறியுள்ளவன் சத்தியவாசகன்
156 சிவநெரிதழைக்கத் திருநீறுமிட்
157 டவன் சொக்கநாதருக்கு முக்கிய கு
158 ணவான் உச்சிதபோசன்ன யச்சு
159 த நாராயணன் மெச்சிய பாலன் க
160 ச்சியில் தீவன் விசுவனாதநாயக்
161 கர் கிஷ்ட்டணப்ப னாயக்கர் [க]ஷூத்
162 தூரிரங்கப்பன[ா]யக்கர் குமாரகிஷ்
163 ட்டணப்பனாயக்கர் வேங்கிடாப
164 தி னாயக்கர் முத்துளைப்பனாய
165 க்கர் திருமலை னாயக்கர் நான்ம
166 ாடக் கூடலில் மதுரை மானக
167 ரில் உரைஊரில் சிராப்பள்ளி
168 யில் வீத்திருந்து திக்கு விசை
169 யம் பண்ணிச் செங்கோல் செலு
170 த்து னாள் தனது ராட்சியமாகிய
171 கொங்குமண்டலம் நரையநூர்
172 நாடு வஞ்சிலடாபுர சீர்மையில்
173 வைய்யகாபுரி நாட்டியில்ப் பழனி
174 மலை வேலாயுத சுவாமியார் அ
175 தல விதல சுதல நிதல தராகல மகா

## மூன்றாவது ஏடு பின்பக்கம்

176 தல பாதாள லோகமும் பூலோக பு
177 வலோகம் தவலோக சனலோக ச
178 த்தியலோக மகாலோக தெய்வ

179 லோக ஆகப்ப[தி]னாலு லோகத்துக்
180 கும் சரலோகசாமி பச்சாரூப சாயு
181 ட்சிய பதமுஞ் சரிகை கிங்கை[9] யே
182 ாக ஞானமுள்ள சத்தியவாசகன்
183 அசுபதி கெஷபதி நரபதி தனபதி ந
184 மகோடி[10] நாராயணன் வங்களர்
185 சிங்களர் சீனகர் ஆரியர் பப்பார
186 ஒட்டியர் மதங்கர் மரஞவர் மறவர்
187 மலையாளர் கொங்கர் கலிங்கர்
188 கற்(ன்)னடர் துலுக்கர் துளுவர் ம
189 ாறாடர் குதர்குச்சிலியர் குறவர் விப்
190 படிய்கொத்த பேர்களும் ரென்ன ப
191 ட்டதினென்ன பூமியும் ஏளுதீவு
192 ம் சூள்ந்த நாவல் பெருந்தீவில் நர
193 பதியதி பூலோகபுரந்தரன் பூறுவ
194 தெஷணன் வைய்காவூர் நாட்டி
195 ல் பழனிசீர்மைக்கு அதிபன் திரு
196 மலைனாயக்கர் காரியத்துக்கு கற்
197 த்தரான சின்னோபனாயக்கர் கொ
198 சவ சின்னோப னாயக்கர் கருப்பு
199 புலி சின்னோப னாயக்கர் காக்கிப
200 ட சின்னோப னாயக்கர் யிம்முடி
201 பட்ட(ா)த்து வேலாயுத சின்னோபனா
202 யக்கர் குமார சின்னோப னாயக்கர் பி
203 ட்ருதிவி ரட்சிபாரம்[11] செய்யிர னாள
204 யில் அன்பத்தாறு தேச(ா)த்தில்

9 கிரியை என்று படிக்கவும்
10 நவகோடி என்று படிக்கரும்
11 பிருதிவி ராச்சிய பாரம் என்று படிக்கவும்

205 யுள்ள(ா) வீரமுடிவாளர் அனை
206 வோரும் குடி[12] பழனித் தலத்தில் ம
207 ட(ா)சிவலை[13] உண்டு பண்ண வேணு
208 மென்று பழனி சின்னோபனாயக்
209 கர் தவராசபண்டியித கயிலாசர்
210 நம்பியார் கண்டிப்பட்டர் நம்மியார்
211 நல்லாகுருக்கள் பாணிபத்திர உ
212 டையார் பெரிய விறுமையணன்
213 பிள்ளை பழனிகவுண்டன் மத்து மு

## நான்காவது ஏடு முன்பக்கம்

214 ண்ட(ா) தானம் பரிகலாமமும்[14]
215 பதகர் வீரமுடிவாழர் மடசிவா
216 லையத்துக்கு தம்புராசதன(ா)[15] ப
217 ட்டையம் குடுத்தபடி கலியுக சகா
218 த்தம் ச௲ரு௱அ௰ச[16] இ மேல் சில
219 ா நின்ற[17] விகாரி ௵ தையி மீ ௰உ
220 சோமவ[ா]ரமும் பூச நட்சேத்திரமும் பெ
221 த்த சுவதினத்தில் சட்சன்ன சுத்த
222 சிவாசார சம்பன்னரான அகோர
223 வீரமயேசுர வகையில் சிதம்பர
224 உடையார் சிவசன அலங்கார பண்
225 டாரத்துக்கு மடசிவாலையம் வா
226 யுவு மூலையில் வயிரவன் சன்ன

---

12 கூடி என்று படிக்கவும்
13 மடசிவாலயம் என்று படிக்கவும்
14 பரிகலமும் என்று படிக்கரும்
15 தாம்பிர சாதன என்று படிக்கவும்
16 4584
17 செல்லா நின்ற என்று படிக்கவும்

227 திக்கு தெற்கு மட சிவாலயத்தில்
228 யாதம்மொரு வந்த பேருக்கு உப்பு
229 ஊருகாய் நீர்காரம்[18] சுகுறவா[ர][19]க
230 ட்ட(ா)ளை பணிரெண்டு பேருக்கு
231 சோமவ[ா]ர கட்ட(ா)ளை ௴௨ பேற் அ
232 ம்மவசிக் கட்டலை[20] ௬ பேற் யிந்த
233 படிக்கு அய்யர் நம்மிட(ா) தற்மத்தி
234 ல் நடத்தி வரம்படிக்கு வீரமுடிவள
235 ர் தம்மாசதன பட்டைய கட்டானை[21]
236 யிடெ(ா) யிந்தபடிக்கு சேறமண்ட
237 லம் சோழ மண்டலம் பாண்
238 டி மண்டலம் தொண்டமண்ட
239 லம் இன்ன[ா]*ங்கு தேசத்தில் யிரு
240 க்கப்பட்ட வீரமுடிவளற் வீரபத்திர
241 சுவாமி வலது[து]டையில்ல பெற
242 ந்த நித்த மல்லிகைராயன் அஞ்
243 சுமனிக்கு அசையாதகண்டன்
244 தும்பிலும் மதுயன்துரையில்
245 திக்கு வளர் ரங்கமன்னகாபா
246 ட்டேரி கடைகட்டு யமுக்கி வெட்
247 டுவரை வெட்டும் கண னசெமா
248 னை செயம் கொண்டவன் க
249 லிங்கு திரை கொண்டவன் மங்
250 கைய[ா]ர் மணவ[ா]*ளன் வெள்

---

18 நீராகாரம் என்று படிக்கவும்
19 சுக்கிர வாரம் என்று படிக்கவும்
20 அமாவாசைக் கட்டளை என்று படிக்கவும்
21 தன்ம சாதன பட்டயக் கட்டளை என்று படிக்கவும்

## நான்காவது ஏடு பின்பக்கம்

251 ளையானையும் வெள்ளைக் கெ
252 ாடையும் வெட்டு பாவடையும் ஒ
253 வைய வெஞ்சாமரமும் யிப்படி மி
254 க(ா) விருது பெத்து விச கள்ளயெ
255 ளயும் பிடித்த அவன் உலை[22] தளி
256 யகாவும் தலைமு வீர கஞ்சியா
257 கவு கண்ணமுளி[23] நீலமும் உதிரம்
258 சந்திரகாவியும் துடைய் பலகையு
259 ம் முளங்கால் கொட்டாபிடியகவு
260 ம் கைய்யி காத்து கொம்பும் வீரா
261 லந்கம் முள்ளுயிடிக்கியும் பாதம்
262 கொம்பும் யிந்தபடிக்கு மிக(ா)வி
263 ருது பெத்த வீரமுடிவாளர் அனை
264 வோரும் அந்தலை நாகமானது
265 அஞ்சு தலையிலு யெரையெடுத்
266 து ஒரு மிடாரில் யெரைக்கினாப்
267 போல நான் யிவன் யென்று சொ
268 ல்லாமல் குடிக்கு ரெண்டு பணமு
269 ம் கலியாண வீட்டுக்கு மாப்புளை
270 க்கு ஒருபணமும் பெண்ண வீட்டு
271 க்கு ஒருபணமும் பிள்ளையார் பூஜை
272 சக்கு அரைப்பணமும் யிந்த மேலை
273 ரக்கு[24] மண்டலத்தி(ல்) உள்ள(ா)சாதி
274 உர(ா)வின் முறை நம்மிட(ா) சாதி த

---

22 குலை – குடல் என்ற பொருளாதல் வேண்டும்

23 கண்முழி - கண்விழி என்று படிக்கவும்

24 மேற்கு என்று படிக்கவும்

275 ற்ம்மத்து வற்த்தினை தவரமல்[25] கு
276 டுத்து வருவாராகவும் யிந்த தற்ம்மத்
277 துக்கு யதமொருத்தர் வாக்கு சக[ா]யம்
278 சாரிரசக[ா]யம் அற்த்த சக[ா]ய செய்த
279 பேருகல் பழனியில் சத்தநதியில்[26]
280 தீற்த்தம[ா]டி கயிலாசான(ா)தரை பெ
281 ரியனாயகியும் பலனியப்பரையும்
282 வல்லி தெய்வானையும் சேவித்த
283 பலன் பெருவாராகவும் யித்தற்ம்ம
284 த்துக்கு எடம் இகடு[27] செயிதவன் கெங்
285 கரையில் கராம்பசுவை கொன்ற
286 தோசத்தில் போகடவராகவும்
287 சிவமயம் உ

---

25 தவறாமல் என்று படிக்கவும்
26 சப்த நதியில் என்று படிக்கவும்
27 இடறு என்று படிக்கவும்

# 16. மதுரைத்தலத்து ஓதுவார் செப்பேடு

## (ஓதுவாருக்குக் காணியாட்சி)

### இடம்

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் ஓதுவாராகப் பணிபுரியும் தாண்டவமூர்த்தி ஓதுவார் எனப்படும் திரு. தா. குருசாமி ஓதுவாரிடம் இக்செப்பேடு உள்ளது. இவரிடமிருப்பதைக் கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவி செல்வி. மீனாட்சி அறிந்ததை அடுத்து அச்செப்பேடு பெறப்பட்டு மைப்படிகள் எடுக்கப்பட்டன.

### அமைப்பு

இச்செப்பேடு 31·5 செ.மீ. நீளமும், 17 செ மீ. அகலமும் உடையது. செப்பேட்டின் தலைப்பகுதி ஓரங்களிலிருந்து குவிந்து நடுவில் வட்டமான இதழமைப்புடன் விளங்குகின்றது. அதில் ஒரு துளை உள்ளது. துளைக்குக் கீழாகப் பீடத்தின் மீது, நிறுத்தி வைக்கப்பட்ட சூலம் ஒன்று கோட்டுருவமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்துக்கள் முன் பக்கம் 40 வரிகளிலும் பின் பக்கம் 29 வரிகளிலும் எழுதப்பட்டுள்ளன. சில இடங்களில் எழுத்துக்கள் அழிக்கப்பட்டு அவ்விடத்தை விடுத்து அடுத்துத் தொடர்ந்தெழுதியுள்ளனர். செப்பேட்டின் முடிவுப் பகுதியில் எழுத்துக்கள் பெரிதாகப் பொறிக்கப்பட்டுள்ளன. முன் பக்கம் தமிழ் வரிகளின் நடுவில் ஒரு தெலுங்கு வரியும், பின் பக்கம் இறுதியில் ஒரு கிரந்த சுலோகமும் காணப்படுகின்றன.

### காலம்

கலி ஆண்டு 4673, சக ஆண்டு 1544 வெகுதானிய ஆண்டு ஐப்பசி மாதம் 25-ஆம் தேதி. ஆண்டுகள் ஒன்றுக்கு ஒன்று முரண்படுகின்றன. தமிழ் ஆண்டுப் பெயர் சரியெனக் கொண்டு கணித்தால் இதற்குச் சமமான ஆங்கில ஆண்டு, 26-10-1638 வெள்ளிக்கிழமை என்று கூறலாம்.

### செய்தி

திருமலைநாயக்கரால் மதுரைத்தலத்து (கோயில்) ஓதுவாருக்குக் காணியாட்சி நிலமாகச் செங்குளம் என்ற இடத்தில் நன்செய் நிலம் 35 காணியும், புன்செய் நிலம் 23 விரைப்பாடும் (23 கலம் விதையினை விதைக்கக் கூடிய பரப்பு) வழங்கப்பட்டதற்காக இச்செப்பேடு அளிக்கப்பட்டுள்ளது.

1 சு . . . லி ஸ்ரீ றிமன் மகா மண்டலே
2 சுரன் அரியதழவிபாடன் பாஷைக்கு
3 த் தப்புவராத கண்டன் கண்டநாடு கொண்
4 டு கொண்டநாடு கொடாதான் பாண்டிமண்
5 டலத் தாபனாசாரியன் சோழமண்டல பிறதி

6 ட்டாபனாசாரியன் தொண்டை மண்டல
7 ப் பிறதாபன் ராசாதிராசன் ராசபரமே
8 சுரன் ராசமாத்தாண்டன் ராசகெம்பீ
9 ரன் ராசகுலதிலகன் ராசவுத்தண்டன்
10 ராசகுலசேகரன் வீரப்பிறதாபன் ஈ[1]ழமுங்
11 கொங்கும் யாள்ப்பாணமும் யெம்மண்ட
12 லமுந் திறைகொண்டருளிய கெசபதி அசு
13 பதி நரபதி நவகோடி நாராயணன் சோம
14 வங்கிசஞ் சூரியவங்கிசம் யேவல் செய்ய
15 (ய) விசையநகர பட்டணத்தில் வீரசிங்கா
16 சனதிலிருந்து கெசவேட்டை கண்டருளி ரா
17 ச்சிய பரிபாலனம் பண்ணி அருளா நின்ற
18 ஸ்ரீமன் கட்டாரிச் சாழுவரில் உத்துங்க ராய
19 ர் கட்டாரிராயர் விருபாட்சராயர் நார
20 சிங்கராயர் வீரநரசிங்கராயர் பிறபுட
21 தேவ மகாராயர் அல்லமாப் பிறபுதேவ
22 *ம(ா)காராயர் சென்னவசவதேவ மக
23 ராயர் மல்லிகார்ச்சுன மகாராயர் சதாசி
24 வதேவ மகாராயர் வீரவசந்தராயர் கி
25 ஷ்ணராயர் அச்சுதராயர் ராமராயர்
26 வெறி திம்மராயர் திருமலராயர் வேங்கிட
27 பதிராயர் சிக்கராயர் ராமதேவராயர்
28 ஆணைக்குந்திராயர் சீரங்கராயரில்ப் பி
29 றிதிவி பாண்டிமண்டல ராச்சிய பரிபால
30 னம் பண்ணி யருளாநின்ற விசுவநாத நாயக்

---

1. 'இ' யையே சுழித்து 'ஈ' யாகக் காட்டப்பட்டுள்ளது.

* வரிகள் 21-க்கும் 22-க்கும் இடையில் தெலுங்கு எழுத்துக்களில் 'திருமல நாரிமீனாக்ஷி' என்று எழுதப்பெற்றுள்ளது.


31 கர் பெரியகிருஷ்டிணப்ப நாயக்கர் பெரி
32 ய வீரப்பநாயக்கர் குமாரர் கிருஷ்டிணப்ப நா
33 யக்கர் முத்துவீரப்ப நாயக்கர் கஸ்தூரி ரெ
34 ங்கப்ப நாயக்கர் முத்துவீரப்ப நாயக்கர்
35 திருமலை நா[ய]க்கனய்யனவர்கள் ராச்சி
36 ய பரிபாலனம் பண்ணி அருளாநின்ற
37 கலியுக சகார்த்தம் சசூகூாஎ௰கூ சாலி
38 வாகன சகார்த்தம் சூறுாச௰ச-ற் மேல் செ
39 ல்லா நின்ற வெகுதரனிய ஸு அற்பசி

## பின்பக்கம்


40 மீ°உ ௰௬ தேதி ஊருடைய . . . .
41 சிஷன்[2] மதுரைதலத்து அலங்கார ஓது
42 வார் ஆனந்து ஓ(ள)துவார் சித்திரபுத்திர ஓது
43 வார் கனகசபாபதி ஓதுவார் வீதிவிட
44 ங்க ஓதுவார் குமாரன் தாண்டவமூர்
45 த்தி ஓதுவாருக்கு காணியாட்சி பட்டையங்
46 கொடுத்தபடி காணியாட்சியாவது
47 செங்குளம் நஞ்சை நிலம் முப்பது
48 முக்காணியும் புஞ்சை இருபத்தி முக்க
49 ல விரைப்பாடு மாவிடை மரவிடை
50 சொற்னாதாய முள்பட காணியாட்சியாக
51 விட்டுக் கொடுத்த படியினாலே சந்திர
52 ாதித்தர் வரைக்கும் புத்திர பவுத்திர
53 பாரம்பரையாக ஆண்டனுபவிச்
54 சுக் கொள்ளுவாராகவும் இப்படி
55 க்கு நடக்குமிடத்தில் இந்தச் செங்கு

2. சிஷ்யன் ஆக இருக்கலாம்.

56 (கு)ளத்துக்கு விகாதம் பண்ணா
57 மல் அனுகூலமாய் நடத்திவிச்சு வந்
58 த பேர்கள் வங்கிஷ அபிவிற்த்தி
59 யாய் சகல திக்கு விசையங்களும்
60 உண்டாயிருப்பார்கள் அலங்கா
61 ர ஓதுவா[ர்] செங்குளம் வளந்தேறி
62 யிருக்க கடுத்த மலக்கலு ராம சந்
63 திரய்யனெழுத்து
64 **ஸ்வதத்தாத்பி குணம் புண்ய**
65 **ம் பரதத்தாநு பாலனம் ப**
66 **ரதத்தாபஹாரேண சுத**
67 **ஸ்த ஸ்யம் நிஷ்ப பலம் பவே**
68 **து**



முன்பக்கம்



பின்பக்கம்

மதுரைத்தலத்து ஓதுவார் செப்பேடு



பொம்மையக்கவுண்டன்பட்டிச் செப்பேடுகள் - 2,3

# 17. பொம்மையக் கவுண்டன் பட்டிச் செப்பேடு-1

## (அல்லிநகரம்-நாட்டாண்மை வழக்கு)

### இடம்

திண்டுக்கல் அண்ணா மாவட்டம் திண்டுக்கல் வட்டம் செம்பட்டியை அடுத்த பொம்மையக்கவுண்டன் பட்டியில் பெரியகுடி திரு. பொ. பொம்மையன் அவர்களிடம் இச் செப்பேட்டுடன் மூன்று செப்பேடுகள் உள்ளன. இவை தொல்பொருள் ஆய்வுத்துறை, கோவை அகழ்வைப்பகக் காப்பாட்சியர் திரு. இரா. ப. கருணானந்தன் மூலம் அறியப் பட்டு செப்பேடுகளின் மைப்படிகள் எடுக்கப்பட்டன.

### அமைப்பு

இச்செப்பேடு 23·5 செ.மீ. நீளமும், 15·5 செ.மீ. அகலமும் உடையது. தலைப் பகுதியின் இரு புறங்களில் சிறிய இதழ்களும் நடுவில் ஒரு பெரிய இதழும் அதன் நடுவில் ஒரு துளையும், உள்ளன. இப்பகுதியில் உ ராமசெயம் என்று பொறிக்கப்பட்டுள்ளது. முன்பக்கம் 28 வரிகளும், பின்பக்கம் ஆறு வரிகளுமாக எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன.

### காலம்

ஆனந்த ஆண்டு ஆடி மாதம் 25-ஆம் தேதிக்குச் சமமான ஆங்கில ஆண்டு, 24-7-1614 ஞாயிற்றுக்கிழமை.

### செய்தி

அல்லியம்மாள் என்பவரால் அல்லிநகரம் என்ற ஊர் ஏற்படுத்தப்பட்டது. அந்த ஊரில் முதலில் குடியேறியவர் யார்? நாட்டாண்மை யாருக்கு? என்ற சச்சரவு பொம்மையக் கவுண்டன் மகன் சின்னாக்கவுண்டனுக்கும், பாப்பயக் கவுண்டன் என்ற மற்றொருவனுக்கும் ஏற்பட்டது. இவர்களது பிணக்கைப் பாளையக்காரர்கள் தீர்க்க முன்வரவில்லை. அப்போது திருமலை நாயக்கர் அன்னஞ்சி பாளையப்பட்டிற்கு வந்திருந்த செய்தியை ஊரார் கூற, பொம்மையக் கவுண்டன் மகன் சின்னாக்கவுண்டன் திருமலை நாயக்கரைப் பாத காணிக்கைப் பொன், அரிசி, பருப்பு, நெய், காய்கறிகளுடன் வணங்கி நியாயம் வழங்க வேண்டினான். திருமலை நாயக்கர் பாளையப்பட்டுகளைக் கலந்து ஆலோசித்துத் தவறு பாப்பயக்கவுண்டன் பேரில் உள்ளது என்று தீர்ப்புக் கூறி, சின்னாக்கவுண்டனுக்கு நாட்டாண்மைப் பதவி வழங்கினார். இச்செய்தியை இச்செப்பேடு அளிக்கிறது.

உ ராமசெயம்

1 ஆனந்த ஸு ஆடி மீ உரு உ அல்லியம்மாள்

2 அல்லிநகறமென்று ஊறுகட்டினாள் வடக்கே

3 க கன்னிவாடியிலிருந்து காப்பிலிய பொம்ம
4 க் கவண்டன் சின்னாக்கவண்டன் சரியாய் வ
5 ந்து குடியிருந்தான் பாப்பயகவண்டன் நான்
6 முந்தினவனென்று சின்னாக்கவ[ண்]டனை மாட்டுக்கெ
7 ாட்ட மதில்ப் போ(ட்)டாமல் தகறால் செய்தான்
8 ஊறாற் பாற்த்து அன்னஞ்சி ஊடையத்தில் மதுறா
9 புரித் தலத்துக்கு கற்த்தறாகிய மகறாச மானிய ஸ்ரீ
10 த்திரி திருமலைனாயக்கறவர்கள் வந்திரங்கியிருக்கு
11 றாரென்று சொன்னார்கள் ஷி பொம்மக் கவண்டன்
12 மகன் சின்னாக்கவண்டன் பாதகாணிக்கை ௫௰ ெ
13 பான் அரிசி பருப்பு காய்கரி நெயி இவளவும் வச்
14 சு ரெண்டு பாளை பாளையகாறற் என்னுடைய நாயம் கே
15 ள்க்க வில்லையென்று றாசாமுன்பாக பிறாது சொல்லி
16 கய்யெடுத்தான் - யிவாள் ரெண்டு பேரையும் கூப்பிட்
17 டு ந்ாயத்தைப் பாற்த்து பாப்பயகவண்டன் பேரில்
18 குத்தம் சிமந்து அபதாறம் வாங்கி ௰௨ கட்ட ரூபாய்
19 வாங்கி தள்ளிவச்சு சின்னாக்கவண்டனுக்கு ஊ
20 றும் நாட்டாமையும் சொந்தமென்று தாம்பூ
21 ரசாதினப் பட்டயத்துக்கு உத்தறவாச்சுது நஞ்சை
22 ச மானிபம் அரமனை நஞ்சைக்கி மேற்க்கு ௭ காணி
23 பீ[ஞ்]சை மானிபம் தம்பட்டப் பாரைக்கி கிளக்கு ௰௨
24 குளி அல்லிநகரத்துக் குடியள் நாட்டாமை சின்னா
25 க் கவண்டன் சொன்னபடி கேள்க்கவும் யிதற்க்கு
26 காட்சி உள்ளூற் பெத்தினாக்கன் அன்னஞ்சி பாளை
27 யகாறன் கன்னப்ப சேறுவைகாறன் திருமலை
28 கண்டமனா[ய]க்கன் கய்யிஒப்பம் - திருமலை போடி

## பின்பக்கம்

29 னா[ய]க்கன் கய்யி ஒப்பம் யிந்தப் பட்டயஞ் செய்த
30 வன் அன்னஞ்சிக் கோட்டை அளகப்பன் ஆசா
31 ரி யிந்தப்படிக்கி கற்த்தறாகிய திருமலை நாயக்கற
32 வர்கள் திருக்கறத்தில் ஒப்பம் யிதை யாதாமொ
33 ருதற் அடி அளித்தால் யீசுபறன் பெருமாள் கே
34 ள்ப்பாற்கள் உ.

# 18. பொம்மையக்கவுண்டன்பட்டிச் செப்பேடு-2

## ( பெரியதன அதிகாரம் வழங்கிய பட்டயம் )

### இடம்

திண்டுக்கல் அண்ணா மாவட்டம், திண்டுக்கல் வட்டம் செம்பட்டியை அடுத்த பொம்மையகவுண்டன்பட்டியில் பெரியகுடி திரு. பொ. பொம்மையன் அவர்களிடம் இச் செப்பேட்டுடன் மூன்று செப்பேடுகள் உள்ளன. தொல்பொருள் ஆய்வுத்துறை அகழ் வைப்பகக் காப்பாட்சியர் திரு. இரா. ப. கருணானந்தன் இச்செப்பேடுகள் வைத்திருப்பவர் முகவரியையும், தான் சேகரித்திருந்த மைப்படி மற்றும் குறிப்புகளையும் தந்து உதவினார். நேரில் சென்று செப்பேடு பார்க்கப்பட்டு, புதிய மைப்படிகள் எடுக்கப்பட்டன.

### அமைப்பு

இச்செப்பேடு 25 செ மீ. நீளமும், 18·5 செ.மீ. அகலமும் உடையது. இதன் தலைப்பின் நடுவில் சிறு துளையுடன் கூடிய இதழமைப்பு உள்ளது. அதில் இரு வரிகளாலான வட்டம் இடப்பட்டு. அதனுள் 'சயமுத்திரி பட்டயம் றசா கயி ஒப்பம்' என்று பொறிக்கப் பட்டுள்ளது. செப்பேட்டின் முன்பக்கம் மட்டும் 29 வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

### காலம்

414 என்று ஆண்டு எழுதப்பட்டுள்ளது. இது சரியாக இல்லை. அதனை விடுத்து, அடுத்துள்ள விவரங்களின்படி செய ஆண்டு வைகாசி மாதம் 15-ஆம் தேதிக்குச் சமமான ஆங்கில ஆண்டு 13-5-1654 சனிக்கிழமை.

### செய்தி

திருமலைநாயக்கர் திண்டுக்கல் பகுதி வந்திருந்தபோது சீவிலிச்சிறகைச் சார்ந்த பெரிய தனம் பொம்மையகவுண்டன் அரிசி, பருப்பு, ஆட்டுக்கிடாய், பாதகாணிக்கை முதலியவற்றுடன் சென்று பார்க்க, திருமலைநாயக்கர் என்ன வேண்டுமெனக் கேட்டார். அவன் வேண்டியபடி அவனது சாதியில் கம்பிளி, காளாஞ்சி, பிடிசெம்பு மரியாதைகள் வழங்கி, சாதியில் நல்லவை, தீயவை, சாதியில் சேர்த்தல், விலக்கல் போன்ற அதிகாரங்களும் அளித்துப் பட்டயம் வழங்கினார். இச்செய்தியை இச்செப்பேடு தருகிறது.

உ றாமசெயம் உ

சயமுத்தி
ரி பட்டய
ம் - றாசா
கயி ஒப்ப
ம்

1 உ சாமசஞ்ஸ செய ஞ்ஸ வய்யாசி மீ ௰௫ . மதுறாபுரித்த
2 லத்திலிருக்கும் றாசமானிய றாயர் ஷத்திரி திருமலைநாய
3 க்கறவர்கள் திண்டுக்கல்லுத் தாலூகாவில் வந்து யெ
4 றங்கி யிறுக்கும்போது திண்டுக்கல்லுச் சேகறம் சீவி
5 லிச்செறகுல் யிறுக்கும் பெறியதனம் பொம்மய கவண்ட
6 ன் ஆட்டுக்கிடாயி க - அரிசி பருப்பு - ௬ா - பால் பசுவு - க - ப
7 ாத காணிக்கைய் ௫ூ - சீனி சக்கரை வெத்திலை பா
8 க்கு யிவளவு சாமான் வயித்து றாசாவை சந்திப்புக் கண்
9 டான் றாசா சந்தோசமாகி பொம்மய கவுண்டா ஒ
10 னக்கு யென்ன வேணுமென்று றாசாக் கேட்டாற்
11 யெனக்கு யென்சாதி கவிண்டமாற்கள் ௬ கும்பு
12 க்கும் மேட்டு பெரியதனம் அதியாறம் பொம்
13 மைய அம்மாள் கிறுபை கம்பிளி காளாஞ்சி பி
14 டிசெம்பு பாதகாணிக்கை பணம் - ௫ யேரியெழ
15 ந்து மேடு பள்ளமாலால் நானிறுந்து தீறுமான
16 ம் செயிறது பொங்கல் வயித்து கறுங்கிடாய்
17 வெட்டி தள்ளுறதை தள்ளிறது கூட்டுறதை
18 கூட்டுறது சாதியாற் பெரிதனம் பொம்ம
19 ய கவண்டனுக்கு சாதியாற் ஞ்ஸ தலக்கட்டுக்
20 கு வரி௫-க- குடுத்து வரவும் யிந்தப்படி தாம்
21 பூறசாதின சயமுத்திரிப் பட்டயம் முத்திறிப்
22 பட்டயத்துக்கு பொம்மய கவண்டன் யிந்தப்ப
23 டிக்கி திறுமலைநாயக்கற் திறுக்கறத்தால் கயி
24 ஒப்பம்- யிந்தப்படிக் கல்லுங் காவேரி புல்லு பூ
25 மியும் உள்ளவரை ஆண்டுவறவும் யிந்தப்பட்
26 டயம் செயிதவன் திண்டுக்கல்லு வடக்கு வா
27 சல் சவால் முனுசு வேலை மீனாச்சி ஆசாரி
28 யிதை ஆறாமொறுதன் அடி அளித்தால் மீனா
29 ச்சி சொக்கலிங்கம் கேள்ப்பாற் உ

# 19. பொம்மையக்கவுண்டன்பட்டிச் செப்பேடு-3

## இடம்

திண்டுக்கல் அண்ணா மாவட்டம், திண்டுக்கல் வட்டம் செம்பட்டியை அடுத்து இவ்வூர் பெரியகுடி திரு. பொ. பொம்மையனிடம் இச்செப்பேட்டுடன் மூன்று செப்பேடுகள் உள்ளன. இவரிடம் இருக்கும் செய்தியைத் தொல்பொருள் ஆய்வுத்துறை அகழ்வைப்பகக் காப்பாட்சியர் திரு.இரா.ப. கருணானந்தன் தெரிவித்ததோடு, தான் சேகரித்து வைத்திருந்த மைப்பிரதியையும் குறிப்புக்களையும் தந்துதவினார். அவர் அளித்த முகவரியின் துணையோடு செப்பேடு இருக்குமிடம் சென்று மைப்படிகள் எடுத்து வரப்பட்டன.

## அமைப்பு

இச்செப்பேடு 24·5 செ.மீ. நீளமும் 17·5 செ.மீ. அகலமும் உடையது. தலைப்பின் நடுவில் ஒரு துளையுடன் கூடிய இதழமைப்புள்ளது. இதனில் இரண்டு வரிகளாலான முட்டை வடிவ வட்டத்தின் 'நடுவில் ஆலவட்ட கவண்டன் பொம்மையகவண்டன்' என்று எழுதப்பட்டுள்ளது. ஒரு பக்கம் மட்டும் 26 வரிகளில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

## காலம்

415 என்று ஆண்டு எழுதப்பட்டுள்ளது. அதனை விடுத்து பின் உள்ள குறிப்பின்படி செய ஆண்டு வைகாசி மாதம் 25-ஆம் தேதிக்குச் சமமான ஆங்கில ஆண்டு 13-5-1654 சனிக்கிழமை.

## செய்தி

திருமலைநாயக்கர் திண்டுக்கல் பகுதிக்கு வந்திருந்த போது ஒன்பது ஊர் கூழப்ப நாயக்கனிடமும் சீவிலிசிறகைச் சேர்ந்த ஆலவட்டகவண்டன் (மகன்) பொம்மையக்கவண்டன் தங்கள் இரவிகுல சாதியில் தனக்கு முதல் அதிகாரம் தரவேண்டுமென்று கேட்க அதனை ஏற்று கூழப்ப நாயக்கன், மன்னர் திருமலை நாயக்கர் இருவரும் அதிகாரம் வழங்கிச் கையொப்பமிட்டுச் செப்பேடு கொடுத்ததைக் குறிக்கிறது.

இதே வருடம் இதே மாதம் 15-ஆம் தேதியில் இதே விபரத்திற்காக இவ்வூர் எண் 1 இட்ட செப்பேடு வழங்கப்பட்டுள்ளது. இச்செப்பேடு 20 தேதியில் அதே விபரத்திற்காக வழங்கப் பட்டிருக்கின்றது. இதில் 'ஒன்பது ஊர்' கூழப்பநாயக்கன் கையொப்பமும் இருப்பதால் மன்னன் கொடுத்த பட்டயத்தைப் பாளையப்பட்டு அங்கீகரித்ததைக் குறிக்கும் பட்டயம் ஆதல் வேண்டும்.

ஆலவட்டக் *
கவண்டன்
பொம்மய
கவண்டன்
றாமசெயம்

1. உ சாயிகு ஞ்ல செபஞ்ல வய்ய[ர]சி மீ உருகு - மதுறாபு
2. ரித் தலத்திலிறுக்கும் றாசமானிய றாயர் ஷத்திரி கறுத்
3. தறாகிய திருமலைநாயக்கறவர்கள் திண்டுக்கல்
4 லு தாலுகாவில் வந்து யெறங்கியிறுக்கும் போ
5. து ஷெ ஆலவட்டக் கவண்டன் வ சீவிலிசெறகு செ
6. பாம்மைய கவண்டன் கூஉற்[1] கூழப்ப நாயக்கற்
7. சமிந்தாறவர்களை[2] டம்பாசாலை மின்னிலக்கே
8. ாட்டை யெங்கை மேடு உள்பட யெங்கள் இர
9. முகுல[3] சாதியில் யேரி யெழுந்து போன பே
10. ற்களை சேக்கிறதை சேத்து தள்ளுறதை தள்ளி
11. கம்பிளி காளாஞ்சி பிடிசெம்பு பாதகாணி
12. க்கை-ருடீ தீவது கறுவது பொங்கல் வயித்து
13. கறுங்கிடாய் வெட்டி சகலஅமுலும் செய்ய
14. வும் யெங்க சாதிக்கி பெரியதனம் யஅ மேடு கெ
15. ாடை தாற வேணுமென்று யிந்தப்படிக்கி தாம்பூ
16. றசாதின பட்டயம் வேணுமென்று ஆலவட்டக் க
17. வண்டன் குறு-உ-[4]பொம்மைய கவ[ண்ட]ன் கேட்டா
18. ன் அந்தப்படிக்கி றாசா உத்தறவு செயிதாற் யிந்த
19. ப்படிக்கி கற்த்தறாகிய திருமலைநாயக்கற் கூ-உற் கூ
20. ழப்பநாயக்கற் திறுக்கறத்தால் கயிஒப்பம் க

---

* இவ்வரிகள் நீண்ட முட்டைவடிவ வட்டத்தினுள் பொறிக்கப்பட்டுள்ளன

1. ஒன்பது ஊர் எனப் படிக்கவும்.
2. ஜமீன்தாரவர்களை என்று படிக்கவும்
3. இரவிகுல என்று படிக்கவும்
4. கூற என்றிருத்தல் வேண்டும்

21. ல்லுங் காவேரி புல்லும் பூமியும் உள்ளவ
22. றைக்கும் ஆண்டுவறவும் யிந்தப் பட்டயம் செயி
23. தவன் திண்டுக்கல்லு வடக்குவாசல் சவால்
24. முனிசுவேலை மீநாச்சி ஆசாரி யிதை ஆறா செ
25. மாறுதன் அடி அளித்தால் மீநாச்சி சொக்கலி
26. ங்கம் கேள்ப்பாற் உ

# 20. பொம்மயக் கவுண்டன்பட்டிச் செப்பேடு-4

## (நாட்டாண்மை அதிகாரம் வழங்கிய செப்பேடு)

**இடம்**

திண்டுக்கல் அண்ணாமாவட்டம் திண்டுக்கல் வட்டம் செம்பட்டியை அடுத்து இவ்வூர் உள்ளது. இவ்வூர் பெரியகுடித் திரு. பொ. பொம்மையன் என்பவரிடம் இச்செப்பேட்டுடன் திருமலை நாயக்கர் காலச் செப்பேடுகள் மேலும் நான்கு உள்ளன. இவை தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அகழ்வைப்பகக் காப்பாட்சியர் திரு. இரா. ப. கருணானந்தன் மூலம் அறியப்பட்டு மைப்படி எடுக்கப்பட்டன. இவர் தான் சேகரித்து வைத்திருந்த மைப் படிகள், குறிப்புகள் முதலியவற்றையும் தந்து உதவினார்.

**அமைப்பு**

இச்செப்பேடு 26 செ.மீ நீளமும் 19 செ.மீ அகலமும் உடையது. தலைப்பகுதியின் நடுவில் ஒரு துளையுடன் கூடிய இதழமைப்புள்ளது. இதனில் இரண்டு கோடுகளால் ஆகிய ஒரு வட்டத்தினுள் 'சயமுத்தி பட்டயம் நிலக்கோட்டை சமிந்தார் கயி ஒப்பம்' என்று எழுதப்பட்டுள்ளது. ஒரு பக்கம் மட்டும் 33 வரிகளாக எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

**காலம்**

செய ஆண்டு வைகாசி மாதம் 15-ஆம் தேதிக்குச் சமமான 3-5-1654 புதன்கிழமை, 415-ஆவது ஆண்டு என்று தொடக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

**செய்தி**

சீவல்சிறகைச் சேர்ந்த 18 மேட்டார்களின் பிரதிநிதிகள் பத்து பேர் ஒன்று கூடி, அவர்களது ஒன்பது குழுக்களுக்கும் பொம்மையக் கவுண்டன் என்பவர் பெரியதனம் செய்வது என்றும், கம்பிளி அதிகாரம் செலுத்துவது எனவும் முடிவு செய்தனர். தாங்கள் செய்த முடிவிற்கு அரசனிடம் ஒப்புதலும் பட்டயமும் பெறுவதற்காகப் பாதகாணிக்கை, பசு, அரிசி, பருப்பு முதலிய பொருள்களுடன் திண்டுக்கல் வந்திருந்த திருமலை நாயக்கரைச் சந்தித்தனர். திருமலைநாயக்கர் மகிழ்ந்து அவர்கள் வேண்டியபடி பட்டயம் செய்து கொடுத்துள்ளார். இச்செய்தியை இச்செப்பேடு தருகிறது.

சயமுத்தி ப
ட்டயம் நில
க்கோட்டை
சமிந்தார் க
யி ஒப்பம்
உ றாமசெயம்

1 உ சாயடு ஸு செயாஸு வய்யாசி மீ யரு-மதுறாபுரித் த

2 லத்திலிறுக்கும் றாசமானிய றாயர் ஷத்திரி திறுமலை நாயக்க
3 றவற்கள் திண்டுக்கல்லு தாலூக்காவில் வந்து யெறங்
4 கியிறுக்கும் போது முன் னிலக்கோட்டை திண்டுக்கல்லு
5 சேகறம் சீவிலிசிறகுல் யிறுக்கும் பெரியதனம் பொம்ம
6 யகவண்டன் ஆலவட்டக்கவண்டன் பொம்மயக்கவண்ட
7 ன் கொடியெப்பக்கவண்டன் பெரிய பொம்மய கவண்
8 டன் கறமலைக் கவண்டன் ஆதியில் சீவிலிசிறகு பொம்ம
9 ய கவண்டன் ஷை பூசாரி வடமலை கவண்டன் நாகதா
10 சய கவண்டன் பழனி முத்துக்கவண்டன் கெப்பய கவண்
11 டன் ஓசினை[1] செயிது யித்தாதி பேற்கள் சம்மதிபட்டு ஒ
12 ப்புதிட்டம் ஒடபடிக்கை[2] செயிது-யஅ-மேட்டாறும் ச
13 ம்மதிபடிக்கி-கூ-கும்புக்கும் மேட்டு பெரியதனம் யஅ கு
14 டைகாறறும் யிந்தப்படிக்கி கம்பிளி காளாஞ்சி பிடிசெம்
15 ம்பு பாதகாணிக்கை-யரு சாதியில் மேடுபள்ளம் ஆந
16 ால் நாநிறுந்து கம்பிளி அதியாறப்படிக்கி தீறுமான
17 ம் செய்யவும் தீவது கறுவது பொங்கல்வச்சு கறுங்
18 குட்டி வெட்டவும் ஆட்டுக்கிடா-அரிசி-க- பறுப்பு நா-
19 பால்ப்பசுவு-க-பாத காணிக்கை-உயரு உ சீனிச்சக்கை
20 ர வெத்திலை பாக்கு யிவளவு சாமான் வயித்து றாசாவெ ச
21 ந்திப்பு கண்டாற்கள் நீங்கள் யெந்த ஊறென்று றாச
22 ா கேட்டாற் நாங்கள் திண்டுக்கல்லு சேகறம் சீவிலி
23 ச் செறகுல் யிறுக்கும் பெரியதனம் பொம்மயகவண்
24 டன் யென்று சொன்னான் றசா சந்தோசம் ஆகி ஒ
25 னக்கு யென்ன வேணுமென்று கேட்டாற் யெனக்கு யி
26 ந்தப் படிக்கி தாம்பூற சாதினபட்டயம் வேணுமென்
27 று கேட்டான் அந்தப்படிக்கி உத்தறவு ஆச்சுது றாசா திறுக்
28 க்கறத்தால் கயிஒப்பம் கல்லும் காவேறி புல்லும் பூ

1. யோசனை என்று படிக்கவும்
2. உடன்படிக்கை என்று படிக்கவும்.

29 மியிம் உள்ளவரைக்கும் ஆண்டு வறவும் யிந்(த)ப்பட்

30 டயம் செயிதவன் திண்டுகல்லு வடக்கு வாசல் சவா

31 ல் முனிசு மீநாச்சி ஆசாரி யிதை ஆதாமொறுதன்

32 அடி(த)அளித்தால் மீநாச்சி சொக்கலிங்கம் கே

33 ள்ப்பாற் உ

# 21. சென்னை அருங்காட்சியகச் செப்பேடு-1

**(திசைக் காவல் மானியம்)**

### இடம்

சென்னை அருங்காட்சியகத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள செப்பேடுகளில் திருமலை நாயக்கர் காலச்செப்பேடுகள் இரண்டு உள்ளன. அவற்றில் ஒன்று இதுவாகும்.

### அமைப்பு

இச்செப்பேடு 23 5 செ.மீ நீளமும் 16·5 செ.மீ அகலமும் உடையது. தலைப்பகுதியின் ஓரங்களில் சிறு இதழ்களும் நடுவில் பெரிய இதழ் அமைப்பும் உள்ளன. பெரிய இதழின் நடுவில் சதுரமான துளை உள்ளது. ஒரு பக்கம் மட்டும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட இச்செப்பேட்டில் 26 வரிகள் உள்ளன.

### காலம்


விக்ருதி ஆண்டு ஆனி மாதம் 16ஆம் தேதிக்குச் சமமான ஆங்கில ஆண்டு 14-6-1659 செவ்வாய்க்கிழமை.

### செய்தி


மூணுடைப்பு என்ற கிராமத்தின் திசைக்காவல் பணிபுரியும் பளுத்தாண்டிக் குப்பச்சி அம்பலகாறன் என்பவன் திருமலைநாயக்கரும், கிழவன் சேதுபதி முத்துராமலிங்க துரையும் பள்ளிமடம் வந்திருந்த போது அவர்களைப் பாதகாணிக்கை, சீனி சர்க்கரையுடன் வணங்கிச் சந்தித்தான். அவனது கோரிக்கையைக் கேட்ட அவ்வரசர்கள் அதற்கிணங்க அவனுக்குப் புன்செய், நன்செய் நிலங்களை மானியமாகத் தந்ததை இச்செப்பேடு குறிப்பிடுகிறது.

உ றாமசெயம்


1 விகுறுதி ஸ்ரீ ஆனி மீ ௰௬-மதுராபுரித் தலத்திலிறு
2 க்கும் றாசமாநிய றாயர் ஷத்திரி திறுமலை நாயக்கறவ
3 ற்கள் சீமைபாற்க்க பள்ளிமடந் தாலுகாவில்
4 வந்து றெயங்கி யிறுக்கும் போது கெழவன் சேது
5 துபதி முத்துறாமலிங்க பந்துடையான் தொறை
6 யவற்கள் பள்ளிமடந் தாலுகாவில் வந்து யி
7 றுபேறும் யிறுக்கும் போது பளுத்தாண்டி குப்
8 பச்சி அம்பலகாரன் பாதகாணிக்கை உடெ



பொம்மையக்கவுண்டன்பட்டிச் செப்பேடு - 4



சென்னை அருங்காட்சியகச் செப்பேடு



முன்பக்கம்



பின்பக்கம்

திருக்காந்தீசுரம் செப்பேடு

9 சீனிசக்கரை யிவழவு[1] சாமான் வயித்து றாசா
10 க்களை சந்திப்பு கண்டான்-குப்பச்சி அம்பல
11 காறர் ஒனக்கு யென்ன வேணுமென்று கேட்
12 டாற்கள் யெனக்கு மூணுடப்பு கிறாமத்துக்கு தி
13 சை காவலுக்கு பிஞ்சை மாநிபம் ஒறு-கவு[2]
14 நஞ்சை மாநிபம்-மூணுடப்பு கம்மாயில் ஒறு
15 செயி நிலம் யிந்த மாநிபத்துக்கு தாம்புற ப
16 ட்டயம் வேணுமென்று கேட்டேன் அந்தப் ப
17 டிக்கி உத்தறவு ஆச்சுது யிந்த முணடப்பு கிறாம[ம்] குடுக்கி
18 ற வறுமானம் கட்டுன வீட்டுக்கு ௰௨ தவசம் ௱ மீ
19 காவ குரிணி[3] கழத்திலை[4] குடுக்கிறது காவல்முந்து
20 ன மொதமை குடுத்து வறவும்-யிந்தபடிக்கி திறு
21 மலை நாயக்கறவற்கள் திறுக்கறத்தால் கயி ஒப்ப
22 ம் கெழவன்சேதுபதி முத்துறாமலிங்க தொறை
23 யவற்கள் கயி ஒப்பம்-யிந்தபட்டயம் செயித
24 வன் மதுரை வடக்கு வாசல் மீநாச்சி ஆசாரி-யி
25 தை ஆறா மொறுதன் அடி அளித்தால் மீநாச்
26 சி சொக்கலிங்கம் கேள்ப்பாற் உ

---

1. இவ்வளவு என்று படிக்கவும்.
2. ஒரு காணி ஆகலாம்.
3. மூன்றுமாதத்து க்குகுறுணி என்று பொருள்.
4. களத்தில் என்று படிக்கவும்.

# 22. திருகாந்தீசுவரம் செப்பேடு

## (திருமலைநாயக்கர் நலனுக்கு வழிபாடு)

### இடம்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் வட்டம் ஆழ்வார் திருநகரியின் எதிர்க்கரையில் தாமிரபரணி ஆற்றையொட்டிக் காந்தீசுரம் என்ற ஊர் உள்ளது. இங்குள்ள சிவன் கோவிலில் திருமலைநாயக்கர் காலத்திய இரண்டு செப்பேடுகள் உள்ளன. இவற்றில் ஒன்றைப் பற்றிய குறிப்பினை 1961-62ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் A30ஆவது எண்ணாக மத்திய அரசு கல்வெட்டுத்துறை வெளியிட்டுள்ளது. இச்செப்பேடுகள் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத் தொல்பொருள் அலுவலர் திரு. மா. செந்தில் செல்வக்குமரன், குற்றாலம் அருங்காட்சியகக் காப்பாட்சியர் திரு. சொ. சந்திரவாணன், உதவி இயக்குநர் திரு. ச. ஹரிஹரன் ஆகியோருடைய உதவியால் பார்க்கப் பெற்று மைப்படி எடுக்கப்பட்டன.

### அமைப்பு

இச்செப்பேடு 33.5 செ மீ நீளமும் 15 செ.மீ அகலமும் உடையது. செப்பேட்டின் தலைப்பகுதி இருபக்கங்களிலிருந்தும் நெளிந்து உயர்ந்து நடுவில் அமைந்த இதழமைப்பை உடையது. நெளிவான ஓரப்பகுதியில் வரிக்கோடு அழகுக்காகப் பொறிக்கப்பட்டுள்ளது. முன்பக்கத்தில் இடப்புறம் பீடத்துடன் கூடிய சிறிய சூலம் பொறிக்கப்பட்டுள்ளது. முன் பக்கம் 35 வரிகளும், பின்பக்கம் 22 வரிகளும் காணப்படுகின்றன.

### காலம்

சக ஆண்டு 1559;கொல்லம் ஆண்டு 813;ஈசுவர ஆண்டு ஆவணித் திங்கள் 19ஆம் நாளுக்குச் சமமான ஆங்கில ஆண்டு 19-8-1637 சனிக்கிழமை

### செய்தி

திருமலைநாயக்கருக்குப் புண்ணியமாகவும் வடமலையப்பபிள்ளைக்குப் புண்ணியமாக வும் காந்தீசுவரம் இறைவனுக்குச் சிறுகாலைச்சந்தி வழிபாடு செய்யப்பட்டது. இவ்வழி பாட்டுச் செலவுக்காக இராமப்பய்யனின் ஆணையின்படி, திருவழுதி வளநாட்டைச் சேர்ந்த முனைஞ்சி என்ற மாகாணியின் காணியாளர்களான நாட்டவர்கள் அதே நாட்டைச் சேர்ந்த திருமலைபுரம் என்ற ஊரின் வருவாயினைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு எழுதிக் கொடுத்த செப்பேடு இதுவாகும்.

### செப்பேட்டு வாசகம்

#### முன்பக்கம்

1 உ சகார்த்தம் ௲௫௱௫௰௯ மேல்

2 செல்லா நின்ற கொல்லம் ஆண்டு ௮௱௰௩ ஈசுர வரு

3 ஷ்சம் ஆவணி டம்[1] ய௲ உ தெட்சனாய[ன]த்தி
4 ல் பூறுவபட்சத்து திசமி[2]யும் மூலநட்
5 செத்திரமும் சுபயோக சுபகரணமும்
6 பெத்த நாள் சனிவார நாள் விசுவனாத ந
7 ாயக்கர் திருமலைனாயக்கரயன் ஒத்தூர
8 ப்பட்டி ராமப்பய்யன் நிருபபடிக்கு தி
9 ருவளுதி வளநாட்டில் திருநகரி வடகா
10 ந்தீசுரம் சுவாமி ஏகாந்தலிங்கத்துக்கு
11 சிறுகாலசந்தி கட்டளை நெய்வேத்தியத்
12 துக்கு திருமலை நாயக்கரயனவர்களுக்
13 கு புண்ணியமாகவும் வடமலையப்ப பி
14 ள்ளையனவர்களுக்கு புண்ணியமாகவு
15 ம் கட்டளையிட்ட கிறாமமானது அமு
16 ற்தகுண வளநாட்டில் முனைஞ்சி மாகா
17 ணியில் காணியாளர் நாட்டவரோம் சு
18 வாமி காந்தீரம்[3] ஏகாந்தலிங்கத்து
19 க்கு சிறுகால சந்திப்பூசை அவிசேக
20 நெய்வேத்தியத்துக்கு யெங்கள் நா
21 ட்டிலே சேந்த திருமலைபுரத்துக்கு எல்
22 கையாவது கீள்யெல்கை கோமாறனே
23 ரிக்கும் செட்டிகுளம் எல்கைக்கும் மே
24 ற்கு தென்எல்கை சோரங்குளம் வி
25 சையநாராயணம் குட்டைதட்டிப் பா
26 றைக்கும் வடக்கு மேல்எல்கை பதக்க
27 த்து எல்கைக்கும் சிறுகோடன்குளம்
28 பெரியகோடன் குளம் எல்கைக்கும்

---

1 மாதம் என்று படிக்கவும்

2 தசமி என்று படிக்கவும்

3 காத்தீசுரம் என்று படிக்கவும்

29 கிளக்கு வடஎல்கை பேய்க்குளம் தெக்
30 கு மறுகாலுக்கு தெக்கு ஆக இன்னாங்கு
31 எல்கைக்குள்ப்பட்ட பூமியும் மேல்நோ
32 க்கிய மரமும் கீள்நோக்கிய கிணறும்
33 நத்தமும் நத்தக்கூறும் நஞ்சை புஞ்
34 ச சொற்னாதாயம் ஊத்தப்பாட்டம்
35 பனைங்கடமை உலாவுகாச்சி பலப

## பின்பக்கம்

36 ட்டடை தறிக்கடமையுஞ் சிறுகாலை
37 சந்திக் கட்டளைக்கு காந்தீசுரம் சு
38 வாமி ஏகாந்தலிங்கத்துக்கு செம்பி
39 லும் சிலையிலும் வெட்டி ஆண்டனுப
40 வித்துக் கொள்வாராகவும் இந்த புண்
41 ணியத்தை பரிபாலினம் பண்ணின
42 பேருக்கு சாலோ சாமீப சாரூச சா
43 யத்தியம்[1] பெத்து வாள்வராகவும் இந்த
44 தன்மத்துக்கு ஆராகிலும் ஒருவர் இடை
45 கூறு பண்ணின பேர்கள் கெங்கைக் க
46 ரையிலே காரம்பசுவைக் கொன்ற
47 தோசத்திலே போவராகவும் இப்படி
48 க்குச் சம்மதித்து காந்தீசுரம் சுவாமி
49 ஏகாந்தலிங்கத்துக்கு சறுவமானிப ப
50 ட்டையமாக எழுதிக்குடுத்தோம் முன
51 ஞ்சி காணியாளரோம் இப்படிக்கு அம்
52 மையாண்டார் எழுத்து இப்ப[டி]க்கு
53 மாத்தாண்ட முதலியார் இப்படிக்கு
54 அனைஞபெருமாள் இப்படிக்கு உதிமா
55 லை இப்படிக்கு இந்தப் பட்டையம் எழு
56 தினேன் தனமருட்டி முதலியார் இப்
57 படிக்கு அணைஞ்ச பெருமாள் எழுத்து வ

1. சாலோக, சாமீப, சாருப, சாயுச்சியம் என்று படிக்கவும்.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
Acc No. — — —
Date — — —
MADRAS-28.

# 23. திருமுருகன்பூண்டிச் செப்பேடு

## இடம்

கோவை மாவட்டம் திருமுருகன்பூண்டி சிவன் கோயிலில் பணிபுரியும் குருக்களிடம் நான்கு பட்டயங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று திருமலை நாயக்கர் காலத்தியது. இச்செப்பேடு திருமலைநாயக்கரின் கீழ் ஆட்சி செய்த அளகாத்திரிநாயக்கன் பெயரில் வெளியிடப்பட்டது. கோவை தொல்பொருள் ஆய்வுத்துறை பதிவு அலுவலர் திரு. இரா. பூங்குன்றன் அவர்களது தகவலின் பேரில் இச்செப்பேடு மைப்படி எடுக்கப் பட்டது.

## அமைப்பு

இச்செப்பேடு 46·5 செ.மீ நீளமும், 29 செ.மீ அகலமும் உடைய பெரிய அளவினதாகும். தலைப்பகுதியின் நடுவில் துளையேதுமில்லாத இதழமைப்புள்ளது. இதன் முன் பக்கம் அழகுபடுத்திய வட்டத்தினுள் ஒருவர் எல்லாப் பணிக்கருவிகளுடன் ஒரு பனை மரத்தின் மீது ஏறுவது போலவும், பின்பக்கம் ஒரு வில் அம்பும், அவற்றின் இருபுறமும் சூரியன் சந்திரன் படங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. செப்பேட்டின் இறுதியில் பாம்பு, உடுக்கை, சூலம், கபாலம் ஆகியவற்றைத் தன் நான்கு கைகளில் கொண்டுள்ள காளியின் உருவமும், ஒரு சிம்மத்தின் உருவமும், ஒரு அடியவர் (பனையேறி) தொழுவது போன்ற உருவமும் காணப்படுகின்றன. முன்பக்கம் 55 வரிகளும், பின்பக்கம் 59 வரிகளும் எழுதப்பட்டுள்ளன.

## காலம்

சாதாரண வருடம் சித்திரைத் திங்கள் 17-ஆம் தேதி. செப்பேட்டில் குறிப்பிடப்படும் கலியுகவருடம் 3003 தவறாகப் பொருந்தாது உள்ளது. இச்செப்பேட்டில் குறிக்கப் பட்டுள்ள காலக்குறிப்புகள் திருமலைநாயக்கர் ஆட்சிக்காலத்தைச் சார்ந்தவையாக இல்லை.

## செய்தி

ஆண்ட சுப்ரமணிய பட்டர் என்பவரை அடக்கமுடையார்கள் என்ற பனைமரம் ஏறுவோர் தங்கள் குருவாக ஏற்றுக் கொண்டதையும், அவர் தங்கள் குலத்தவரிடையேற்படும் வழக்குகளைத் தீர்த்து, தண்டனை வழங்க வல்லவர் என்று ஒப்புக் கொண்டதையும், அவருக்குக் குரு காணிக்கையாக ஒவ்வொரு ஆண்டும் குடி ஒன்றுக்கு ஐந்து பணமும் ஒரு தரகு கருப்பு கட்டியும் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்ததையும் இச்செப்பேடு குறிக்கிறது. இவர்களது குலதெய்வம் புடவாத்தாளாகும். நாடாச்சியம்மை என்றும் குறிக்கப்படுகின்றது. இவர்கள் பரமசிவனால் ஏழு கன்னிகளிடம் உண்டான எழுவரில் மூவரான அடக்கமுடையார் பிரிவினர் என்றும், அடக்கமுடையார் தேவலோகத்தில் பூவெடுத்துப் பால்காவடி கொண்டு சிவனை வழிபட்டவர்கள் என்றும், பேச்சி, நீலி முதலிய பேய்களிடம் சபலம் கொண்டதால் பூலோகத்தில் பனைமரமேறிகளாக மாறினர் என்றும் இவர்கள் தோற்றம்விளக்கப்படுகிறது.

அளகாத்திரி நாயக்கர் காலத்தில் பட்டயம் எழுதப்பட்டுள்ளது. மதுரையில் பட்டயத்திற்குக் கல்வெட்டுப்படியென்று வெட்டியதாகவும் குறிப்புள்ளது.

1 **ஸ்வஸ்திஸ்ரீ** மன் மகாமண்டலீஸ்வரன் அரியதளப்பாடன்
2 ஆரியமோகம் தவிழ்த்தான் ஒட்டிய தளவிபாடன் ஒட்டிய மோகம் தவிழ்த்தா
3 ன் ஆரிலொன்று கடமை கொண்டு அருள் பெரிகி அன்பு கூர்ந்து ஆதுர சாலையும்
4 அந்தணர் வேள்வையும் வேதஒலியும் விளாவர[ா]வீதியும் தபோதனர் மடங்க
5 ளும் தர்ம சாலையும் யிச்சையில் முப்பத்திரண்டரம் விளங்கி யெம்மண்டலம்
6 திரை கொண்டருளிய ராஜாதிராஜன் ராஜபரமேஸ்வரன் ராஜமார்த்தா
7 ண்டன் ராஜகெம்பீரன் ராஜமனோபயங்கரன் கடல் கலங்கினும் காவேரி வ
8 த்திலு மலையலிங்கினும் மனம் கலங்காத தீரன் கண்டநாடு கொண்டு (கொ)
9 கொண்ட னாட்டை(டை) குடாத சொல்லுக்கு அரிச்சந்திரன் அளகுக்கு அனங்கந்
10 அரிவுக்கு அகஸ்தியன் வில்லுக்கு விஜையன் பரிக்கு நகுலன் குடைக்கி கர்னன்
11 போருக்கு பீமன் சாஷ்த்திரத்துக்கு சகாதேவன் அஷ்[வ]பதி கெஜபதி தனபதி ந
12 ர(ரதி)பதியாகிய மதுரை யூறு றத்தன சிம்மாசனத்துக்குடையவனாகிய (அள)
13 அளகாத்திரி னயக்கன் றா(ா]ச்சிய பரிபாலனம் செய்கிரநாளையில் ஆதினா
14 ளையிலே கைலங்கிரிக்கி ஆதிபராகிய[1] பரமசிவன் யெரும்பு கடை யானை
15 முதல் என்பத்தி னான்கு நூறாயிரம் ஜீவாற்றுமா[2]க்களுக்கும் படியளந்து
16 வறுகுரபோது யிமோற்கிரி[3]க்கு வடபால் னயமசாரண்ணிய[4]த்தில் ஆ
17 திசேஷனஞ்சிலுதித்த[5] கன்னிகளை பரமசிவன் அக்கினி ரூபமாயி பி
18 ரவேசிக்கவும் அந்த எ-கன்னிகள் வயத்தில் செனித்து வனமாள(ப்)ப

1. அதிபர் என்று படிக்கவும்
2. ஜீவாத்மா என்று படிக்கவும்
3. இமயகிரி என்று படிக்கவும்
4. நியமசாரண்யம் என்று படிக்கவும்
5. ஆதிசேஷன் நஞ்சில் உதித்த என்று படிக்கவும்

19 ட்ட பத்திரகாளி கிறுபையால் வளர்ந்து அடக்கமுடையாறாகிய னா
20 டாதி நாடான், நாட்டுவன், மதுரையாந் பேரரமுடையராகிய கோனா
21 டன், சங்கணி, கொங்கன் யிவர்களுக்கு தலைவனாகிய யேனாதி யென்றும்
22 யிந்தப்படிக்கி-எ-பேறுக்கும் பேர் கொடுத்து சகல வித்தையும் கற்பித்து
23 வேண்டிய வரங்களும் பெற்றுக்கொண்டு யிறுக்க அப்போது பரமசிவன்
24 யிவாளுடைய சவுகரியங்களை அரிந்து மகாரிஷியை காணாமரம் வ
25 ளைத்து கள்ளிரக்கி பூணாரம் பூணும்படிக்கு திறுப்பாக்கடலில்[6] தேவர்கள் மு
26 னிவறும் அமுர்தம் கடைய னாகன் நஞ்சு கக்கவும் நம்பிக்கைவுள்ள அ
27 ய்யன் பிரந்தார் அப்போது கன்னிகளுடைய கற்பு நிலையானது க
28 யலையாகிய மத்துவளியாக ஒரு விருஷமாக வெளிப்பிரப்படவும் ப
29 ரமசிவன் கண்டு சிறுநகைகொண்டு கைலைக்கும் வடபால் வளமையாயி
30 றுக்க சொல்லி பின்பு-எ-பேரையும் அளைத்து அடக்க முடையார்க்கு தின
31 சிறிகிக்கி[7] பூங்காவனத்துக்கு போய் புஷ்பங்களெடுத்து கொண்டு கல்பக வி
32 ருக்ஷதை கையால் தட்ட தலைசாய்த்து கொடுக்கும் தீன்பாலை வாங்கி கா
33 விடிக் கட்டிக் கொண்டு ஆராதனைக்கி குடுத்து வரும்படி கட்டளையிட்டு பேரரமு
34 டையாரை பூலோகத்துக்கு போக கட்டளையிட்டார் அடக்கமுடையார் பர
35 மசிவன் கட்டளைபடிக்கு நடந்துகொண்டு சிலகாலம் பணிவிடை செ
36 சய்து வர்குரபோது ஒருனாள் பூங்காவனத்தில் புஷ்ப்ப ஜாதிகளெடு
37 த்துக்கொண்டு பாலிரக்கி காவிடி கட்டிகொண்டு அடக்கமுடையார் வ
38 ரவும் பத்திரகாளி பணிவிடை பெண்களில் பேச்சி, அலங்காரி, அர
39 சி, நீலியென்னும் ச மோகினி பேய் பெண்கள் திருமஞ்சண மெ
40 டுத்து கொண்டு எதிர்படவும் அடக்கமுடையார் கண்டிச்சி[9]க்கவும்
41 பெண்களும் யிச்சை வலையிலகப்பட்டார் அப்பவே அடக்க முடை
42 யார் கொண்டு வந்த பாலும் தொவைந்து மலர்ந்து போகவு
43 ம் யிந்த பெண்கள் கொண்டு வந்த திருமஞ்சணங் கருத்து மலரும் அலர

---

6 திருப்பாற்கடலில் என்று படிக்கவும்
7 தினசரிக்கு என்று படிக்கவும்
8 தீம்பாலை என்று படிக்கவும்
9 கண்டு சிரிக்கவும் என்று படிக்கவும்

44 வும் காப்பு அளிந்ததை[10] காளிகாதேவி பரமசிவனுக்கு அரிவிக்க ஞானக்கண்
45 வளியாலிவர்களுடைய யிச்சையும் மாசாபாசமும் அரிந்து யினிமேல்
46 யிவடத்துக்கு யோக்கியமில்லை யென்று நயமிசாரணியத்தில்-ச-பேய்
47 பெண்களயை ச பேர்க்கு பாணிக்ரஹம் செய்து அன்னக்கொடி அனுமக்கொ
48 டி கறுடகொடி சிங்ககொடி புலிக்கொடியும் கட்டுசேது விருதும் கட்டா
49 ரி கேடயம் யெரியம்பு சூரி பறுசு[11] வில் வளதடி சக்கரமும் வெள்ளைக்
50 கொடை வெஞ்சாமரம் மகரதோரணம் பஞ்சாங்கறாயன் மேல்க
51 ட்டு பகல் தீவட்டியும் கட்டு சேத்து-மஅ-வகை மேள வாத்தியத்துடனே பூ
52 லோகத்துக்கு போகும்படியாயி பரமசிவனும் காளிகாதேவியும்
53 அப்பனை குடுக்க அப்போது அடக்கமுடையாராகிய-ச-பேறும் வும
54 யவளாகிய[12] பத்திரகாளியெயும் சதாசிவனெயும் வலம்பிரியாயி[13] சு
55 த்தி வந்து தெண்டநிட்டு கைகட்டிகொண்டு யெங்களை பூலோகத்

## பின் பக்கம்

56 துக்கு போகும்படி விடைகுடுத்தது ஸரிஏ[14] பேரரமுடயாரை முன் அ
57 னுப்பினீர்களே யினி எங்களுக்கு காணி பூமியும் குருவும் கொலதேவ
58 மும்[15] எங்களுக்கு ஜீவனமும் எங்கே யென்று கேள்க்க பரமசிவன் கிறுபை
59 ப கூர்ந்து சரவணையிலுதித்த ஆண்டவரை ப்ரணவத்தால் தமது வாக்கு
60 னாலே திருக்கடையூரில் சிவத்துஜகுலத்தில் யெஜுர்வ்வெத போதாய
61 ன ஸ்தேத்திரத்தில்[17] மாற்கண்ட கோத்ரம் ஆண்டசிவ சுப்ரமண்ய
62 பண்டிதர்க்கு பரமசிவனாக ஒபதேசித்து அடக்கமுடையாறாகிய-ச-பேறுக்கு
63 ம் ஒபதேசம் செய்வித்து ஒங்களுடைய வம்முஷத்துக்கு குருவாகிய ஆண்
64 டசிவசுப்ரஹ்மண்ய பண்டிதரென்று விடைகுடுக்க பரமசிவன் க[ா]
65 ளிகாதேவி முன்பாக வுடலுயிறாவி[16] பொருள் மூன்றும் குருவுக்கு தாரைவார்
66 த்தார்கள் ஜீவனத்துக்கு கல்ப்பக விருக்ஷத்தை அளைத்து பூலோகத்திலன்ப
67 த்தாருதேசமும் விளங்கச் செய்து பத்தரகாளி சாபத்தால் ஏரியோங்கும்
68 திருமேனி என்றும் பூலோகத்துக்கு கல்பபனைமரமென்றும் பேரிட்டு சந்தி

10 அழிந்ததை என்று படிக்கவும்
11 பரசு என்று படிக்கவும்
12 உமையவளாகிய என்று படிக்கவும்
13 வலப்புறமாக என்று பொருள்
14 சரியே என்று படிக்கவும்
15 குலதெய்வமும என்று படிக்கவும்
16 சூத்திரத்தில் என்று படிக்கவும்
17 உடல் உயிர் ஆவி என்று படிக்கவும்

69 ரனை வாள[ா]கவும் பூக்கொடலையே அரைபொட்டியாகவும் வாடாத மாலை
70 யாகிய முப்புரிநூலே கயறாகவும் காளியுடைய பாதச் சிலம்புகள் கயறா
71 கவும் கை திண்டு முறுக்கங்கோலாகவும் கமண்டலம் அமுர்த கலசமாகவும் கு
72 டுத்து அந்த விருக்ஷத்தில் அமுர்தம் கலியுகத்தில் கள்ளென்று கூவும் மானிடர் கொ
73 ள்ள மவுனங் காணுமென்று அதை ஏரி யெரக்கி வந்து பாகம் செய்து கருப்புக்க(ா)ட்டி
74 யாக்கி கோவில் கொளம் பிள்ளை பெற்றவர் அம்மை விளையாட்டு முதலான தற்
75 ம்மங்களும் ஒங்களைச் சேருமென்றும் ஓலை சறஷ்பதி விலாசமாகவும் புறாண முத
76 லானதும் விளங்கும்படி வரங் கொடுத்து கொலதெய்வமாகிய புடவாத்தாளா
77 கிய நாடாச்சியம்மையேய் கொள்ளதூரைய்யனும்[18] நம்பிக்கையுள்ள அய்யநெ
78 யும் பத்திரகாளியெயும் குருவாகிய ஆண்ட சிவஸுப்ரஹ்மண்ய பண்டிதறெயும்[19] முன் பூலோக
79 அனுப்பி பின் யிவாளுக்கு மதுரை வளனாடர்களென்றும் சோளவள நாடாதநென்
80 றும் கலிகால சோளனாடாதி யென்றும் சீர்கொண்ட மதுரை பாண்டிய நாடானெ
81 ன்றும் பேர் கொடுத்தும் மதுரை மாநகரத்துக்கு சகல விறுதுகளுடனேயும் நாட்டதிகாரி
82 கள் திறாவடதேசம் முதலும் கொங்கேளும் தெரிசித்து மீனாட்சி சொக்க நாதரையும்
83 தெரிசித்து காணிபூமி பட்டம் பரிவட்டம் பெற்று கொண்டு யிப்படி அதிக(ா)ரம் செ
84 ழுத்தி வரும் நாளையில் கலியுக சகாப்தம்: ஙசூங(க்கு)மேல் செல்லானின்ற·சா
85 தாறண ஹு சித்திரை மீ ௳ தேதி சுக்கிரவாரமும் பஞ்சமியும் திருவோண ந

18 கொள்ளத்தூர் ஐய்யன் என்று படிக்கவும்

19 பண்டிதரையும் என்று படிக்கவும்

86 க்ஷேத்ரமும் வஜுூநாமயோரமும் ஸாலவாகருணமும்[20] கூடிய சுபதினத்தில் மது

87 ரை மாநகரத்திலுள்ப்பட காணிபூமி பெற்று தமது குருவாகிய சுப்பிர மன்னியறும்

88 சுகமே யிறுக்க நாடாள(னு)டைய வயற்றில் ௪ லச்சத்தி[21] எண்பது நா[லா]யிர

89 ம் பேர் பிள்ளைகள் ஜெனித்து எல்லவங்கும் ஒம்முகப்பட்டு[22] மார்க்கண்ட குலாதிபநா

90 கிய ஆண்டசிவசுப்பிரமணிய பட்டரிடத்தில் தீஷை திருமுடி செய்வித்து கொண்

91 டு புத்திர பவுத்திர பாரவரைக்கும் வுடலுயிறாவி பொருள் மூன்றுங் குருவுக்கு தாரை

92 வாத்து குடுத்து குருகாணிக்கை ஷூ பிரிதியில் குடி க-க்கு திருவால்-ரு-பனமு[23] ஒரு தரகு

93 கருப்புகட்டியும் குடுத்து கொண்டு யெங்கள் குலத்தில் ஞாயம் வளக்கு[24] யெப்பேர்பட்ட

94 தும் குருக்கள் முன்பால் தீர்த்து கொள்வோமென்றும் குருக்களிட்ட தெண்டினை

95 அபறாதம் குத்தசத்தம் யாபதுக்கும் ஒள்ப்பட்டிருப்போ[25] மென்று தா(ம்) பிரசாசனமும் யெ

96 ளுதி வய்த்து குடுத்து மீனாட்சி ஸன்னதியில் கல்வெட்டும் போட்டு கொங்கில் ஷை(கா)

97 த்தபுரியில் குறுக்களுக்கு மான்னியமும் விட்டுக் கொண்டு யிருந்த பேர் மதுரை மாந

98 கரம் பட்டம் பொன்னரங்கனாடன் யிலங்கைய் நாடதிவல்லர் காநட்டா

---

20 வஜுூநாம யோகமும் ஸாலவா கரணமும் என்று படிக்கவும்

21 நாலு லட்சத்து என்று படிக்கவும்

22 எல்லாரும் ஒருமுகப்பட்டு என்று படிக்கவும்

23 'பணமும்' என்று படிக்கவும்

24 நியாயம் வழக்கு என்று படிக்கவும்

25 யாவதற்கும் உள்ப்பட்டிருப்போம் என்று படிக்கவும்

99 த்தன் மதுரை வள னாடாக்கள் யிப்படி -ச- பட்டமும் கொண்டு முகப்புக் கதிகாரி
100 சிலம்பர் முகபன் கந்தசாமி முகபன் திருவெளுதி முகபன் அளக முகப்பன் வே
101 ல முகபன் விலங்க முகபன் காளிமுகபன் அம்மையடி முகபன் பொதிய முகபன் பொ
102 ங்காளிமுகபன் பொன்னரங்கனாடான் சின்னதம்பினாடான் செங்காளி முகப
103 ன் பெரிச்சி முகபன் சொக்கலிங்க னாடான் கொங்(க) முகபன் யிருள முகபன் மச்ய முகப
104 ன் பள்ளிக்குடத்தர் முகபன் சிவனடி மூப்பன் பச்சை மூப்பன் றாவுத்த முகபன் வெள்
105 ளபள்ளி மூப்பன் யிப்படி நாங்களெல்லவரும் சம்மதப்படிக்கி றாஜஸ்ரீ சேரன்
106 சோளன் பாண்டியன் சொக்கலிங்க னாயக்கர் தும்பிகாயினாயக்கர்[26] முன் பாக யெழு
107 திய தாம்பிரசாஷணம் யிந்த தருமத்துக்கு யாதாமொறுவர் வெட்டை சொல்லால் ஸ
108 காதம் செய்து அளிவு செய்த பேர்கள் காசி கெங்கையில் காறாம் பசுவைக் கொன்ற பாவ(த்)
109 தில் கடவதாகவும் யிந்த தருமம் வளுவாமல் நடந்து வந்த பேருக்கு மீனாக்ஷி சொக்கநா
110 தரு மதுறாபுரி வேம்படி மூர்த்தியும் பத்திரகாளி நம்பிக்கையுள்ள அய்யனும் தன் கனக
111 வஷ்து வாகன சந்தன புத்திர பாக்கியம் கொடு(த்)து லக்ஷிப்பார்கள்[27] யிதுக்கு சாக்ஷி
112 பத்திரகாளி நம்பிக்கையுள்ள அய்யனும் மீனாக்ஷி சொக்கநாதர் சந்திர சூரியர்
113 சாக்ஷியாக வைத்தெளுதிய சிலாசனம் னாடான னாட்டு வன்னாடாந் மதுரை யாந்
114 கை ஒப்பிதம்

---

26 தும்பிக்கை நாயக்கன் என்று படிக்கவும் (தும்பிச்சி நாயக்கனைக் குறிப்பதாகும்)

27 ரட்சிப்பார்கள் என்று படிக்கவும்

# 24. சித்தரேவுச் செப்பேடு

## (காணியாட்சிப் பட்டயம்)

**இடம்**

திண்டுக்கல் அண்ணா மாவட்டம் திண்டுக்கல் வட்டம் சித்தரேவு என்ற சிற்றூரில் இச்செப்பேடு இத்துறைப்பதிவு அலுவலர் திரு மா. சந்திரமூர்த்தி அவர்களால் கண்டறியப் பட்டது. 19, 20-9-1992-இல் மதுரையில் நிகழ்ந்த மாவட்டத் தொல்லியல் கருத்தரங்கி அவரால் இது குறித்து ஒரு கட்டுரையும் படிக்கப்பட்டது.

**அமைப்பு**

இச்செப்பேடு 29 செ.மீ நீளமும், 13 செ.மீ. அகலமும் உடைய செவ்வக அமைப்பில் உள்ளது. தலைப்பகுதியின் நடுவில் இதழமைப்பும் அதில் துளையும் உள்ளன. முன்பக்கம் 17 வரிகளும் பின்பக்கம் 8 வரிகளும் பொறிக்கப்பட்டுள்ளன.

**காலம்**

தமிழ் ஆண்டு 'விய'வும் ஐப்பசி மாதமும் குறிக்கப்பட்டுள்ளன. தேதி கிழமை ஆகியவை குறிக்கப்படவில்லை. திருமலை மன்னர் ஆட்சிக் காலத்தைக் கொண்டு பார்க்கை யில் இவ்வாண்டும் மாதமும் கி.பி. 1646 அக்டோபரில் வருகின்றன. எனவே இச்செப்பேட்டின் காலம் 1646 - ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எனலாம்.

**செய்தி**

வரதராசப் பெருமாள் கோயிலில் பாதகாணிக்கை கொடுத்து அர்ச்சனை செய்து வந்த திண்டுக்கல் அதிகாரம் அனந்த நாரணய்யன் பூச்சிதாதன் மகன் ஸ்ரீராமதாசரிக்கு திம்மப்ப சமுத்திரத்தில் காணியாட்சி கொடுக்கப்பட்டது. இது அறுபது காணி வட்டத்தில் இருந்த 10 செய் அளவு நிலமாகும். இதன் எல்லைகள் கூறப்பட்டுள்ளன.

**செப்பேட்டு வாசகம்**

1 ஸ்ரீ வரதராசர் சகாயம் விய வருஷம் அற்பசி மாதம் திருமலை நாயக்கர்
2 காலத்தில் திண்டுக்கல்லதிகாரம் அநந்தனாரணய்யன் பூச்சித
3 ாதன் மகன் ஸ்ரீ ராமதாசரிக்கு காணியாட்சிப் பட்டயங் குடு
4 த்தபடி வரதராசப் பெருமாளுக்கு ஸ்ரீபாதகாணிக்
5 கையுங் கொடுத்து யிவர்களற்சனை செய்து வந்த
6 தினாலே யிவர்களுக்கு திம்ம(ப்)ப(ப) சமுத்திரத்தில் அ

7 ங்கய கண்ணம்மை கண்ணாற்றுக்கு கீழ் தான்தோணி
8 யீசுவரன் கண்ணாற்றுக்கு மேர்(கு) முக்ஷிசுரக்கு வடக்கு கல்லாக
9 மடைக்கு தெற்கு யிதனுள் அறுபது காணி வட்டத்தில் பத்து
10 ச் செய்யும் பெரியகோம்பையில் குன்றுவனோடைக்கு
11 கிழக்கு புல்லுப்பாதைக்கு தெற்கு புஞ்சையில் அறுகலமும் மாரி
12 லொரு விலக்கும் பதக்கு நெல்லும் சிறு தானியத்திற்கும் பத
13 க்கு வசமுமாண்டு கட்டு கட்டளை யிட்டோம்
14 சன்னதி நந்தாவிளக்கு நெய்விலைக்கு எருதுக்கு ரண்
15 டு மாப்பணமும் எண்வகைப் பலரையும் சம்மதி
16 செய்து கட்டளையிட்ட படியினாலே யிந்த
17 ப்படிக்கி சிரீராமதாசரி வங்கிஷ பாரம்பரிய

## பின் பக்கம்

18 மாக அனுபவக்கிரதினால் திரிகாலமும் பூசை செய்து
19 சுகமே யிருப்பாராகவும் யிந்த தருமத்துக்கு யிடறு செய்
20 தவர் காசியில் காராவை பிராமணனை குருவைக் கொன்ற
21 தோஷத்தில் போவாராகவும் யிந்த தரும பரிபா
22 னஞ் செய்தவர்கள் அஷ்ட்டாசுரி[ய]ம்[1] பெற்று
23 யிருப்பராகவும் யந்தபடிக்கு அனந்த னாராயணன்
24 ஸ்ரீராமதாசரிக்கு தாம்பிரசாதனங் [கா]க்ஷி குடுத்தோம் யிதற்கு சாட்சி
25 ஆகாசவாணியும் பூமாதேவியும்

---

1 அஷ்ட ஐஸ்வர்யம் என்று படிக்கவும்

# 25. ஒ. கோயில்பட்டிச் செப்பேடு

## (தேவாங்கச் செட்டியார்கள் சமூகப் பட்டயம்)

### இடம்

காமராசர் மாவட்டம் சாத்தூர் வட்டம் சங்கரலிங்கபுரம் அருகில் உள்ள ஒ. கோயில் பட்டி பச்சிப்பிலி பட்டத்து பட்டக்காரர் திரு பெ. ரா. ம. நடராசன் செட்டியார் என்பவரிடம் இச்செப்பேடு உள்ளது. தொல்பொருள் அலுவலர் திரு சொ. சாந்தலிங்கம் இதனை அறிந்து படித்துக் 'கல்வெட்டு' காலாண்டிதழ் எண். 32-இல் கட்டுரையாக வெளியிட்டுள்ளார். அவரிடமிருந்து செப்பேட்டின் படி பெறப்பட்டு இங்கு பதிப்பிக்கப்படுகிறது.

### அமைப்பு

26 செ.மீ. நீளமும் 22 செ.மீ. அகலமும் உள்ள இச்செப்பேட்டின் தலைப்பகுதி ஐந்து இதழ் வடிவ வளைவுகளைக் கொண்டுள்ளது. முன்பக்கம் 46 வரிகளும் பின்பக்கம் எட்டு வரிகளும் உள்ளன. எழுத்துக்கள் சீரற்றும் பிழைகளுடனும் உள்ளன. முன் பக்கம் சூரியன் சந்திரன் உருவங்கள் பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றன.

### காலம்

சகாப்தம் 1513-க்கு நேர் கர ஆண்டு ஆடி மாதம் 10-ம் தேதி குறிக்கப்பட்டுள்ளது சக ஆண்டும் தமிழாண்டும் பொருந்தி வருகின்றன ஆனால் திருமலை நாயக்கர் ஆட்சிக் காலம் இவ்வாண்டில் வரவில்லை. சகம் 1573 என்றிருந்தால் பொருந்தி வருகின்றது. இப்படி எடுத்துக் கொண்டால் கி.பி. 1651 ஜூலை மாதமாக இதன் காலத்தைக் குறிக்கலாம்

### செய்தி

முதனூறு, பெனுகொண்டா, படைவீடு, தாராபுரம் முதலிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட செட்டி குலத்தினைச்சேர்ந்த மதுரை, திருமங்கலம் மற்றும் இன்றைய காமராசர் மாவட்டத்தில் வெம்பக்கோட்டை, தாயநேரி உள்ளிட்ட 14 ஊர்களில் உள்ள இச் சாதியார்கள் கூடி, திம்மி செட்டி, காரமல்லி செட்டி ஆகிய இருவருக்கும் அளித்த சிறப்பினைக் குறிக்கிறது செப்பேடு.

திம்மிசெட்டியும் காரமல்லி செட்டியும் சேர்ந்து, சாதி வாரியாக வசூலித்தபொன் 7000. திருமணவரி மற்றும் பிற இனங்களில் வசூலித்த பொன் 5400. இவையனைத்தையும் கொண்டு மதுரைச் சொக்கநாதருக்குக் கட்டளை ஏற்படுத்தி அக்கோயிலில் கல்வெட்டுவித்து நற்பணி புரிந்தமைக்காக, அவ்விருவர்க்கும் குற்ற சட்டம் நிர்வகிக்கும் உரிமையையும், கோயிலில் பஞ்சாட்சரம், பாக்கு, வெற்றிலை, சந்தனம் ஆகியவை முதலில் பெறும் மரியாதையினையும் வழங்கியதை இச்செப்பேடு தெரிவிக்கிறது. மேலும் இருபிரிவுகளாக இருந்த இச்செட்டியார்கள் இனி ஒரே குழுவாக (இருமுடியும் ஒரு முடியாக கூடி) இருக்க முடிவு செய்த செய்தியினையும் இச்செப்பேடு தெரிவிக்கிறது.

செப்பேட்டு வாசகம்

சவுண்டீ
சுபரி ரா
மலிங்க
ம் துணை

1 ஸ்ரீ றிசக்ற[1] முதனூரு பினைக் கொண்ட[2] படைவீடு முத
2 லாந தாராபுரம் தாயிஷ்தழம் ஸ்ரீ மதுரைத் தழத்தில் பிறு
3 தீ யிசுபறனாகிய வீரசிம்மாசனத்தில் யெழும்தருளிய மகா
4 றாய பிறுவிடைய தேய்வ மகாராயரர்[3] கண்டிய பிரதாபராயர்
5 மல்லிகாற்சுனராயர் அச்சுதராயர் நரசிங்கராயர் ஆல
6 த்தராயர் கட்டாரி சாளுவமகாராயர் சீறங்ராயர்[4] ஸ்ரீ மக[ா]தேவ
7 ராயர் பிறிதி[வி]ராச்சியம் பரிபாலினம் பண்ணியருழ நி[ன்]றகாலத்தில்
8 ராயர் ராணுவத்துக்கு கறுத்தனாகிய விசுவநாத நாயக்கர் கிஷ்ட
9 ணப்ப நாயக்கர்[5] வீரப்ப நாயக்கர் திருமலை நாயக்கர் யருளா
10 நின்ற காலத்தில் சாலியவாகன சகாற்தம் ஆண்டு ௲ருளயக்கு
11 மேல் செல்லா நின்ற கற வரு[ஷம்] ஆடி மீ 10 தேதி தாயநேரித் தல
12 த்தில் பெரியவர்கள் முன்பாகத் தண்டிய திம்மிசெட்டியாறுக்கு கறமல்
13 லி செட்டிக்கும் சாதனப் பட்டயம் குடுத்தபடி தாயநேரி மல்லி செட்டி
14 யும் உம்மனப்பட்டி துப்பிலி சின்னமல்லி செட்டியும் அரசனப்பட்டி தி
15 ம்மி செட்டியும் பிள்ளையார்நத்தம் சங்காரப்பன் செட்டியும் வேழம்பூரு மு
16 த்தி செட்டியும் காரைக்கண்ணி கஞ்சலக்குண்டம் கணக்கன்செட்டி
17 யும் கருப்பூரு மல்லி செட்டியும் மீஞ்சில்த் திம்மி செட்டியும் வெம்பா

1 ஸ்ரீசக்ர வாக இருக்கலாம்
2 'பெனுகொண்டா' என்று படிக்கவும்
3 பிரபுட தேவமகாராயர் என்று படிக்கவும்
4 சீரங்கராயர் என்று படிக்கவும்
5 கிருஷ்ணப்ப நாயக்கர் என்று படிக்கவும்

க்கோட்டை முத்திசெட்டியும் கப்பல் சவுண்(டு) செட்டியும் கரிவண்ட . . .
ட்டியும் மதுரைத் தலத்திலுள்ள ராமன் பெத்தவாடசெட்டியும் சு
ண்ட நத்தத்தில் யிட்டலப்பெத்த வாடனசெட்டியும் திருமங்(க)லத்து சுரை
க்காயறகி செட்டியும் உள்ப்பட்ட சாதியாரெல்லாரும் குடிதண்டியா
த தம்மி செட்டியாயும் காரமல்லி செட்டியும் சாதிவரி தட்டி விச்சு[6]
சொக்கநாத சுவாமி சன்னதியில் சசாதம்மு[7] வெட்டிப்பெ[ா]ட்டு வந்
ததுக்காக அதற்குச் சேற்து பெ(ா)ன் 12000. இந்ப் பெ(ா)ன் நில் சாதியார்
இருத்த[8] பொன் 7000 தண்டிய திம்மிசெட்டியும் காரமல்லி செட்டியும்
இருத்தது பொன் 5000 இதுவல்லாமல் தேசம் சாதியாரில் அறுபது
கல்யாண முடங்கியிருந்த படியினாலே அதற்காக ஓடைப்பட்டி கார
றமல்லி செட்டி இருத்தது பொன் 400 ஆக சாதியாருக்காக பொன் 5400
இருத்தபடியாலே சாதியாரெல்லாருங் கூடி திம்மி செட்டியார் க
ாரமல்லி செட்டியாறுக்கும் பூறுவம் பெரியவர்கள் கட்டத்தடு கெ
ாட்டக்கோலுங் கட்டளையிட்டபடிக்கும் நாங்களும் யிருமுடியும் ஒ
றுமுடியாக கூடி யிறுமென்று கட்டளையிட்டோம் பூறுவம் பெ
ரியவர்கள் கட்டளைப் (பிரகாரம்) குற்ற சட்டமுங் கொண்டு பஞ்
சாட்சாரமும் பாக்கு வெற்றிலையும் கொண்டு முந்தின சந்(த)ணமும்
வாங்கிக் கொண்டு நடப்பாராகவும் யிதை யாதாமொறுத்தன் றாள
க்கோடு சொன்னா லவுரிறுத்த பொன்னும் (இட்டு) அவர்களைய்
சாதிக்குப் பிறம்பாய் போட்டு சாதியாரெல்லாருமாகக்
கூடி வீடுவாசல் குளம் பூ வரப் பரித்து அவன் பெண்டுபி
ள்ளையும் அரமனை தகத் தள்ளிக் குடுப்பாறாகவும் இந்த
ப்படிக்கிச் சம்மதித்து சாதனப்பட்டயம் குடுத்தோ

6 தண்டுவிச்சு என்று படிக்கவும்


7 சாசனம் என்று படிக்கவும் 'மு' என்ற தெலுங்கு மொழி இறுதியினை எழுதியுள்ளனர்

8 இறுத்த என்று படிக்கவும்

41 ம் கல்லுங் காவேரியும் புல்லும் பூமியும் சந்திராதித்தர் உள்
42 ளவரைக்கும் ஆண்டு அநுபவித்து வருவாராகவும் யித
43 ற்கு சொக்கனாத சுவாமித் துணை தப்பாது சவுண்டீசு
44 பரி பாதத்தாணை ராமலிங்கர் பாதத்தாணை தப்பாது
45 இதற்கு சாட்சி மேல்படியூறு அச்சுராக் கவுண்டன்
46 கணக்கராமக் கவுண்டன் சூரப்பக் கவுண்டன்
47 பாவலம் கவுலப நாயக்கர் வேழம்பூரு வாண்டத்
48 தேவன் இந்தப்படிக்கி எழுதினவன் தாயநேரி அல
49 ங்காரம் பிள்ளை கையி எழுத்து சவுண்டீசுபரி
50 ராமலிங்கம் துணை. இ . . .




முன் பக்கம்



பின் பக்கம்

தருமத்துப்பட்டிச் செப்பேடு - 1



முன் பக்கம்



பின் பக்கம்

தருமத்துப்பட்டிச் செப்பேடு - 2